www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 10/00

දිනමුරසු වාරමලර්

மார்ச். 19-25, 1995

# வாரமலர்
# தினமுரசு

SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 94



## பேச்சு மேசையில் ஒரு
## இரகசியக் கடிதம்!

கீதை பிறந்தது

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## வெளிநாட்டு உதவி புலிகளுக்கு வருமா?

மகாபாரதம்



அசத்தும் அசாருதீன்

ஸ்போட்ஸ்



இலக்கிய நயம்

## சினிமா உலக ஜிகினாச் செய்திகள்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## அலட்சிய தொலைக்காட்சிகள்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
ஒரு திரைப்படத்தைக் கூட
முழுமையாக இரசிக்க முடியாதளவுக்கு
அரச தொலைக்காட்சி
தமிழுக்கு-தமிழ் பேசும் மக்களுக்கு
'சம அந்தஸ்து' (?!) வழங்கிக் கொண்டிருக்கிறது.

சகோதர தமிழ் பத்திரிகை ஒன்று
முன்பக்கத்தில் செய்தி வெளியிட்டும்
மன்னிப்போ-மனவருத்தமோ
சம்பந்தப்பட்டவர்களால்
தெரிவிக்கப்படாதது ஆச்சரியம்.

சுயாதீன தொலைக்காட்சியும்
சமீபத்தில், வண்ணக் கோலங்கள்
என்னும் நிகழ்ச்சியை
அரைகுறையாக நறுக்கியிருந்தது.

அன்பு நண்பர்
அப்துல் ஹமீட் மிக ஈடுபாட்டோடு
வழங்கும் நிகழ்ச்சி அது.

இவ்வாறான நறுக்கல்கள்
தரமான நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களையும்
ஏனோ தானோ மனநிலைக்கு
இட்டுச் சென்று விடலாம்.

ஆங்கில-சிங்கள நிகழ்ச்சிகள்
என்றால், குறித்த நேரம் தாண்டினாலும்
நறுக்காமல் இரசித்துக் கொண்டிருக்கும்
தொலைக்காட்சி நிர்வாகத்தினர்
தமிழ் நிகழ்ச்சிகள் என்றால்
கண்ட இடத்தில்
கத்திரிக்கோல் வைத்துவிடுகிறார்கள்.

ஒன்று- இரண்டல்ல....
எத்தனையோ உதாரணங்கள்.
எப்போதுதான் திருந்தப் போகிறார்கள்?

'எவர் கேட்பார்' என்ற
துணிச்சலா?
'இவர்களுக்கு என்ன முக்கியத்துவம்'
என்ற அலட்சியமா?

தொலைக்காட்சி நிர்வாகத்தில்
உள்ள தமிழ் பேசுவோர் கூட
எடுத்துச் சொல்ல தயங்குவது-தாம்
எடுத்தெறியப்படாமல் இருப்பதற்கா?

ஓராயிரம் வார்த்தைகள்
இன ஒற்றுமை பேசினாலும்,
வெண்புறாவை அழைத்து
விடிய விடியப் பாடினாலும்
தொலைக்காட்சியை நிறுத்தும் நேரம்
தேசிய கீதம் என்று இசைத்தாலும்
அலட்சியங்களும்,
புறக்கணிப்புக்களும்
தொடரும் வரை
அவையெதற்கும் அர்த்தமில்லை!

பேச்சுக்களைவிட
செயல்களுக்கே பெறுமதி அதிகம்.
இதையெல்லாம் கூட
ஜனாதிபதி வந்து கவனித்துக்கொண்டிருக்க
வேண்டுமா என்ன?

ஜனாதிபதி ஒருவருக்கு மட்டும்தான்
இன ஒற்றுமைக்கு உரம் போடும்
பொறுப்பு இருக்கிறதா?

ஆள்வோர் ஆணையிட்டாலும்
அதனை நடைமுறைப்படுத்துவது
அதிகாரிகளின் கரத்திலிருக்கிறது.

அலட்சிய அதிகாரிகளை-
தூக்கியெறிய வேண்டிய பொறுப்பு
ஆள்வோருக்குமிருக்கிறது.

தமிழ் மொழியை அமுல்படுத்த
ஆணைக்குழு இருப்பதாகத் தெரியும்.
அதன் வேகம்-
ஆமைத்தனமாக இருக்கும்போது
அலட்சியங்கள்
அசுர வேகத்தில் நடக்கின்றன.

"கூரை ஏறிக்
கோழி பிடிக்க முடியாதவன்
வானம் ஏறி வைகுண்டம் போவதா?"
என்று ஒரு முதுமொழி உண்டு.

நினைத்தால் சுலபமாக நிறைவேற்ற
இயலுமான காரியங்களில் கூட
அலட்சியம், செவியில் ஏறாமை
என்ற நிலை இருந்தால்
இதனைவிடப் பெரிய பொறுப்புக்களை
எப்படி நிறைவேற்றுவது?

தமிழுக்கும் அரச கருமமொழி
அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளதாம்.
"அப்படியா சங்கதி?
எங்களுக்குத் தெரியாதே!"
என்று தமிழ் பேசும் மக்கள்
பேசும் நிலைதானே இருக்கிறது.

"மயிலே மயிலே என்றால்
மயில் இறகு போடாது."
என்பதை உண்மை என்று
ஒத்துக்கொள்ள வைக்காதீர்கள்.
புறக்கணிப்பாளர்களுக்கு
நாம் சொல்வது அதுதான்.

□□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## பரிசுத்த கண்கள்!

"உன் கண்கள் புறாக் கண்கள்." (உன் 1:15)

பனிபடர்ந்த துருவப் பிரதேசத்திற்கு ஆராய்ச்சி செய்யப் புறப்பட்டுச் சென்றார் ஒரு விசுவாசி. நீண்ட தொலைவும், ஆபத்துமான அந்த பிரயாணத்திற்கு அவன் மனைவியும் அருமைப் பிள்ளைகளும் கண்ணீரோடு வழியனுப்பி வைத்தார்கள். அவன் கைகளில் தான் அன்பாய் வளர்த்த புறா ஒன்றையும் எடுத்துக் கொண்டு சென்றான்.

பல மாதங்கள் சென்றன. மனித நடமாட்டமில்லாத, செடிகொடிகள் ஒன்றுமில்லாத, குளிர் நிறைந்து உறைந்த பனிப் பிரதேசத்தில் தன் ஆராய்ச்சியை நடத்தினான். தான் உயிரோடிருக்கிறதையும், சீக்கிரமாய் வீடு திரும்பப் போவதையும் தன் மனைவிக்கு அறிவிக்கவிரும்பி ஒரு சிறு கடிதம் எழுதி அதை தன் புறாவின் கால்களில் கட்டி பறக்கவிட்டான்.

புறா உயர எழும்பி பறந்து மிகவும் சிரமத்திற்கு பின்னர், அந்த விசுவாசியின் வீட்டை சரியாக கண்டு பிடித்து செய்தியை குடும்பத்தாரிடம் ஒப்படைத்தது. இதை போன்றே, பரலோகத்திற்கு சென்ற நம் ஆத்ம நேசர் புறாவாகிய பரிசுத்தாவியானவரை நமக்கு அனுப்பினார். நம் நேசர் உயிரோடு இருக்கிறதையும் அவர் சீக்கிரமாய் வரப்போவதையும் அந்த பரிசுத்தாவியானவர் நமக்கு அறிவித்தார். இந்த பரிசுத்தாவியானவராகிய வான்புறா, நமக்குள் வாசம் செய்வதால், அவரது பரிசுத்த சுபாவங்கள் நமக்குள் உருவாகின்றன.

முத்துக்குமார் தில்லை ராஜா-பசறையூர்

# ஆன்மீகம்



## தர்மத்தைப் பற்றி நபியவர்கள்.....

'நிம்மால் பிறருக்கு நன்மை பயக்கும் அனைத்து விடயங்களும் தர்மம்தான்.' என்று கூறும் நபி (ஸல்) அவர்கள் மேலும் கூறுவதாவது: மனிதனுடைய சகல மொழிகளுக்கும் அவன் தர்மம் செய்ய வேண்டும். தர்மம் பொருட்களால் மட்டும் செய்வதன்று. ஒரு மதனிதனை தனது வாகனத்தில் ஏற்றிச் செல்வது, அல்லது அவனுடைய பொருட்களை ஏற்றிச் செல்வது, மற்றும் கலிமா தையிபாவும், தொழுகைக்காக மஸ்ஜித்தை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வொரு எட்டும் தர்மமாகும். பாதை நடுவே கிடக்கும் கல், முள் மற்றும் ஆபத்தை விளைவிக்கும் அனைத்தினையும் பாதையை விட்டு அகற்றுவதும் தர்மமாகும். (ஆதாரம் புகாரி, முஸ்லிம்)

மேலும், எந்தவொரு செலவுமின்றி, எந்தவொரு உடலசைவுமின்றி நாம் மேற்கொள்ளக் கூடிய திக்ர், கலிமா போன்றவையும், ஒவ்வொரு சுப்ஹானல்லா, அல்ஹம்துலில்லாஹ், லாஇலாஹ இல்லல்லாஹ் போன்றவையும் மற்றும் நன்மையை ஏவுவதும், தீமையை தடுப்பதும் தர்மமாகும். பூமி, மலை, இரும்பு, நெருப்பு, நீர், காற்று இவை அனைத்தையும் விட, ஆதமின் மகன் அனைத்து இடது கையறியாமல் வலது கையால் செய்யும் தர்மம் சக்தி வாய்ந்தது, என்று நபியவர்களிடம் அவ்வாறு கூறியதாக, நபி (ஸல்) அவர்கள் அறிவித்ததாக அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். தர்மம் எத்தனை சக்தி வாய்ந்தது என்று மேற்கண்ட பொன்மொழியிலிருந்து நன்கு விளங்கிக் கொள்ளமுடியும். தர்மம் என்பது நாம் எண்ணுமளவில் மஹா பெரிய விடயம் அல்லவே. மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களும் கூட தர்மமே. இதனை எத்துணை இலகுவில் செய்து முடிக்கலாம். இந்த இலகுவான தர்மத்தினை செய்து, நன்மைகளை அடுக்கிக் கொள்ள ரமழான் மாதம் மிகவும் சிறந்ததாகும். இந்த இலகுவான தர்மங்களை நாமும் அதிகமாகச் செய்து நன்மைகளை பெருக்கிக் கொள்வோமே.

செல்வி ஸ்ரீதாயா ஹுஸைன்-தியத்தலாவ.

## கவிதைப்போட்டி இல-91

### பரிசுக்குரிய கவிதை

### தளராதோ இந்த நிலை!

வரன் நிறையைத் தாண்டியல்லோ
வராகன்கள் சீதனமாம்!
காரிகையைக் கரை சேர்க்க
காரோடு மாடிமனை!
நகை நட்டு இத்யாதி
தரகரவர் வார்த்தையிலே
தகரமும் தங்கமதாம்
தளராதோ இந்தநிலை!
தரணியிலே இனிமேலும்!

தர்ஷிக்கா கனகசிங்கம்- கல்லடி/மட்டக்களப்பு.

### கலியுகன்

கல்யாணச் சந்தையில்
கையேந்தும் மணவாளன்
உல்லாசபுரி தேடும்
கலியுகப் பிச்சைக்காரன்

ச.மகாலிங்கம்-வெளிமடை.

### பணமிருந்தால்..

கல்யாணச் சந்தையிலே
காசு பணமிருந்தால்
எண்பதுகளும்
வாங்கலாம்
இருபதுகளை!

ரம்புக்எலையூரான்-கண்டி.

### சந்தை


சந்தையிது சந்தை
கல்யாணச் சந்தை
விந்தையிது என்ன?
விலைநிறுத்து வாங்கும்
வியாபாரச் சந்தை.

வானம்பாடி, கொழும்பு-15.

### வாழ்வு சிறக்குமா

எடைக்கேற்ற பணத்தை
தடையின்றிக் கொடுத்தாலும்-மென்
இடையாளின் வாழ்வு
கொடையாய்ச் சிறக்குமா?

வந்தாறுமூலை-ஜமுனானந்தா.



### கிலோ பல 'ல'கரங்கள்.

பெண்ணைப் பெற்றவர்
பெருமூச்சு விடும்
இம்மண்ணின்
மாங்கல்யச் சந்தையில்,
மாப்பிள்ளை கிலோ
மலையளவு விலையே!

வை.சித்திக்கிருஷ்ணா,பாண்டிருப்பு-1.

### என்று வரும்?

சீதனக் கொடுமையால்
சிறையிருக்கும் பெண்களின்
விடுதலைக்கு வழிகாணும்
விழிப்புணர்ச்சி என்று வரும்?

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-02.

### சீதனம்

"கல்யாணச் சந்தையிலே
கணவனை வாங்குதற்கு
கன்னிகள் கொடுக்க வேண்டிய
கட்டாய வரி."

எஸ்.விஜயா, மன்னார்.

### சீதனம் வேண்டாம்.

வனிதைக்கோர் வாழ்வளிக்க வாலிபனின் சிந்தை
வலியவந்தும் விடுவதில்லை கல்யாண சந்தை
பொன், பொருள் பணமென்று எத்தனையோ திட்டம்
போடுவதால் பெண்ணவள்தான் வாடுகிறாள் நித்தம்
ச்சீ... என்று தனம் தன்னை ஒதுக்கும் ஆண் உண்டேல்
சிறந்த தொரு வாழ்க்கை வரும் தையலர்க்கு நன்றே

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

### கூலி

"தாலி பெண்ணுக்கு
வேலி"
வேலி கட்ட
கூலியா?
பயிரை மேய கூலி
பெண்கள் கேட்டால்
கேலியா?

ஜோதி-வவுனியா.

### திருமணம்.

ஆயிரம் காலத்துப் பயிராம்
திருமணம்- அதைச்
சில ஆயிரங்களுக்காக
பேரம் பேசாதீர்.

எம்.துரையன்
அக்கரைப்பற்று-08.

## கவிதைப் போட்டி இல-94



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 25.03.95

- முகவரி -
கவிதைப் போட்டி இல: 94
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

### காதல் ரொக்கம்.

கண்டதும் காதல் என்பார்கள்
உள்ளதைச் சொன்னால்
சொல்வார்கள் சட்டம்
ஏற்றுக்கொள்-என்றால்
கேட்பார்கள் ரொக்கம்.

மயில்வரதன், காரைதீவு-02.

### காசு

கணவன்
அமைவதெல்லாம்
காசு
கொடுத்த
வரம்.

ஏ.எச்.எம்.மௌஜுத்
ஹிஜ்ராபுரம்.

### சீதனக் கொடுமை

இவர்கள் மணவீடு வரும்போது
ஒரு மணமகனாக வருவதில்லை
ஒரு விலை மகனாக வருபவர்கள்.

எம்.பௌசர், பொலன்னறுவ.

### ஒரே ஒரு கேள்வி.

உணர்வுச் சுள்ளிகளால்
கனவுக் கூடுகட்டி,
கச்சிதமாய் அதற்குள்
காவல் அரணமைத்து,
காத்திருக்கும் எங்களுக்கு
கணவராய் வருவதற்கு,
இத்தனை
கட்டுப்பணமும் சொத்துமா!
ஏன்....?....?
நீங்கள் கடன்காரரோ?

சுப்பிரமணியம் வாணீஸ்வரி-அப்பர் கஹலா.

### நம்பு.

கல்யாணச் சந்தையிலே
கட்டாக பணமிருக்கும்
காலத்தை பாருங்கடா!
சீதனம் இருந்தால் அன்பு
பிறகு என்னை நம்பு எனச்
சொல்லும் மணமகனை
பாருங்கடா!

சேகர் பங்கயற்செல்வம்,
இரட்டைப்பாதை.

### மனித சரக்கு இது!

விலைக்கெட்டா மானிடத்தை
விலை பேசித்தரம் குறைக்கும்;
வெறும் மனிதச் சரக்கு இது!
வேதனை கொள்ளாதே...
வினயமிக்க சோதரியே.

ஞா.சிறிறங்கன், ஏறாவூர்.

### விலைபோகும் ஆண்மை.

ஆண்மை
இப்படி!
அவமானமாய்
விலை போகிறது.

பி.எம்.எம்.ஏ.காதர்,
மருதமுனை-01.

அன்பு முரசே,
பக்க சார்பின்றி பகரும் பல உண்மைகளுக்கு பொக்கிஷமான முரசே உன் அடுத்த புதுச் சுவை வரும்வரை சுவைக்கிறேன்- தினமும் பலமுறை. வளரும் உன் பணி உயரட்டும்.

பஹாமியா மிஸ்கீன்-அநுராதபுரம்.

□□

எனதன்பின் முரசே!
ஆயிரமாயிரம் ஆண்டு வாழ்க எங்கள் தினமுரசே!

**எங்கள் தலைவர்கள் எப்படியிருந்தனர் என்பதை அரசியல் தொடர் வெளிச்சம் போட்டு சொல்கிறது. புலிகளின் தலைவரை புகழ்வது (இடைக்கிடை) உறுத்தல்! தவறுகள் சகல தரப்பிலும் உண்டல்லவா? அவையும் வெளிவரும் என்று நம்பிக்கை.** ம.குகதாசன்-கனடா

நீ வந்தால் என் வீட்டில் தினம் பௌர்ணமி!
பல அம்சங்களையும் சூடிய பூங்கொடி அது நீதானடி!
கடலில் கரையும் நதிபோல் ஒன்று சேர்ந்தோமடி!

சாந்தி தங்கவேல்-டிக்கோயா.

□□

எனது அன்பிற்குரிய 'தினமுரசே' உனது நீண்டநாள் அபிமானியாகிய நான் உன்னால் சுமந்து வரும் பல தரமான அம்சங்களையும் கண்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். உன் பணி மென்மேலும் மெருகேற எனது நல்லாசிகள் என்றும்.

நந்தா மருதமுத்து-பறகடுவ.

□□

நாங்கள் மூவரும் பாடசாலையில் வந்து சேர்ந்தபின் நண்பர்கள் ஆனோம். ஆனால் மூவருக்கும் தெரிந்த நண்பன் ஒருவன் இருக்கிறான் என்பது பின்பு தான் தெரிய வந்தது. அதுதான் தமிழ் நல் உலகுக்கு தொண்டு செய்யும் என்றும் எம் இணைபிரியா நண்பன் தினமுரசு.

நண்பா! உன் தமிழ்த் தொண்டு மேலும் வளர வாழ்த்தும் உன் நண்பர்கள்...0


என்.எஸ்.பூரிக்கோ,
ஜி.சந்திரகுமார்,
எம்.சுரேஸ்குமார்-அட்டன்.

□□

தித்திக்கும் தினமுரசே உன் வரவிற்காக வாரா வாரம் காத்திருக்கிறேன். நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சிறப்பானவை. அரசியல் தொடர் 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை' எனும் அம்சம் பழைய கதையை நினைவுபடுத்துவதோடு என்னைப் போன்ற முன்னைய அரசியல் நிலை தெரியாதவர்களுக்கும் தெரிந்து கொள்ள முடிகின்றது.

த.இராமச்சந்திரன்-அவிசாவளை.



அன்பின் முரசே!
நாம் ரசித்து ரசித்து சுவைக்கும் பகுதி என்ன தெரியுமோ? பாப்பா முரசு. ஆமாம் சின்னஞ்சிறு பிள்ளைகளுக்கு இனிமையானது. மற்றும் நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர்!

சி.லயனி-வவுனியா.

□□

**பழைய உலகை எதிர்த்தும், வாழ்க்கையை சகல தளைகளில் இருந்து மீட்கவும் நடத்தும் போராட்டம் எவ்வளவு கடினமானது என்பதை 'தாய்' நாவலின் ஒவ்வோர் அத்தியாயமும் எடுத்துரைக்கிறது.** ஜெ.தனஞ்செயன்-வவுனியா.

என் மனதில் இடம் பிடித்த இனிய முரசே!
நீ தரும் அத்தனை அம்சங்களும் வெரி வெரி ஸ்வீட். உன்னை வாரம் தோறும் தவறாமல் எடுத்து வருகிறேன். எம்மால் எமது சொந்த சுமை மட்டும் தான் சுமக்க முடியும். நீ உண்மைச் செய்திகளோடு உலக சுமையே சுமந்து வருகிறாய். உனது புகழ் இன்னும் தொடரட்டும்.

மொஹமட்டீன்-ஹுனுப்பிட்டிய.

□□

என் இனிய முரசே!
கடல் கடந்து வந்து என்னைக் களிப்பூட்டுகின்றாய்- உன் சேவை தொடரவும், அற்புதனின் அற்புதமான படைப்புகளுக்கும் ஆயிரமாயிரம் பாராட்டுக்கள்.

எஸ்.ராணி-மன்னார்.

□□

தித்திக்கும் தினமுரசே!
நீ சுமந்து வரும் ஒவ்வொரு அம்சமும் இனியவை! பாப்பா முரசு, மகாபாரதம், லேடீஸ் ஸ்பெசல், சினிவிசிட் அனைத்தும் படு ஜோர்.

செல்வராஜ் விஜயா-பூண்டுலோயா.

அன்பின் இனிய முரசே!
உனது ஆக்கங்களை நான் என்றும் விடாது வாசித்து வருகிறேன். அதில் நீ தரும் 'தாய்' எனும் தொடர் என்னை மிகவும் கவர்ந்து விட்டது. அதுமட்டுமன்றி நீ தரும் தகவல் பெட்டி எனும் அதிசயத் தகவல்களும் என்னை மிகவும் கவர்ந்துள்ளன.

பிறேம் குமார்-வெள்ளவத்தை.

□□

வாரம் ஒருமுறை அவனியிலே வலம் வந்து இளைய நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்த என் இதயம் கவர்ந்த தினமுரசே! நீ தினம் ஒரு முரசாக வெளிவரமாட்டாயா? என ஏங்கிக் கொண்டிருக்கும் இவன்

ஜே.பெனடிக்-பூனைப்பிட்டி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மேற்கத்திய நாடுகளிடம் உதவி கோருகிறார்கள் புலிகள்!

## வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் அழைப்பு

"தமிழர் பிரச்சனையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியமைப்பதற்கு மேற்கத்திய நாடுகள் உதவ வேண்டும். இந்த உதவிகள் சிறீலங்கா அரசின் ஊடக அனுப்பப்படாமல் நேரடியாக தமிழ் பகுதிகளுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும்." இவ்வாறு புலிகள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளனர்.

### பரிசீலிக்கத்தயார்

கடந்த 7.03.95 அன்று யாழ்ப்பாணம் சென்ற - இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது பிரதிநிதிகளை சர்வதேச செஞ்சுலுவைச் சங்கப் பிரதிநிதி வரவேற்று அழைத்துச் சென்றார்.

புதன்கிழமை மாலை அவர்கள் கொழும்பு திரும்பினார்கள்.

அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து புலிகளது நிலைப்பாடு பற்றி வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினார்கள்.

அரசாங்கம் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால் அதனைப் பரிசீலிக்கத் தயார் என்று புலிகள் தரப்பிலிருந்து தெரிவிக்கப் பட்டது.

### அரசுமீது குற்றச்சாட்டு

"சிறீலங்கா அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒரு தலைப்பட்சமான பிரசாரம் செய்துவருகிறது. உண்மை நிலையைக் கண்டறிய வெளிநாட்டு இராஜதந்திரிகள் யாழ் குடாநாட்டுக்கு வர வேண்டும்," என்று புலிகள் வெளிநாட்டு பிரதிநிதிகளிடம் தெரிவித்தனர்.

வெளிநாட்டு உதவிகள் தமிழ் பிரதேசங்களுக்குக் கிடைப்பதை சிறீலங்கா அரசாங்கம் தடை செய்ய முற்படும். இதனால் வெளிநாட்டு உதவிகள் எமது பகுதிகளுக்கு நேரடியாகக் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று புலிகள் கோரிக்கை விடுத்தனர்.

### சந்தேகம்

புனர்நிர்மாணம் என்ற போர்வையில் பெருமளவான பணத்தை அரசு தவறாகக் கையாளும் என்றும் புலிகள் சந்தேகம் தெரிவித்தனர்.

கடந்த பத்து வருடங்களாக வெளிநாட்டு இராஜதந்திரிகள் எவரும் யாழ்ப்பாணத்திற்கு வரவில்லை. இனிமேல் தொடர்ந்து வந்து எமது மக்களது நிலையைக் கண்டறிய வேண்டும்.

பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள பின்னடைவிற்கும் மந்த நிலைக்கும் அரசே காரணம். புலிகள் நிபந்தனைகள் எதனையும் முன்வைக்கவில்லை. மக்களின் கோரிக்கைகள் தொடர்பாகவே பேசுகின்றனர் என்றும் புலிகளது தரப்பில் இருந்து கூறப்பட்டது.

புலிகளது பிரதிநிதிகளை சந்தித்த பின்னர் யாழ்ப்பாணத்தில் கருத்து வெளியிட்ட ஜப்பானிய பிரதிநிதி, "இங்குள்ள நிலமைகளை நாங்கள் கணிப்பீடு செய்கிறோம். அதனடிப்படையில் எவ்வாறு செயற்பட முடியும் என்பதையும், எவ்வகையான உதவிகளை வழங்க முடியும் என்பதையும் தீர்மானிப்போம்." என்று தெரிவித்தார்.

ஃபின்லாந்து பிரதிநிதி கருத்துத் தெரிவிக்கையில், "பொருளாதார ரீதியாக இங்கு பல விடயங்கள் செய்து முடிக்கப்பட வேண்டியுள்ளன. வடக்கு-கிழக்கு புனர் நிர்மாணப் பணிகளுக்கு இயன்றவரை உதவி வழங்குவோம்" என்று தெரிவித்தார்.

---

# வெட்டுப் புள்ளிக்கு எப்போது முற்றுப்புள்ளி?

## யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்!

வர்மா

வெட்டுப் புள்ளி அனுமதி முறையால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப் படும் நிலைக்கு முடிவு கட்டுவதாக ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கடந்த 8ம் தேதி புதன்கிழமை யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மாபெரும் ஆர்ப் பாட்ட பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

யாழ் மாவட்ட பாடசாலைகளின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த அந்தப் பேரணியில் பல்கலைக்கழக மாணவர்களோடு பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமான பேரணி யாழ்ப்பாணத்திலுள்ள அரச செயலகத்தில் முடிவடைந்தது.

அரசுக்கு எதிராகவும், கல்வி வசதிகள் தமிழர்களுக்கு புறக்கணிக்கப் படுவதாகவும் பேரணியில் சுலோகங்கள் காணப்பட்டன.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது பிரதிநிதிகளும் ஊர்வலம் நடைபெற்ற வேளையில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தனர். அவர்களும் ஊர்வலத்தைப் பார்வையிட்டனர்.

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் ஊர்வலத்தினர் கொண்டு வந்தனர். அவற்றை மிகவும் உன்னிப்பாக வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வாசித்தறிந்தனர்.

தமிழில் எழுதிப்பட்டிருந்த சுலோகங்களும் அவர்களுக்கு மொழி பெயர்த்து கூறப்பட்டது.

ஜனாதிபதி, கல்வியமைச்சர், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் ஆகியோருக்கு யாழ் அரச அதிபர் ஊடாக மகஜர்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

---

# அரசியலமைப்பு சீர்திருத்தங்கள்

## தமிழ் பா. உக்களின் கருத்தரங்கு!

அரசியலமைப்பு சீர்திருத்தங்கள், தேர்தல் முறையில் மாற்றம் செய்வது தொடர்பான அரசின் யோசனைகள் குறித்து தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடி விவாதிக்கவுள்ளனர். கருத்தரங்கு போன்று இந்த விவாதத்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களது ஒன்றியம் பாராளுமன்றக் கட்டிடத்தில் எதிர்வரும் 22ம் திகதி புதன்கிழமை இந்தக் கருத்தரங்கை நடத்தும். இந்தக் கருத்தரங்குக்கான விவாதக் குறிப்புக்களைத் தயாரிக்கும் பொறுப்பு கலாநிதி நீலன் திருச்செல்வம் பா.உவிடம் ஒன்றியத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்தின் நோக்கம், செயற்படும் விதம் தொடர்பான யாப்பை வரையும் பொறுப்பு கப்பல் துறைமுகங்கள், புனர்வாழ்வு-புனரமைப்பு அமைச்சரும், ஒன்றியத் தலைவருமான எம்.எச்.எம். அஷ்ரப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் ஒன்றியத் தலைவராக அமைச்சர் அஷ்ரபின் பெயரை ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் திரு.டக்ளஸ் தேவானந்தா பா.உ., பிரேரித்தார். புளொட் தலைவர் திரு.த.சித்தார்த்தன் அதனை ஆமோதித்தார்.

---

# கிழக்கில் தமிழ் மாணவரின் கல்விக்கு ஆபத்து!

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் தமிழ் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவி வருகிறது.

இது குறித்து மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களும், பெற்றோர்களும் 'முரசு'க்குத் தெரிவித்துள்ளனர்.

நீண்ட காலமாக நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் கிழக்கில் தமிழ் மாணவர்களது கல்வி வளர்ச்சி பின்னடையும் என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

---

# தாயகம் திரும்பிய அகதிகளிடம் கெடுபிடி!

## திருமலை அரச அதிபர்மீது அதிருப்தி!

தமிழ்நாட்டில் இருந்து தாயகம் திரும்பிய தமிழ் அகதிகள் மீது திருமலையில் சுங்கப் பரிசோதனை என்ற பெயரில் கெடுபிடிகள் இம்முறை அதிகமாகியிருந்தன.

அகதிகள் சிலர் பல இலட்ச ரூபாய்கள் பெறுமதியான பொருட்களைக் கொண்டு வந்தமையே பிரச்சனைக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

வியாபாரிகள் சிலர் அகதிகள் மூலமாக ஆட்டோ எஞ்சின் உட்பட பெறுமதியான பொருட்களை கொண்டுவர முற்பட்டனர். அந்தப் பொருட்களைக் கொண்டுவந்து இங்கு கொடுத்தால் குறிப்பிட்ட தொகைப் பணம் வியாபாரிகளால் வழங்கப்படும்.

அகதிகளில் சிலர் அவ்வாறு நடந்து கொள்வதால் முழு அகதிகளுமே பாதிக்கப்படும் நிலை எற்பட்டுவிட்டது.

அதே சமயம் ஒரு சில அகதிகளது தவறான நடத்தைக்கு முழு அகதிகளையுமே அச்சுறுத்தும் விதமாக பொலிஸார் குவிக்கப்பட்டதும் அதிகாரிகள் கடும் போக்காக நடந்து கொண்டதும் அகதிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

திருமலை அரச அதிபர் அகதிகள் விடயத்தில் பொறுமையின்றி நடந்து கொண்டார் என்றும் பரவலாகப் பேசப்படுகிறது.

அகதிகள் விடயத்தில் மட்டுமல்லாமல் பொதுவாகவே திருமலை அரச அதிபர் மீது ஏற்கெனவே குறைபாடுகள் தெரிவிக்கப் பட்டு வருகின்றன.

சமீபத்தில் திருமலையில் மீள் குடியேற்ற மாதிரிக் கிராம திறப்பு விழா நடைபெற்றது. அது தொடர்பான கூட்டம் ஒன்றில் உரையாற்றிய புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப், அதிகாரிகள் சிலரது நடவடிக்கைகள் குறித்து கண்டனம் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் கலந்து கொண்ட புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர்பான கூட்டமொன்றுக்குக் கூட திருமலை அரச அதிபர் நேரம் தாமதித்தே வந்து கலந்து கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தாயகம் திரும்பிய அகதிகளை ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு.சம்பந்தனும் அகதிகளை சந்தித்து உரையாடினார்.

---

# சமாதானம் ஏற்பட்டால் நோர்வே உதவும்

## நிலமையைப் பார்வையிட தூதுக்குழு வருகை!

நோர்வே அரசாங்கத்தின் உயர் மட்டத் தூதுக்குழுவொன்று இலங்கைக்கு வருகிறது.

அரசுக்கும், புலிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் சமாதானப் பேச்சு வார்த்தை குறித்தும், போர் இடை நிறுத்தம் குறித்தும் அக்குழு கவனம் செலுத்தும்.

ஜனாதிபதியின் செயலாளர், அமைச்சர்கள் ஆகியோரையும் நோர்வே உயர்மட்டத் தூதுக்குழுவினர் சந்தித்து உரையாடுவார்கள்.

தூதுக்குழுவில் நோர்வே அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், ஆசிய-லத்தீன் அமெரிக்கப் பிரிவின் தலைவர், நோர்வே அபிவிருத்தி ஒத்துழைப்பு அமைப்பு பிரதிநிதி ஆகியோர் அங்கம் வகிப்பர்.

கொழும்பிலுள்ள தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரையும் தூதுக்குழுவினர் சந்திப்பர்.

சமாதான சூழ்நிலையைப் பொறுத்தே நோர்வே இலங்கைக்கான உதவியை வழங்குமென்று தெரிகிறது.

---

# வடக்கு-கிழக்கு-மலையக தமிழர்களது அபிலாசைகள்!

## இ.தொ.கா-ஈ.பி.டி.பி-புளொட் கூட்டு யோசனை!

பாராளுமன்ற தெரிவுக் குழுவின் முன்பாக கூட்டாக சேர்ந்து யோசனைகளைத் தெரிவிக்க ஈ.பி.டி.பி, புளாட், இ.தொ.கா ஆகிய கட்சிகள் கலந்து உரையாடி வருகின்றன.

மலையக மக்கள் முன்னணி தலைவர் திரு. சந்திரசேகரனும் கலந்துரையாடலில் பங்குகொண்டிருந்தார்.

தெரிவுக் குழு முன்பாக மலையக மக்கள் முன்னணி அதன் யோசனையை ஏற்கெனவே சமர்ப்பித்து விட்டது. ஆயினும் வடக்கு-கிழக்கில் இனப்பிரச்சனை தீர்விற்காக தமிழ் கட்சிகள் முன்வைக்கும் சமஷ்டி முறையிலான தீர்வுத் திட்டத்திற்கு தமது முன்னணி ஆதரவு வழங்கும் என்று பிரதியமைச்சர் திரு. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களது பிரஜா உரிமை மற்றும் மலையக தமிழ் மக்களின் பிரச்சனைகள் குறித்து இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் மேற்கொள்ளும் நிலைப்பாட்டுக்கு தாம் ஆதரவு வழங்குவோம் என்று ஈ.பி.டி.பி, புளாட் அமைப்புக்கள் சார்பில் கலந்துரையாடலில் உறுதி வழங்கப்பட்டது.

எதிர் வரும் 17ம் திகதி பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு கூட்டாக யோசனைகளைச் சமர்ப்பிக்கவென கலந்துரையாடல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

---

# விஸ்தரிப்பில் தீவிரம் நஷ்டஈடு தாமதம்

(வவுனியா)

வவுனியா விமான நிலைய விஸ்தரிப்பு என்பது சென்ற அரசின் காலத்தில் எடுக்கப்பட்ட முடிவாகும். பல் வேறு எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்ட போதும் விமான நிலைய விஸ்தரிப்பு முடிவு மாற்றப்படவில்லை.

விமானநிலைய விஸ் தரிப் பால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்டஈடு வளங்கப் படும் என்று கூறப்பட்டது. ஆனால் இதுவரை நஷ்டஈடு கடைக்கவில்லை.

இதேவேளை வவுனியாவில் குளங்கள் புணரமைப்புக்காக வெளி நாடுகள் வளங்கிய நிதி உதவி இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தபட்டதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது.

---

# உள்ளே வேண்டாம் உருளைக் கிழங்கு!

யாழ்குடா நாட்டுக்கு உருளைக் கிழங்கை கொண்டுவர வேண்டாம் என்று வவுனியாவிலிருந்து செல்லும் பயணிகளுக்கு புலிகள் அறிவுறுத்தியுள்ளனர். புலிகளது தடை முகாம் அலுவலகத்தில் அந்த அறிவித்தல் காணப்படுகிறது.

யாழ் குடா நாட்டில் போதியளவு உருளைக் கிழங்கு இருப்பதால் மேற்படி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

---

# நெல் கொள்வனவில் சோழன்!

யாழ் குடாநாட்டில் விவசாயிகளிடம் 'சோழன் நெல் அரிசி வாணிபம்' என்னும் புலிகளது நிறுவனம் நெல் கொள்வனவில் ஈடுபட்டு வருகிறது.

ஒரு மூடை நெல் (69 கிலோ) 1250 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுகிறது.

யாழ் குடா நாட்டில் புலிகள் தவிர வேறு தனியார் எவரும் நெல் கொள்வனவில் ஈடுபட அனுமதியில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

# புலிகளின் நான்கு கோரிக்கைகளும் நிராகரிப்பு! பிரபாவுக்கு ஜனாதிபதியின் நான்கு பக்க கடிதம்.

ஜனாதிபதி சந்திரிக்காவால் புலிகளது தலைவர் பிரபாகரனுக்கு நான்கு பக்க கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

வெளிநாட்டுக்கு செல்வதற்கு முன்னர் ஜனாதிபதி இக் கடித்தை பிரபாகரனுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

ஜனாதிபதியின் கடிதம் குறித்து யாழ்ப் பாணத்தில் 14.02.95 அன்று புலிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

"சிறீலங்கா ஜனாதிபதி தனது கடிதத்தில் புலிகளது நான்கு முக்கிய கோரிக்கைகளை நிராகரித்துள்ளார்" என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

முற்றான பொருளாதார தடை நீக்கம், கடல் வலய தடை விலக்கல், பூநகரி இராணுவ முகாம் அகற்றப்படுதல், கிழக்கில் புலிகள் சுதந்திரமாக நடமாடுதல் ஆகிய நான்கு கோரிக்கைகள் விடயத்தில் ஜனாதிபதி சாதகமான பதிலை தெரிவிக்கவில்லை என்பதே புலிகளது குற்றச் சாட்டாகும்.

நான்கு பக்கங்களில் ஜனாதிபதி எழுதியுள்ள கடிதத்திற்கு பிரபாகரன் ஓரிரு நாளில் பதில் கடிதம் அனுப்புவார் என்று புலிகளது செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

பிரபாவின் பதில் கடிதத்தை அடுத்தே நான்காம் சுற்றுப் பேச்சு குறித்து திகதி நிர்ணயிக்கப்படும் என்று தெரிகிறது.

---

# புலிகள் ஆரம்பித்துள்ள தொழிற்கல்வி.

யாழ்ப்பாணத்தில உள்ள இளைஞர்கள், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்காக 'தொழில் வங்கி' ஒன்றை புலிகள் ஆரம்பித்துள்ளனர்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் புலிகளால் 'தொழில் வங்கி' ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

வேலை வாயப்பு இல்லாமல் இருக்கும் இளைஞர்களும், யுவதிகளும் தமது பெயர்களை தொழில் வங்கியில் பதிவு செய்யுமாறு புலிகள் அமைப்பினரால கேட்கப்பட்டுள்ளனர்.

# காதோடு காது



உதாரா

## அரசியல் வகுப்பு

பகைமை தவிர்ப்பு சாதக நிலைக்குள் ஆயுதமின்றி நடமாடும் விடுதலை இயக்கப் புலிகள்-மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள கல்விக்கூடங்களுக்குள் நுழைந்து அரசியல் வகுப்பு நடாத்தத் துணிந்துள்ளனர். சிரேஷ்ட வகுப்பு மாணவர்களுக்கு வகுப்புக்களை எடுப்பதன் மூலம்-படித்த இளைஞர்களை இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளும்- புதிய அணுகுமுறை இதுவென்று பேசிக்கொள்ளுகிறார்கள் அவதானிகள்.

## தளர்வும் பலமும்

மட்டக்களப்பில்-பகைமைத்தவிர்ப்பு நிலவரம் பழக்கத்திற்கு வந்தபின் பல பரிசோதனை, கண்காணிப்பு நிலைகள் தளர்த்தப் படுவதுடன்; புதிய நிலையங்கள் பலப்படுத்தப்படுகின்றன. பட்டிருப்பு-வெல்லாவெளி வழியில் எஸ்.ரி.எஃப்.ஆளுமைக்குட்பட்ட மரத்தடி பரிசோதனை நிலையம் தளர்த்தப்பட்டுள்ளது. இதனால் பழுகாமம், பாலையடிவட்டை, மண்டூர் பிரதேசங்களுக்கு போய் வருபவர்கள் உற்சாகப்பட்டுள்ளனர். இதே வேளையில் மட்டக்களப்பு பிரதான பொலிஸ்நிலைய வளவின் நுழைவாயிலின் உட்புறமாக புதிய சென்றி ஒன்று கட்டப்பட்டுள்ளது.

## மாமாங்கரின் மகிமை

கிழக்கிலங்கையில் புகழ்பெற்ற தலங்களில் ஒன்றான அமிர்தகழி மாமங்கேஸ்வரர் ஆலய பிரதான வழி திறக்கப்பட்டுள்ளது. இந்நாள் வரை இவ்வழியின் குறுக்கே பாதுகாப்புப்படையின் பெரிய காவல் அரண் இருந்தது. இவ்வரண் ஆலயத்தின் மறுபுறமொன்றுக்கு மாற்றப் பட்டுள்ளதால்-பிரதான வழி மூலமாக பக்தர்கள் ஆலய முகப்புக்கு வழிபடப்போக வழி பிறந்துள்ளது. எல்லாம் மாமங்கேஸ்வரரின் மகிமை என பேசிக்கொள்ளுகிறார்கள் மக்கள்.

## மாநகரசபை அனாதை

புதிய செயலகத்தில் இயங்கிவரும் மட்டக்களப்பு மாநகர சபை நிர்வாக அலுவலகத்தை உடனடியாக புனித அந்தோனியார் வீதியிலுள்ள 'பவர்ஹவுசு'க்கு மாற்றும்படி மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் முதல்வரைக் கேட்டுள்ளார். மாநகர மண்டப கட்டிடத் தொகுதியை திருப்பித்தந்தாலொழிய ஒரு அடி தானும் நகர மாட்டேனென்று சூழுரைத்திருக்கிறார் முதல்வர்.

## கௌரவப் பிரச்சனை

கல்லடிப்பாலத்தின் சென்றியில் நடந்த நிகழ்ச்சி இது: இரு இளைஞர்கள் பைசிக்கிள் வண்டியில் வருகிறார்கள். பரிசோதனையை உதாசீனம் செய்துவிட்டுத் தங்கள் போக்கில் போகிறார்கள். "நாங்கள் எல்.ரி.ரி.யினர்" என்ற குரல்! "எவனென்றாலும் சோதனைக்குப்பின்தான் நகரலாம்." தர்க்கம், தகராறு -இருசாராருக்கிடையில். இறுதியல் அறிவுறுத்தலின் பின் சமரசம் பிறந்தது. ஆனால் கொதிவெயிலில் புதினம் பார்த்த பொதுமக்கள்! ஐயோ பாவம்.

## பதுங்கும் பிள்ளையார்

வடக்கு-கிழக்கு சபையின் நாதப்பிரம்மமான பிள்ளையார், பூனைபோல் பதுங்கி இருக்கிறாராம். பழைய சங்கதிகளை பிரதி பண்ணும் வேலை மறுபுறம் நடைபெறுகிறதாம். கெதியில் சீட்டுக்கிழியும் என்று ஸ்ரீமான் பொதுஜனம் காதுக்குள் போட்டுவைத்தார்.

## மட்டுநகரில் அதிரடியார்

மட்டக்களப்பில் பிட்டிச மன்னர்கள் உஷார்பட்டிருக்கிறார்கள். தட்டச்சுப்படியல் பல இதழ்கள் வெளிவரத்துவங்கியுள்ளன. வேடிக்கை என்னவென்றால் 'உண்மைகள் உறங்குவதில்லை' என்ற தலைப்பில் ஒரு பிட்டிச இதழ் பிரசுரம் வாரா வாரம் வருகிறது. இதழின் ஆசிரியர் யார் தெரியுமோ? அதிரடி அய்யாத்துரை.

## கிராம சேவையாளர் பதட்டம்

மட்டக்களப்பு பகுதி கிராம சேவையாளர்கள் புதன்கிழமை தோறும் செயலகங்களுக்கு வரவேண்டும். இது போதாதென்று இன்னும் பல சங்கடங்கள். பகைமைத் தவிர்ப்புக்குப் பிறகு பகுதியில் காணாமல் போகும் இளைஞர்கள், யுவதிகள் விபரம் தேவை என பிரிகேடியர் கூட்டமொன்றில் வலியுறுத்தியிருக்கிறார்.

## காணவில்லை

பகைமைத் தவிர்ப்பு காலத்தில் இளைய தலைமுறையினரையும் இயக்கத்தில் மேலும் சேர்த்துக் கொள்ளும் முயற்சிகள் வெற்றிதானாம். ஆள் சேர்ப்பு எல்.ரி.ரி.இயினருக்கு. சும்மா சொல்லக்கூடாது- மாநகரப் பகுதியில் மட்டும் சுமார் 2500 இளைஞர்கள், யுவதிகள் மாயமாய் மறைந்துள்ளனராம். பெற்றோர் உற்றார் அம்போ என்று அலறிப் புலம்புகின்றனராம்.

## எல்.ரி.ரி.இக்கு ஆள் சேர்ப்பு

பகைமைத் தவிர்ப்புக்குள் மட்டக்களப்பு பிரதேசத்தினுள் சுதந்திரமாக நடமாடும் எல்.ரி.ரி.இ.இளைஞர்கள் பல்வேறு பணிகளை செயல்படுத்துவதில் ஊக்கம் காட்டி வருகின்றனர். படித்தவர்களை பயிற்சிக்கு சேர்த்து அனுப்புவது ஒரு பணி. இலவசமாக யாழ்ப்பாணம் போகக் கூடிய காலத்தில் சேர்க்கப்படும் இளைஞர்கள் தங்கு தடையின்றி போய் சேர்ந்துவிடுவரென ஒருவர் பேசிக் கொண்டமை காதில் விழுந்தது.

## வறுமை வகுப்புக்கள் கலைந்தது

மட்டக்களப்பு - கல்லடியில் உயர்வகுப்பில் பயிலும் வறிய மாணவர்களுக்காக வாரந்தோறும் நடத்தப்படும் வகுப்புக்கள் திடீரென கலைக்கப்பட்டதாம். அரசியல் வகுப்பும் உள்ளிட நினைத்தமைதான் இதற்கான காரணமாம்.

# நிவாரணப் பணத்திலும் லஞ்சம்! மக்களை ஏய்க்கும் கிராம சேவகர்

(திருமலை நிருபர்)

மூதூர் ஈச்சிலம்பற்றையைச் சேர்ந்த பூநகர் என்ற கிராமத்தில் கிராம சேவகர் ஒருவர் படுமோசமான முறையில் லஞ்சம் வாங்குவதில் ஈடுபட்டுள்ளதாக 'முரசு'க்குத் தெரிய வந்துள்ளது.

360 குடும்பங்களைக் கொண்ட இக்கிராமம் வன்செயல்களின் போது தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி வந்துள்ளது. வீடு வாசல்களை இழந்தும் உயிர்களைப் பறிகொடுத்தும் பரிதாபகரமான வாழ்க்கை நடத்திவரும் இம்மக்கள் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமையால் அரச நிவாரணங்களிலேயே தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் யானை ஒன்றினால் ஒன்பது பேர் தாக்கப்பட்டு 4 பேர் உடனேயே மரணமடைந்துள்ளனர். ஏனேயோர் இராணுவத்தால் காப்பாற்றப்பட்டு திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு கஷ்டஜீவனம் நடத்தும் மக்களிடம் லஞ்சம் பெறுவதில் ஒரு கிராம சேவகர் ஈடுபட்டுள்ளார். பிறந்த பிள்ளையைப் பதிவு செய்வதற்கு நூறு ரூபாவும் மீள் குடியேற்றத்திற்கு வழங்கப்படும் 4000 ரூபாவில் ஐந்நூறு ரூபாவும் இவரால் அறவிடப்பட்டதாக கிராம மக்கள் தெரிவிக்கிறார்கள். மானிய வீட்டுத் திட்டத்துக்காக வழங்கப்படும் பதினையாயிரம் ரூபாவிலும் தமக்கு ஐந்நூறு வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறாறாம்.

இத்தகைய சமூகக் கிருமிகள் மீது சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து தங்களை வாழ விடுமாறு இம்மக்கள் கேட்கிறார்கள்.

# மட்டு.மாவட்ட வட பிரதேசம்! அபிவிருத்திக்கு வெளிநாட்டு உதவி!

(ஏறாவூர் நிருபர்)

கல்வி நிலையில் ஒப்பீட்டளவில் மிகவும் பின்தங்கியுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கேயுள்ள பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய 'டயகோனியா' எனும் வெளிநாட்டு நிறுவனம் முன்வந்துள்ளது. இத்திட்டத்திற்கு மட்டு மாவட்டத்தின் வட பகுதியாகிய தன்னாமுனையிலிருந்து வாகரை வரை 7 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட அறிவொளிச் சபையால் நடாத்தப்படும் மேற்படி கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்கு கிழக்கிலங்கை புனர்வாழ்வுக்கழகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்பு கிளை என்பன அனுசரணை வழங்குகின்றன.

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் கடந்த காலங்களில் சித்தி பெறாதிருக்கும் கிராமப்புறப் பாடசாலைகளுக்கும்,க.பொ.த.(சா.த) பரீட்சையில் குறைவான தரங்களைப் பெற்ற பாடசாலைகளுக்குமே இத்திட்டம் முதலில் அமுல்படுத்தப்படுகிறது. இம்மாணவர்களுக்கு இலவச பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

# திருமண அரங்கில் போலி மணமகள்! ஈரானில் நடந்த ஏமாற்று!

(துபாயிலிருந்து ஏ.எல்.எம்.நஸீம்)

மணமகளை மாற்றியதாக மணமகளின் பெற்றோர் மீது வழக்கு தொடர்ந்துள்ள சம்பவம் ஒன்று அண்மையில் ஈரான் நாட்டில் நடைபெற்றுள்ளது.

ஈரான் நாட்டைச் சேர்ந்த இப்ராஹீம் (25 வயது) என்பவர் தான் குறிப்பிட்ட குடும்பத்திலுள்ள இளைய பெண்ணை மணமுடிக்க வேண்டிய பெண்ணான மரியமிடம் அவருடைய பெற்றோரிடம் பேசும் படி கூறியனுப்பியிருந்தார். இதற்கு சம்மதித்த பெற்றோர் திருமண நாளன்று இளைய பெண்ணிற்குப் பதிலாக தங்களது மூத்த பெண்ணை மணவறையில் அமர்த்தி திருமணச் சடங்கை முடித்துவிட்டனர். முற்று முழுதாக முகத்தை மறைத்திருந்ததால் மணமகனால் ஆள்மாறிய விடயத்தை கண்டு பிடிக்க முடியவில்லை. சம்பிரதாயங்கள் முடிந்த பின்பு மணப்பெண்ணின் முகத்திரையை விலக்கியபோதுதான் மணப்பெண் மாறியதை கண்டுபிடிக்க முடிந்தது. மணப்பெண்ணின் குடும்பத்தினர் தன்னை முட்டாளாக்கி விட்டார்கள் என்றும் தான் காதலித்த பெண்ணை மணவறையில் இருத்தவில்லையெனவும் இவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

# எங்கே காரியாலய முத்திரை?

(காத்தான்குடி நிருபர்)

சமீபகாலமாக மட்டக்களப்பு விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அதிக வழக்குகளை நீதிமன்றத்தில் வைத்து பெரும் சாதனையைப் படைத்துள்ளது. ஆயினும் இவ்வழக்குகள் உத்தியோகப்பற்றற்றனவா? என்ற சந்தேகத்தையும் உண்டாக்கியுள்ளது.

மட்டக்களப்பு விலைக்கட்டுப்பாட்டு நிலையத்தைச் சேர்ந்த ஏ.சௌந்தரராஜன் என்பவரால் ஒரு வர்த்தகருக்கு எழுதப்பட்ட கடிதம் காரியாலய முத்திரையையோ; பொறுப்பதிகாரி, உதவி விலைக்கட்டுப் பாட்டதிகாரி இவர்களில் எவருடைய கையொப்பமோ இல்லாமல் அனுப்பப்பட்டுள்ளது. மட்டக்களப்பு விலைக்கட்டுப்பாட்டு நிலையம், தனிப்பட்ட கம்பனியா? என வர்த்தகர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.


## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

ஒரு வருடத்திற்கு ரூபா 505/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்கள் ரூபா 258/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்கள் ரூபா 132/= (13 வாரங்கள்)

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர் | THINAMURASU VAARAMALAR
த.பெ.இல:1772 | P.O.BOX: 1772
கொழும்பு | COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

வாசகர்களுக்கு இனிய செய்தி





## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாடங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா! விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா! காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28



## ரஷ்யாவில் (95/96க்கான) உயர் கல்வி

- லுமும்பா நட்புறவு பல்கலைக்கழகம்
- மொஸ்கோ அரச பல்கலைக்கழகம்
- மொஸ்கோ விமானவியல் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்
- மொஸ்கோ சிவில் விமானம் செலுத்துநர் பயிற்சி மையம்
- சென்.பீட்டேர்ஸ்பேர்க் அரச மருத்துவ பல்கலைக்கழகம்
- ரொஸ்ரொவ் அரச மருத்துவ பல்கலைக்கழகம்

**மருத்துவம்**

பொது/பல் மருத்துவம்

**பொறியியல்**

சிவில், மெக்கானிக்கல், எலக்ரிக்கல், எலக்ரோனிக்ஸ், கம்பியூட்டர், கட்டிடக்கலை, சுரங்கத்தொழில், புடவை தயாரிப்பு, நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்கள், விமானப் பொறியியல்

**சட்டத்துறை, பொருளாதாரம், விவசாயம் விமான செலுத்துநர் பயிற்சி**

இவற்றுக்கான வாய்ப்புகளை ரஷ்ய, நட்புறவு பல்கலைக்கழகப் பட்டதாரிகள் மூலம் நீங்கள் பெறமுடியும். மேலதிக விபரங்களுக்கும் இணையற்ற சேவைக்கும் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

இதோ—முகவரி:

S.K.INTERNATIONALS
NO.451/1, Kandy Road, Kadawatha.
கொழும்பு அலுவலகம்:
INSTITUTE OF VOCATIONAL EDUCATION
Suite No.2-228, B.M.I.C.H Office Complex, Colombo-07.
Tel-686421-4,691131 Ext.372,
(வார நாட்களில் மு.ப.9 மணிமுதல் பி.ப.1 மணிவரை)
6 மணிக்குப்பின்-Tel- 078-66800
Fax:01-525166,1697420



## BRIGHT ன் 90 DAYS SPOKEN ENGLISH 90 DAYS SPOKEN SINHALA

ஒலிப்பதிவு நாடாவுடன் கூடிய தபால் மூலம் கல்வி
POSTAL TUITION WITH AUDIO CASSETTES

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மிகக் குறுகிய காலத்தில் இலகுவாக எளிய நடையில் மாணவரின் விருப்புக்கேற்ற முறையில் நவீன உளவியல்முறையில் ஆங்கில/ சிங்கள பேச்சு மொழியை கற்பிக்கின்றது

BRIGHT TRAINING CENTRE

எமது பாடத்தொகுப்புடன் ஓடியோ கசெட்டும் இணைவதனால் உங்களை ஓர் ஆங்கில / சிங்கள சூழலிலேயே இருப்பவர்கள் போன்ற இயல்பை உருவாக்கி, உங்களின் வெட்கம், பயப்பாடு ஆகியவற்றை அகற்றிப் பிரகாசமான வாழ்வுக்கு வழிகாட்டுகிறது.

இப் பாடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 1000.00 (மூன்று ஓடியோ கசெட் உட்பட)

எமது நேரடி SPOKEN ENGLISH 90 DAYS வகுப்புகளில் சேர விரும்புவோர் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக விபரங்கட்கு கீழ்க்காணும் விண்ணப்பப் படிவத்துடன் இரண்டு ரூபா முத்திரை ஒட்டப்பட்ட சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க. தபாலுறை இணைக்கப்படாத கடிதங்களுக்கு பதில் அளிக்கப்படமாட்டாது.

மற்றும் BRIGHT ன் கல்வித்திட்டங்கள்
- ஆண்டு 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பயிற்சி
- G. C. E. (O/L) முன்னோடிப் பயிற்சி
- கடைக்கணக்கு எழுதும் முறை Method of Book Keeping

விரும்பும் பாடம்:..............................
பெயர் :..............................
விலாசம்:..............................

BRIGHT TRAINING CENTRE
S-27, FIRST FLOOR, P. O. BOX 162.
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX.
COLOMBO - 11. T. P. 434770

Mercantile Ads.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பேச்சு மேசையில் ஒரு இரகசியக் கடிதம்



“மிக இரகசியமாகப் பேணப்பட வேண்டிய கடிதத்தை ஜனாதிபதி வெளியிட்டுவிட்டார்.”

கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் புலிகள் தெரிவித்த குற்றச் சாட்டு அது.

“பகிரங்கமாகவே பேச்சு நடத்துவோம். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவைப் போல நாங்கள் நடக்க மாட்டோம்.”

என்று அரச தரப்பு அடிக்கடி கூறிவருகிறது.

அதே சமயம் பேச்சு மேசைக்கு ஓர் இரகசியக் கடிதத்தையும் அனுப்பி வைத்திருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும், வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையில் ஒரு மத்தியஸ்தர் இருப்பார். அவர் வெளிநாட்டைச் சேர்ந்தவர். இந்தோனேசியாவிலும் ஹெயிட்டியிலும் ஃபிரான்ஸ் தூதராக இருந்த சாந்தா மிசேல் என்பவர்தான் ஜனாதிபதி சிபாரிசு செய்த வெளிநாட்டவர்.

95 பெப்ரவரி 20இல் ஜனாதிபதி தனது யோசனை அடங்கிய கடித்தை பிரபாவுக்கு அனுப்பியிருந்தார்.

பெப்பரவரி 27 இல் அக்கடி தத்திற்கு பிரபா பதில் அனுப்பியிருந்தார்.

“வெளிநாட்டு மத்தியஸ்தர் தேவையில்லை. இரு தரப்பின் நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகள் மத்தியில் பேச்சு நடக்க வேண்டும்.”

என்பதுதான் பிரபா எழுதிய கடித்தில் இருந்த விடயம்.

பெப்ரவரி 20ம் திகதிய தனது கடிதத்தில் இரகசியமாகப் பேணப்பட வேண்டியது என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தாராம்.

ஆனால், ஜனாதிபதி பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் இரகசியத்தை போட்டுடைத்து விட்டார் என்கிறார்கள் அன்ரன் பாலசிங்கமும், தமிழ் செல்வனும்.

சர்வதேச மத்தியஸ்தர் ஒருவரை தாம் நியமித்ததாகவும், புலிகள் அதனை மறுத்ததாகவும் பி.பி.சி. பேட்டியில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து மார்ச் 06ம் திகதி யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை புலிகள் நடத்தியிருந்தனர்.

“பேச்சு பகிரங்கமாக நடக்க வேண்டும்.

“எமது மக்களுக்குத் தெரியப்படுத்தப் பட வேண்டும்.”

என்று பிரபாகரன் ஜனாதிபதிக்கு கடிதத்தில் தெரிவித்தார் என்று பத்திரிகையாளர் மாநாட்டில் அவர்கள் கூறினார்கள்.

இதனால் தற்போது எழுந்துள்ள கேள்விகள் பின்வருமாறு:

*திடீரென்று பேச்சுவார்த்தையில் வெளிநாட்டு மத்தியஸ்தரை கொண்டு வந்து புகுத்த ஜனாதிபதி நினைத்தது ஏன்?*

*வெளிநாட்டு மத்தியஸ்த யோசனையை இரகசியமாக பேண முயன்றது ஏன்?*

*பின்னர் ஜனாதிபதியே அதனை திடீரென்று வெளியிட்டது ஏன்?*

மூன்று கேள்விகளுக்கும் ஒரே பதில்; அரசாங்கம் மிகவும் குழப்பத்தில் இருக்கிறது என்பதுதான்.

ஜனாதிபதியின் செயலாளர் திரு. பாலபட்ட பெந்தி வெளிநாட்டு மத்தியஸ்தரை நியமிக்கும் முயற்சியில் இரகசியம் எதுவும் இருந்ததில்லை என்கிறார். அரசும் பகிரங்கப் பேச்சு நடத்துவதை விரும்புகிறது என்கிறார் திரு.பாலபட்ட பெந்தி.

அப்படியானால் பெப்ரவரி 20இல் ஜனாதிபதியால் புலிகளுக்கு அனுப்பப் பட்ட கடிதம் ஏன் உடனடியாக வெளிப்படையாகத் தெரிவிக்கப்படவில்லை என்ற கேள்வி எழுகிறது.

புதிய யோசனை ஒன்றை தெரிவித்த அரசாங்கம் அதனை உடனடியாக மக்களுக்கு தெரியப்படுத்த தவறியது ஏன்?

நான்காம் கட்ட பேச்சுக்கு புலிகளிடம் இருந்து முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவே பெப்ரவரி மாதம் முழுவதும் அரசாங்கம் சொல்லிக்கொண்டிருந்தது.

வெளிநாட்டு மத்தியஸ்தர் யோசனை குறித்தோ அது தொடர்பாக பரிமாறப்பட்ட கடிதங்கள் குறித்தோ அரச தரப்பு பேச்சாளர்கள் வாயே திறக்கவில்லை.

அவர்களுக்கே இது தெரியாமல் இருந்திருக்கக் கூடும்.

என்ன நடக்கிறது என்று நினைக்க வேண்டி இருக்கிறதென்றால்: ஜனாதிபதிக்கு தவறான தகவல்களும், முன்னுக்குப் பின் முரணான ஆலோசனைகளும் சொல்லப் படுகின்றன.

தன்னிச்சையான பாதைத் திறப்பு விவகாரத்தில் இருந்து, வெளிநாட்டு மத்தியஸ்தர் யோசனை வரை திடீர் முடிவுகள் அவ்வாறுதான் ஏற்பட்டன என்று நம்புவதைத் தவிர வேறு வழியில்லை.

ஆற அமர இருந்து திட்டவட்டமான முடிவுகளை எடுத்து செயற்பட ஜனாதிபதிக்கும் நேரம் இருப்பதாகத் தெரியவில்லை.

அமைச்சர்களுக்கும் கூட பேச்சுவார்த்தை எந்த திசையிலே செல்கிறது என்பதிலே தெளிவான விளக்கங்கள் இருப்பதாகத் தோன்றவில்லை.

அமைச்சர் பெர்ணாண்டோ பிள்ளை வட பகுதிக்கான எரிபொருள் தடையை முற்றாக நீக்க வேண்டும் என்று சொல்லுகிறார்.

இதனை மூன்றாம் கட்டப் பேச்சில் புலிகள் வலியுறுத்தி இருந்தனர். அரச இன்றுவரை அதனை நினைக்கவில்லை. ஆனால் அமைச்சர் நீக்க வேண்டும் என்று சொல்கிறார்.

அப்படியானால் தடை யார்? ஒன்றுமே புரியவில்லை. மக்கள் முடியைப் பிய்த்துக் கொள்கிறார்கள்.

ஆக, பேச்சுவார்த்தை, சமாதான முயற்சிகள் குறித்து முதலில் அரச தரப்புக்குள் ஒரு தெளிவான நிலைப்பாடு தோற்றுவிக்கப் பட வேண்டும்.

புலிகள் தரப்பை பொறுத்தவரை குழப்பமே கிடையாது.

பேச்சு என்றால் பேச்சு. அடி என்றால் அடி. இடை நடுவிலே இராஜதந்திர காய் நகர்த்தலா? அதற்கும் ரெடி. ஒட்டு மொத்தத்தில் ஒவ்வோர் அடியையும் அளந்து வைக்கிறார்கள் புலிகள்.

போராடுகிறவர்கள் பேசுகிறார்கள். பேசுகிறவர்களே போராடுகிறார்கள். அதனால் குழப்பம் கிடையாது.

அரச தரப்பைப் பொறுத்த வரை பேச்சு நடத்துகிறவர்கள் வேறு, கொள்கை முடிவுகளை எடுப்பவர்கள், அரசியல் ரீதியில் மக்களை முகம் கொடுப்பவர்கள் வேறு என்ற நிலைதான் இருக்கிறது.

பத்திரிகையாளர்களது கேள்விகளுக்கு பதில் சொல்லும் பொறுப்பில் உள்ள அமைச்சர்களுக்கு பேச்சுவார்த்தை தொடர்பான பூரண தரவுகள் தெரியாதோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

புலிகளைப் பொறுத்தவரை பேச்சு வார்த்தைக்கு அவர்கள் தரப்பில் தலைமை தாங்கும் தமிழ் செல்வன்தான் பத்திரிகையாளர் மாநாடுகளையும் நடத்துகிறார். கூட்டங்களிலும் அவர்தான் மக்களுக்கு விளக்கமளிக்கிறார். அரசியல் துறைப் பொறுப்பாளராகவும் அவரே இருக்கிறார்.

அரச தரப்பைப் பொறுத்தவரை பேச்சு வார்த்தைக்கு செல்பவர்கள் ஜனாதிபதியின் நம்பிக்கைக்கு உரியவர்களாக இருக்கலாம். ஆனால் மக்களுக்கு அறிமுகமானவர்களாகவோ, மக்களுக்கு பதில் சொல்ல வேண்டியவர்களாகவோ அவர்கள் இல்லை.

அரசியல் பேச்சும், அன்றாடப் பிரச்சனைகள் பற்றிய பேச்சும் ஒரே நேரத்தில் முன்வைக்கப்பட வேண்டும் என்பது சரியானதே.

ஆரம்பத்தில் புலிகள் அதனை மறுத்ததும் உண்மை. புலிகளது மறுப்பை அரச தரப்பு வெளியே ஒரு பிரசாரமாக முன்னெடுத்தது.

உடனே இப்போது புலிகள் விழித்துக் கொண்டு “அரசியல் பேச்சுக்கு நாம் தயார்” என்று உரத்துச் சொல்கிறார்கள்.

புலிகள் பந்தை திருப்பியடிக்கும் நேரம் இது. அரசியல் பேச்சு இப்போது வேண்டாம் என்று தாம் சொன்னது அரசுக்கு சாதகமாகி விட்டது என்பதை உணர்ந்து கொண்டனர் புலிகள்.

எனவே-அரசை விட உரத்த குரலில் அரசியல் பேச்சுக்குத் தயார் என்று புலிகள் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது பந்து அரசின் எல்லைக்குள் வந்து நிற்கிறது.

அரசியல் தீர்வுத் திட்டம் தயார் என்று சொல்லி பந்தை தடுத்தாடிக் கொண்டிருக்கிறது அரசு. இதனை நீண்ட நாள் செய்ய முடியாது. கேட்டுப் புளித்து விடும்.

எனவே-உடனடியாக அரசியல் தீர்வை முன்வைக்கும் தேவை இருக்கிறது.

அரசியல் திட்டம் தயார் என்கிறார் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அரசியல் கட்சிகளின் கருத்தையறிந்து கொண்டிருப்பதாகக் கூறுகிறார் நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

திட்டத்தை தயாராக வைத்துக்கொண்டு தான் ஏனைய கட்சிகளின் கருத்துக்களை அறிகிறார்களா? அல்லது இனிமேல்தான் திட்டம் தயாரிக்கப்படப் போகிறதா என்பது தெரியவில்லை.

தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை ஈ.பி.ஆர்.எல்.எஃப் மட்டுமே தீர்வுத் திட்டம் எதனையும் முன்வைக்கவில்லை.

அரசாங்கத்தின் மனமறிந்து நடக்க நினைக்கிறார்களா தெரியவில்லை.

ஏனைய தமிழ் கட்சிகள் ஈ.பி.டி.பி, புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவை ஏறக்குறைய ஒரேவிதமான தீர்வுத் திட்டத்தையே பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் முன்வைக்கின்றன.

சமஷ்டிக்கு குறைவான தீர்வு சாத்தியமில்லை என்பதையே வடக்கு-கிழக்கு தமிழ் கட்சிகள் முன்வைக்கும் திட்டங்களும் அரசுக்கு தெளிவுபடுத்துவதாக அமைகின்றன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி இரண்டும் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் கட்சிகளது நிலைப்பாட்டை ஆதரிக்க முன்வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதே சமயம் மலையக தமிழ் மக்களது பிரச்சனையில் இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி இரண்டும் மேற்கொள்ளும் நிலைப்பாட்டை ஆதரிப்பது என்று புளொட், ஈ.பி.டி.பி. இரண்டும் சம்மதம் தெரிவித்துள்ளன.

எனவே-வடக்கு-கிழக்கு இணைந்த தமிழ் பேசும் மக்களது தாயகக் கோட்பாடும், சமஷ்டி முறையிலான தீர்வும் தமிழ் அரசியல் கட்சிகளது ஏகமனதான முடிவாக மாறியிருக்கிறது.

அரசு தனது தீர்வுத் திட்டத்தில் இதனை கவனத்தில் கொள்ளத் தவறின் தமிழ் கட்சிகள் அரசுக்கு ஆதரவாகப் பேசும் நிலையும் இல்லாமல் போகலாம்.

ஆக, அரசு அரசியல் தீர்வு விடயத்தில் ஒரு முடிவை முன்வைத்தேயாக வேண்டிய நிலை நெருங்கிவிட்டது.

இதற்கு சர்வதேச மத்தியஸ்தர் தேவையில்லை. அரசியல் தீர்வு என்பது இரகசியமான விடயம் அல்லவே.

□□

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்கா-சீனா போன்ற நாடுகளுக்கும் போய் புலிகளை அரசுடன் பேசுவதற்கு வலியுறுத்துங்கள் என்று கூறிவிட்டு வந்தார் அல்லவா?

இப்போது புலிகளின் முறை: ஜனாதிபதி சந்திரிக்கா கடந்தவார இறுதியில் கோப்பன்ஹேகனில் நடந்த உலகத் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்.

அங்கு அவர் சந்தித்தது உலகத் தலைவர்களை மட்டுமல்ல, புலிகளின் அறிக்கையையும் தான்.

ஜனாதிபதி செல்வதற்கு முன்னரே புலிகளது அறிக்கை உலகத் தலைவர்களது கரங்களுக்கு சென்று விட்டது.

**“இலங்கை அரசை புலிகளோடு பேசச் சொல்லுங்கள். போர் இடை நிறுத்தத்தை நிரந்தரமான போர் நிறுத்தமாக்கவே புலிகள் விரும்புகிறார்கள். இதற்கெல்லாம் இலங்கை அரசை ஒத்துழைக்கச் சொல்லுங்கள்.”**

என்று புலிகளது பாரிஸ் கிளை சார்பில் திலகரின் கையொப்பத்தோடு உலகத் தலைவர்களுக்கு அறிக்கைகள் கொடுக்கப்பட்டன.

“லக்ஷ்மன் கதிர்காமர் மூன்றடி பாய்ந்தால் நாம் முப்பதடி பாய்வோம்” என்று புலிகள் காட்டியிருக்கிறார்கள்.

அவர், இவருக்கு சொல்லுங்கள் என்கிறார். இவர், அவருக்குச் சொல்லுங்கள் என்கிறார். வெளிநாடுகளுக்கும் ஒரே குழப்பம்.

“நாங்கள் தயார் அவர்கள் தயாராக இல்லை,” என்றுதான் இரு தரப்புமே உலக அரங்கில் சொல்லுகின்றன.

இந்த நிலையில், “நாங்கள் தயார்! திட்டம் இருந்தால் அரசு முன்வைக்கட்டும்.” என்று புலிகள் சொல்லுவதற்குச் சற்று வலு அதிகம்.

அதே சமயம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு புலிகளை கடித்துள்ளது. அரசைப் பாராட்டியுள்ளது.

கடந்த காலங்களிலும் அந்த ஆணைக்குழு புலிகளது மனித உரிமை மீறல்களை கண்டித்திருக்கிறது. அதே சமயம் இலங்கை அரசும் கண்டனத்திற்கு உள்ளாக்கப்பட்டது. இம்முறை அப்படியல்ல: அரசுக்கு பாராட்டு கிடைத்திருக்கிறது. புலிகளுக்கு குட்டு விழுந்திருக்கிறது.

புதிய அரசு மனித உரிமைகள் விடயத்தில் சுத்தமான கரங்களையுடையதாக இருப்பது வெளியுலகில் மதிப்பை ஏற்படுத்தும்.

அரசுக்கு எதிராக மனித உரிமைகள் விடயத்தில் குறை கூறுவதற்கு புலிகளிடம் காரணம் எதுவும் இல்லை. ஆனால் புலிகளைப் பற்றிக் கூற அரசிடம் நிறையத் தகவல்கள் உண்டு.

சென்ற வாரம் முரசு வெளியிட்டிருந்த செய்தியில், சர்வதேச அரங்கில் அரசுக்கும் – ‘புலிகளுக்கும் இடையே பிரசாரப் போர் ஆரம்பம்’ என்றிருந்தது.

உலகத் தலைவர்களுக்கு புலிகள் தெரிவித்த அறிக்கை அந்தச் செய்தியை உடனடியாக ஊர்ஜிதப்படுத்தி விட்டது.

“பேச்சுவார்த்தை தோல்வியடையும் என்றால் வெளிநாட்டு மத்தியஸ்தத்தை நாடுவோம்.” என்று பிரபாகரன் தெரிவித்திருக்கிறார்.

வெளியுலகை தமது பக்கம் வென்றெடுப்பதில் இரு தரப்பும் கவனமாக இருப்பதையே அவதானிக்க முடிகிறது.

புலிகளுக்குச் சார்பாகப் பேசுவதற்கு வெளிநாடு எதுவும் உடனடியாக முன்வருமா என்பது கேள்விக்குறிதான்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை, தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் கொலை போன்றவற்றிற்கு புலிகளே காரணம் என்ற கருத்து வெளியுலகில் இருக்கிறது.

புலிகளது கோரிக்கைகளில் நியாயம் இருப்பதாக நினைத்தாலும், அரசியல் கொலைகளுக்கு காரணமான அமைப்பு என்ற பழி வெளியுலக ஆதரவை நேரடியாகப்பெற தடையாகவே இருக்கும்.

தமிழ் மக்களின் ஆதரவு தமக்கு இருப்பதாகக் காட்டவே புலிகள் விரும்புகிறார்கள்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது பிரதிநிதிகள் கடந்தவாரம் யாழ் சென்ற போது, யாழ் பல்கலைக் கழக மாணவர்களது மாபெரும் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஆங்கிலத்திலும் அரசுக்கு எதிரான சுலோக அட்டைகள் காணப்பட்டன. வெளிநாட்டு பிரதிநிதிகளைக் கருத்தில் கொண்டே அவை இடம்பெற்றன என்பது தெளிவான விசயம்.

அரசுக்கு வடக்கில் ஆதரவு இருப்பதாக கருதுவது தவறு என்று உணர்த்தவே புலிகள் முயன்றார்கள்.

பல்கலைக்கழக அனுமதியில் நடக்கும் அநீதியை களைய அரசு இன்னமும் முயலவில்லை. அதற்கு எதிராகவே போராட்டம் என்றபோதும், வெளி நாட்டுப் பிரதிநிதிகள் யாழில் நின்ற சமயத்தில் போராட்டம் நடத்தப்பட்டமை ஒரு கல்லில் இரு மாங்காய்.

எனினும் தற்போதைக்கு வெளியுலக ஆதரவு சந்திரிக்கா அரசுக்கு எதிராகப் புலிகளுக்கு கிடைப்பது கடினம்.

நாரதர்

---

## அதிரடி அய்யாத்துரை



தமிழ் பேசும் வெகுஜனப் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து பேசின வையல்லோ. அது பற்றி ஒரு தவறான செய்தி வந்தது பாருங்கோ. யாப்பை வரையும் கடமை நீலமானவருக்கு எண்டு செய்தி வந்தது. உண்மையாக நடந்தது என்னவென்றால் கிழக்கின் தனித்துவக் கட்சி தலைவரிடம்தான் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதாம். கூட்டான கட்சி வட்டாரம் ஏன் பாருங்கோ தவறான செய்தி கொடுத்து விளம்பரம் தேடுகினம்!

ரெண்டு எழுத்தாருக்கும் போட்டியா ஒண்டும் செய்ய மாட்டம் எண்டு போட்டு தெரிவுக்குழுவுக்கு கூட்டான தமிழ் கட்சி யோசனை வைச்சது எதிலை சேருது? அதிகாரமட்டம் யோசனையை வைக்க வேணும். அதை தாங்கள் பரிசீலிக்க வேணும் எண்டதுதானே ரெண்டு எழுத்தாரின் பொலிஸி. கூட்டான கட்சி ஓடிப்பொய் யோசனையை சமர்பித்தது முந்திச் சொன்ன கருத்துக்கு முற்றிலும் மாறல்லோ?

யாழில் உள்ள வணக்கத்துக்குரியவர் அங்கு உண்ணாவிரதமிருக்கும் சீருடைக்காரர் விடயத்தில் கவலையாக இருக்கிறாராம். கொழும்பில் பேசிப்பார்த்து அவையை விடுவிக்கச் சொல்லி கடிதம் எழுதியிருக்கிறார். ஆனால், ஒரு விசயம் பாருங்கோ. ரெண்டு எழுத்தாரிடம் சின்னதாக் கூட அவர் ஒரு வேண்டுகோளும் விடேல்லை. இது ரெண்டு எழுத்தாருக்கு சார்பான போக்கு. இரு பக்கமும் எல்லோ வேண்டுகோள் விடுக்க வேணும் எண்டு சிலர் சொல்லுகினம். நான் என்ன நினைக்கிறேன் எண்டால், ரெண்டு எழுத்தாரிடம் கேட்டால் நியாயம் கிடைக்காது எண்டு அவர் நினைச்சிருக்கலாம். அதுதான் வேண்டுகோள் விடுக்கேல்லையாக்கும்.

தமிழுக்கு சம உரிமை எண்டு வெகுஜன பிரதிநிதிகளும் குரல் கொடுக்கினம்தான். அந்த வெகுஜனப்பிரதிநிதிகளுக்கு அதிகார மட்டத்தார் அனுப்பும் கடிதங்களே தனிச் சிங்களத்திலை இருக்குதாம். சுட்டிக்காட்டினா 'சொறி' சொல்லுகினமாம். ஆனால் தொடர்ந்தும் சிலர் த.சி. விலைதான் அனுப்புகினமாம்.

ஒரு தமிழ் பேசும் பிரதிநிதி என்ரை காதிலை சொன்ன அரசியல் ஹைக்கூ கவிதை.

**“தமிழுக்கு புறக்கணிப்பு....!**<br>**தமிழ் பேசும் பிரதிநிதிகள் விவாதித்தனர்-**<br>**சுத்தமான ஆங்கிலத்தில்!”**

திருவான மலையிலை மீளக் குடியேற்ற விடயத்திலை கிழக்கின் தனித்துவத் தலைவர் துணிச்சலாய் நடந்திருக்கிறார். மஞ்சள் உடைக்காரர் சிலர் முகம் சுளிச்சினமாம். அவை போட்ட தடைகளையும் மீறித்தான் தனித்துவத் தலைவர் சாதிச்சிருக்கிறாராம். பாராட்டவேண்டிய சங்கதி.

முன்னாள் வெகுஜனப் பிரதிநிதிகள் சிலர் தங்கும் விடுதியை விட்டு வெளியேற மனம் இல்லாமல் ஒட்டிக்கொண்டிருக்கினமாம். நவமான இரத்தினமும் அதில் ஒருவர். குடும்பம் வெளிநாட்டிலை. அவர் ஏன் ஒட்டிக் கொண்டிருக்கிறாரோ தெரியேல்லை. ஆசை யாரை விட்டது? ஓசியிலை கிடைச்சா அனுபவிக்காமல் விட மனம் வருமோ?

ரெண்டு எழுத்தார் சிறைக்கதவம் திறந்து போன பிறகு அயல் நாட்டிலை நம்மவர்களுக்கு வேண்டா விருந்தாளிகள் உபசரிப்புத்தான் கிடைக்குதாம். செல்வி படு கோபத்தில் இருக்கிறாராம்.

தமிழில் பேசுவது தரக்குறைவு எண்டு நினைப்போருக்கு இந்த பாடல் சமர்ப்பணம். எழுதியது மு.வீரையன்.

**“தாய்ப்பாலில் சத்தில்லை என்றார்-பின்**<br>**தாயன்பு அத்துணை சரியில்லை என்றார்,**<br>**தாய்ப்பாலில் சத்துண்டு என்றால்-நாம்**<br>**நக்கிக் குடித்திடச் சென்றிடு வோமோ?**<br>**ஏய்ப்பார்கள் எதையேனும் சொல்வி-அது**<br>**இந் நாட்டுக் கல்வியை எரிக்கின்ற கொள்ளி!**<br>**மாய்ப்போம் என்றிளைஞர்கள் சுற்றி-ஒரு**<br>**மந்திரச் சொல் என்று கூறட்டும்! வெற்றி!**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அரசியல் தொடர் 19

## அற்புதன் எழுதுவது

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை


வேலுப்பிள்ளை பிரபாகரன்


அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்

# அமுதர் சொன்ன மாலுமிக் கதை

### சுதந்திரன் எதிர்ப்பு

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தப் போவதாக ஜே.ஆர். அரசு அறிவித்தது.

தேர்தலில் பங்குகொள்வது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்தது.

புலிகள் இயக்கம், ஈழ மாணவர் பொதுமன்றம் (G.U.E.S), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) ஆகிய அமைப்புக்கள் உள்ளூராட் சித் தேர்தலை நிராகரிக்க வேண்டும் என்று முடிவு செய்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளும் பிளவுகள் ஏற்பட்டிருந்தன.

கூட்டணியின் குரலாக விளங்கிய 'சுதந்திரன்' பத்திரிகை கூட்டணியின் போக்கை கடுமையாகச் சாடத் தொடங்கியது.

கூட்டணிக்கு ஏற்பட்ட வீழ்ச்சியில் 'சுதந்திரன்' பத்திரிகையின் பங்கும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

'சுதந்திரன்' பத்திரிகை தந்தை செல்வநாயகத்தின் மறைவின் பின்னர் அவரது மகன் சந்திரகாசனின் பொறுப்பில் இருந்தது.

கூட்டணியை கண்டித்து 'சுதந்திரன்' வெளியிட்ட கருத்துக்களை சந்திரகாசனும் தடுக்கவில்லை.

'சுதந்திரன்' பத்திரிகைக்கு போட்டியாக தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு பத்திரிகை வெளியிட முன்வந்தது.

கூட்டணியின் உத்தியோகபூர்வ பத்திரிகை என்ற அறிவிப்போடு 'உதய சூரியன்' வெளியிடப்பட்டது.

'சுதந்திரன்' பத்திரிகையின் பிரசாரத்தை முறியடிப்பதே அதன் நோக்கமாக இருந்தது.

ஆனாலும், 'சுதந்திரன்' பத்திரிகையோடு 'உதயசூரியனால்' போட்டி போட முடியவில்லை.

உதயசூரியன் பத்திரிகையிலே 'பறவைகளே.... பறவைகளே' என்ற தலைப்போடு ஆசிரியர் தலையங்கம் வெளிவரும்.

# உள்ளூராட்சித் தேர்தலில் புலிகளின் வேட்டுக்கள்

### சோறும் வேண்டும்

சுதந்திரனில் அதன் ஆசிரிராக இருந்த கோவை மகேசன் எழுதும் அரசியல் மடலுக்கு 'பறவைகளே... பறவைகளே' என்ற தலையங்கத்தின் கீழ் பதில் வரும்.

**"சோறு வேண்டாம். சுதந்திரமே வேண்டும். பாலம் வேண்டாம். ஈழமே வேண்டும்."**

என்று சுதந்திரனில் கருத்து வெளியிடப்படும்.

அதற்கு 'உதயசூரியன்' பின்வருமாறு பதில் சொல்லும்:

**"பறவைகளே.... பறவைகளே.... எங்களுக்கு சோறும் வேண்டும்: சுதந்திரமும் வேண்டும்."**

**"எங்களுக்கு பாலமும் வேண்டும். அந்த பாலத்தை வைத்தே ஈழம் உருவாக்கும் விவேகமும் வேண்டும,"**

என்ற ரீதியில் பதில் சொல்லப்படும். சுவையான பதில்தான். ஆனால் சோறும் வேண்டும் என்று சொன்னவர்களை துரோகிகள், "எட்டப்பர்கள்" என்று முன்னர் வசை பாடியவர்களும் தாங்களே என்பதை கூட்டணியினர் மறந்து போனது தான் வேடிக்கை.

போராளி அமைப்புக்கள் கூட்டணியை கடுமையாக எதிர்க்கத் தொடங்கியதால், உதயசூரியன் பத்திரிகை பின்வருமாறு எழுதியது;

"பறவைகளே.... பறவைகளே... நீங்கள் குழுக் குழுவாய் நிற்கிறீர்கள். பறப் பறவாய் போவீர்கள்."

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து 'சுதந்திரன்' பத்திரிகை ஆசிரியர் கோவை மகேசன், ஈழவேந்தன் தர்மலிங்கம் ஆகியோர் வெளியேறினார்கள்.

**'தமிழீழ விடுதலை அணி'** என்ற பெயரில் அவர்கள் இயங்கத் தொடங்கினார்கள்.

கருத்தரங்குகள் நடத்தி கூட்டணியின் சரணடையும் போக்கை கடுமையாக விமர்சித்தார்கள்.

இவற்றின் மத்தியிலேதான் தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளூராட்சித் தேர்தலை சந்தித்தது.

தேர்தல் இப்போது வேண்டாம் என்றனர் இளைஞர்கள்.

வேட்பாளர் பட்டியலைத் தயாரித்தது தமிழர் விடுதலைக் கூட்டணி.

### புலிகள் எதிர்ப்பு

இத் தேர்தலின் போதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணியை 'துரோகிகள்' என்று முதன் முதலாக புலிகள் பகிரங்கமாக அறிவித்தார்கள்.

பிரபாகரனின் பெயரில் புலிகளால் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது:

"தமிழீழ மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அரச பயங்கரவாத ஓநாயின் வாயிலிருந்து வடிந்து கொண்டிருக்கும் குருதி கூடக் காயாத நிலையில், உள்ளூராட்சித் தேர்தலில் எம் மக்களின் ஒரு சிலரின் வாக்குகளை வெற்றி கொள்வதன் மூலம் வெளியுலகிற்கு அரச பயங்கரவாதத்தை நியாயப்படுத்த முனையும் சிங்கள இனவாத அரசிற்கு சார்பாக இனியும் இங்கு இயங்கிக் கொண்டிருக்கும் துரோகிகளின் செயல்களை எம்மால் எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது.

**"தமிழீழ மக்கள் சிறீலங்காவின் தேர்தல் மாயையில் இருந்து விடுபட வேண்டும். வெகுஜன ஆயுதப் போராட்டத்திற்கு அணி திரள வேண்டும்."**

இதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி சொன்ன பதில் இது:

"தமிழீழத்தின் சகல நிர்வாக அமைப்புக்களையும் நாம் கைப்பற்ற வேண்டும். அதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நடத்திச் செல்ல முடியும். இதனை தம்பிமார் விளங்கிக் கொள்ள வேண்டும்."

என்று சொன்னது கூட்டணித் தலைமை. அடிக்கடி அமிர் சொல்லுவார்:

**"ஒரு கப்பலுக்கு ஒரு மாலுமிதான் இருக்க முடியும். அப்படியானால்தான் கப்பல் கரைசேரும். தம்பிமார் மாலுமி தேவை இல்லை என்கிறார்கள்." என்பதுதான் அமிர் சொல்லும் விளக்கம்.**

**"கப்பல் கவிழ்வதை வேடிக்கை பார்க்கும் மாலுமி வேண்டாம் என்றுதான் சொல்லுகிறோம்."** என்றார்கள் இளைஞர்கள்.

கப்பல் திசை மாறுகிறது என்று சொன்னால் 'உங்களுக்கு விவேகம் போதாது.' என்று சொல்லிவிட்டு, கப்பலில் இருப்பவர்களின் உயிர்களை பகடைக்காய்களாக்கும் மாலுமி தேவைதானா?

என்று கருத்தரங்குகளில் சுடச்சுட பதில் கொடுத்தது ஈழமாணவர் பொதுமன்றம். பொதுக்கூட்டங்களில் டேவிட்சனும், கருத்தரங்குகளில் ரமேஷ், சிறீதரன் ஆகியோரும் ஈழமாணவர் பொதுமன்றம் சார்பாக கூட்டணியின் கருத்துகளுக்கு உடனுக்குடன் பதில் அளித்தனர்.

### மக்களின் சந்தேகம்

இந்த இடத்தில் ஒரு விடயத்தை சொல்ல வேண்டும். கூட்டணிக்கு தமிழ் பகுதிகளில் அப்போதிருந்த பிடிப்பு பலமானது.

சட்டத்தரணிகள், ஆங்கிலப் புலமையாளர்கள், அனுபவசாலிகள் என்ற தகுதிகள் இருந்தால்தான் தலைமை என்று மக்களில் ஒரு பகுதியினர் கருதிக்கொண்டிருந்தனர்.

தம்மிடம் இல்லாதது இன்னொருவரிடம் இருந்தால், தம்மைத் தாழ்வாக கருதிக் கொள்ளும் இந்த மனப்போக்குத்தான் 'திறமை' என்ற பெயரில் தவறான சிலர் தலைவர்களாகவும் காரணமாக இருந்தது.

கருத்தரங்குகளில் மக்கள் நிறையக் கேள்விகள் கேட்டனர். எல்லாவற்றுக்கும் ஈழமாணவர் பொதுமன்றம் பொறுமையாகப் பதில் சொன்னது.

"நீங்கள் சின்னப் பொடியள். பெரிய தலைவர்களாலேயே முடியாத காரியத்தை நீங்கள் எப்படி செய்யப் போகிறீர்கள்?"

என்றெல்லாம் கேள்விகள் எழுப்பப்பட்டன. கூட்டணி தலைவர்கள் பிழையான வழியில் செல்கிறார்கள் என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டனர்.

ஆனால், கூட்டணிக்கு மாற்றாக ஒரு தலைமைத்துவத்தை ஏற்படுத்த முடியுமா? என்பதே மக்களது கேள்வியாக இருந்தது.

இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுவதிலும், இளைஞர்களாலும் அரசியல் நடத்த முடியும் என்பதை நிரூபித்ததிலும் ஈழமாணவர் பொதுமன்றம் மேற்கொண்ட பிரசார முறைகள் முக்கிய பங்கு வகித்ததை மறுக்க முடியாது.

திட்டமிடப்பட்ட, உத்வேகமான பிரசாரத்தை குறைந்த ஆட்பலத்தோடு வடக்கு-கிழக்கு முழுவதும் நடத்திக் காட்டியது ஈழமாணவர் பொதுமன்றம்.

எண்ணிப்பார்த்தால் 50 பேர் கூட 1983ற்கு முன்னர் ஈழமாணவர் பொதுமன்றத்தில் முழு நேர உறுப்பினர்களாக இருக்கவில்லை.

ஆனால், பிரசாரத்தால் மட்டும் தேர்தலில் போட்டியிடும் திட்டத்தை நிறுத்த முடியுமா?

### எச்சரிக்கை

எடுத்துச் சொன்னால் கேட்கும் மனப்பக்குவம் இல்லாதபோதுதான் அடித்துச் சொல்லும் எண்ணம் உருவாகிறது.

1983 உள்ளூராட்சித் தேர்தலிலும் அதுதான் நடந்தது.

கூட்டணி வேட்பாளர்களின் வீட்டுக் கதவுகள் ஆயுதம் ஏந்திய புலிகளால் தட்டப்பட்டது.

"தேர்தலில் போட்டியிடக்கூடாது" என்றார்கள் புலிகள்.

மறுநாளே வேட்பு மனுக்களை வாபஸ் பெற்றனர் கூட்டணி வேட்பாளர்கள் சிலர்.

கூட்டணியின் பட்டியலில் யாழ் மாநகர சபை மேயர் பதவிக்கானவராகப் போட்டியிட்டவர் சட்டத்தரணி நாகராசா. அவரும் எச்சரிக்கப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக வடக்கில் போட்டியிட்டவர்கள் எச்சரிக்கைகளை அலட்சியம் செய்தனர்.

'இனி நடவடிக்கைதான்' என்று புலிகள் முடிவு செய்தனர். திட்டம் தயாரிக்கப்பட்டது.

1983 ஏப்ரல் 29ம் திகதியன்று பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி ஆகிய மூன்று இடங்களிலும் புலிகள் நடவடிக்கையில் இறங்கினர்.

### மூவர் மீது பாய்ச்சல்

ஈ.வி.இரத்தினசிங்கம் (பருத்தித்துறை) எஸ்.எஸ்.முத்தையா (சாவகச்சேரி) ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இருவரும் ஐ.தே.கட்சி வேட்பாளர்கள்.

அதே தினத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட இன்னொருவர் எஸ்.எஸ்.இராஜரத்தினம். இவர் ஐ.தே.கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளராக அப்போது விளங்கியவரான கே.கணேசலிங்கத்தின் மெய்க்காப்பாளராக இருந்தவர்.

கே.கணேசலிங்கம்தான் தற்போது கொழும்பு மேயராக இருக்கிறார்.

இதையடுத்து ஐ.தே.கட்சி வேட்பாளர்கள் பலர் வாபஸ் பெற்றனர்.

"....ஆகிய நான் ஐ.தே.கட்சி உறுப்பினரோ ஆதரவாளனோ இல்லை என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்."

என்ற விளம்பரங்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்தன: அவற்றைக் கண்ட வாசகர்களுக்கு வேடிக்கையாக இருந்தது.

தனது ஆதரவாளர்களுக்கு கைத்துப் பாக்கி வழங்கியது ஐ.தே.கட்சி அரசு.

கைத்துப்பாக்கியோடும் பாதுகாப்போடும் அட்டகாசமாக நடமாடினார் ராஜசூரியர்.

இவரை மண்ணெண்ணை ராஜசூரியர் என்றும் அழைப்பார்கள்.

அரசுக்கு ஆதரவு வழங்குவது, ஆளும் கட்சியில் இருப்பது மூலம் சொந்த வியாபாரத்தில் ஈடுபடுவது என்பதே தமிழ் பிரமுகர்களது வழக்கமாக இருந்தது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி காலத்தில் கு.வினோதன் போன்றவர்கள் அவ்வாறு இருந்தனர்.

ராஜசூரியர் மண்ணெண்ணை கோட்டா மூலம் லட்சங்களை குவித்தவர்.

### மேலும் இருவர்

துப்பாக்கியோடு கார் ஒன்றில் சென்ற ராஜசூரியர் 11.6.83 அன்று புலிகளால் வழி மறிக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதற்கு முன்னர் 3.6.83 அன்று ஐ.தே. கட்சியைச் சேர்ந்த திலகர் என்பவர் யாழ்நகரில் வைத்து புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவற்றையடுத்து ஆளும் கட்சி ஆதரவாளர்கள் ஓடி ஒளிந்தனர். ஐ.தே. கட்சிக்கு வடக்கில் அமைப்பாளர்களே இல்லாமல் போனார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்கள் பலர் வாபஸ் பெற்றபோதும் தேர்தலில் போட்டியிடுவது என்ற முடிவை கூட்டணி மாற்றிக் கொள்ளவில்லை.

இந்த இடத்தில் ஒரு சுவாரசியமான சம்பவம் ஒன்று:

கூட்டணி வேட்பாளர்களில் ஒருவராக போட்டியிட்டவர் சண்முகநாதன் (மணி). இவர் நல்லூர் சட்டநாதர் கோவிலடியைச் சேர்ந்தவர்.

தீவிரமான கூட்டணி அபிமானி. அவரது வீட்டுக்குச் சென்ற புலிகள், 'தேர்தலில் போட்டியிட வேண்டாம்' என்று கேட்டனர். சண்முகநாதன் உடனடியாக தலைவர் சிவாவுக்கு செய்தியனுப்பினார்.

சிவா அப்போது நல்லூரில் இருந்த கூட்டணி அலுவலகத்தில் இருந்தார். தபால்கள் மூலமாக வாக்கு கேட்கும் பிரசாரத்தை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.

"ஐயா...!சண்முகநாதன் விலகப் போகிறாராம். போட்டியிட வேண்டுமானால் பாதுகாப்புக் கேட்கிறார்."

என்றார் செய்தி கொண்டு வந்தவர். சிவா டென்ஷன் ஆகிவிட்டார்.

"நாங்கள் போய் வீடு வீடாக பாதுகாப்பு கொடுக்க முடியுமோ? விரும்பினால் போட்டியிடட்டும். விரும்பாவிட்டால் விலகட்டும்." என்றார் சிவா.

கூட்டணி திணறிப்போய் கலகலக்கத் தொடங்கியதை அந்த உரையாடல் பிரதிபலித்தது.

1983 மே 18ம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு ஆரம்பித்தது.

வாக்களிப்பு நிலையங்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

கூட்டணித் தலைமைக்கு பலத்த அடி. வாக்களிப்பு மந்தமாகவே நடந்து கொண்டிருந்தது.

தேர்தலில் வாக்களிக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி விடுத்த வேண்டுகோளை வடமாகாணத்தில் 80% வீதத்திற்கும் அதிகமான மக்கள் நிராகரித்தனர்.

வாக்களிக்கும் வசதி இருந்தும் 80% வீதமான மக்கள் நிராகரித்த தேர்தலை ஜனநாயகம் பேசிய கூட்டணித் தலைமையினர் வெற்றி என்று கொண்டாடியதுதான் வேடிக்கை.

வாக்களிப்பு நடந்து முடிவதற்கு இடையில் தாக்குதல் ஒன்றை நடத்த புலிகள் திட்டமிட்டனர்.

யாழ்ப்பாணம் கந்தர் மடத்தில் இருந்த பாடசாலையில் வாக்களிப்பு நிலையம் ஒன்று இருந்தது. அதனை நோக்கி புலிகளின் அணி ஒன்று சைக்கிள்களில் சென்றது.

அந்த அணியில் கிட்டுவும் இருந்தார். வாக்குச்சாவடியை இராணுவத்தினரும், பொலிஸாரும் கூட்டாக காவல் காத்துக் கொண்டிருந்தனர்.

**(தொடர்ந்து வரும்)**


# ஐ.தே.க. ஆதரவாளர்கள் மூவர் சுட்டுக் கொலை!

**பருத்தித்துறை, வல்வை, சாவகச்சேரியில் சம்பவம்!!**

ஐக்கியதேசிய கட்சியின் ஆதரவாளர்கள் மூவர் இனந் தெரியாத நபர்களினால் நேற்று சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

1983 மே 18ம் திகதி கூட்டணி போட்டியிட்ட உள்ளூராட்சித் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் நடந்த வாக்களிப்பு: புலிகள் வெளியிட்ட புள்ளி விபரம்-

| | வல்வெட்டித்துறை | பருத்தித்துறை | யாழ் நகர் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| பகிஷ்கரித்தவர்கள் | 98 % | 99 % | 85 % | 85 % |
| வாக்களித்தவர்கள் | 2 % | 0.75 % | 13 % | 14 % |

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அலசுவது-இராஜதந்திரி

# பேச்சுவார்த்தையில் பிரெஞ்சு தொடர்பு

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமரசப் பேச்சுக்கள் குறித்த விடயத்தில் பிரான்ஸ் பற்றி வெகுவாகப் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

சந்திரிகா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமரச நடவடிக்கைகளில் மத்தியஸ்தத்தை வகிக்கும் வகையில் முன்னாள் பிரேஞ்சு இராஜதந்திரி ஒருவரை இலங்கைக்கு அனுப்பிவைக்க பிரேஞ்சு அரசாங்கம் முன்வந்திருந்தது.

சந்திரிகா அரசாங்கமே பிரான்ஸிடம் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமரசமுயற்சிகளில் மத்தியஸ்தத்தை வழங்க உதவும்படி கோரியிருந்தது. இதனையடுத்தே அந்த முன்னாள் இராஜதந்திரியை அனுப்பி வைக்க பிரான்ஸ் முன்வந்திருந்தது.

ஆர்ஜன்டீனாவுடன் யுத்தத்தை மேற்கொண்ட போதுகூட பிரான்ஸ் பிரிட்டனை ஆதரிக்கும் வகையில் நடந்து கொள்ளவில்லை.

இந்நிலையில் அரசியல், பொருளாதார, இராணுவ விவகாரங்களில் மேற்கத்தேய நாடுகளுடன் பிரான்ஸ் இணைந்திருந்தாலும், எப்போதும் தனது சொந்த நிலைப்பாடுகள், கொள்கைகளின் அடிப்படையிலேயே பிரான்ஸ் தீர்மானங்களை எடுத்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

பிரான்ஸிடம் மத்தியஸ்தத்தை கோரியது பற்றி வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கருத்து வெளியிடுகையில், பிரான்ஸ் இலங்கையுடன் நீண்ட காலமாக நல்ல இராஜதந்திர தொடர்புகளைக் கொண்டுள்ள ஒரு நாடென்றும், இதன்காரணமாகவே பிரான்ஸிடம் சந்திரிகா அரசு, புலிகளுடனான சமரச நடவடிக்கைகளில் உதவும் வகையில் மத்தியஸ்த்தர்

நெருக்கமானவையாகவே இருக்கின்றன. அவர் அங்கு வாசஞ் செய்து உயர் கல்வி பெற்ற காலங்களில் பல்வேறு தொடர்புகளையும் கொண்டிருந்தார்.

அண்மையில் பிரான்ஸின் பிரபல பத்திரிகையான லே மொண் (LeMonde) ஜனாதிபதி சந்திரிகாவைப் பேட்டி கண்டிருந்தது.

இப்பத்திரிகைக்கான பேட்டியில் சந்திரிகா தமது அரசின் நோக்கங்களை விரிவாக வெளியிட்டிருந்தார்.

முன்னைய பேட்டிகளில் அரசியல் ரீதியான அணுகுமுறைகளில் பெரிதும் நம்பிக்கை தெரிவித்து தமது கருத்துக்களை சந்திரிகா வெளியிட்டிருந்தார். கூடவே கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் பாராளுமன்றத் தேர்தல்களில் வெற்றிபெற்று பிரதம மந்திரியாக இருந்த தறுவாயில் 'பிபிஸி'க்கு வழங்கிய

சந்திரிகா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே தோன்றியுள்ள முரண்பாடுகளில் இந்த முன்னாள் பிரேஞ்சு இராஜதந்திரி குறித்த விவகாரமும் இடம்பெறுகின்றது.

பிரேஞ்சு அரசாங்கம் சமரச முயற்சிகளில் மத்தியஸ்தம் வகிக்கும் வகையில் இலங்கைக்கு அனுப்பிவைக்கவிருந்த பிரெஞ்சு இராஜதந்திரி குறித்து தமிழீழ

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

பிரெஞ்சு அரசினால் தெரிவு செய்யப்பட்ட இராஜதந்திரி ஜனாதிபதி சந்திரிகாவின் ஒரு நண்பர்; இந்நிலையில் அந்த இராஜதந்திரியின் மத்தியஸ்த்தம் நடுநிலையானதாகவும் நேர்மையானதாகவும் இருக்க முடியாதென்பதே தமிழீழ விடுதலைப் புலிகளின் வாதமாகும்.

பிரான்ஸ் கைத்தொழில் ரீதியாகப் பெரிதும் வளர்ச்சிகண்ட ஒரு நாடாக இருக்கின்றது. அரசியல் நடவடிக்கைகளில் அதன் போக்கு முற்று முழுதான ஏகாதிபத்தியக் கொள்கைகளைக் கொண்டிராததாகவும்,

ஒருவரைக் கொடுத்துதவும்படி கோரியதாக தெரிவித்தார். கூடவே பிரான்ஸ் அரசாங்கம் அறிவித்திருந்த மத்தியஸ்த்தர் எவ்வகையிலும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பழக்கமானவரோ அல்லது இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புகளைக் கொண்டவரோ அல்ல என்றும் திரு.கதிர்காமர் தெரிவித்திருந்தார்.

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், இலங்கை நீண்ட காலமாக பிரான்ஸுடன் சிறந்த இராஜதந்திர உறவுகளைப் பேணி

வருவதனாலேயே பிரேஞ்சு மத்தியஸ்தத்தைக் கோரியதாகத் தெரிவித்தார்.

ஆனால் இலங்கை அரசின் பிரான்ஸுடனான இராஜதந்திர உறவுகளைவிட ஜனாதிபதி சந்திரிகாவின் பிரான்ஸுடனான தனிப்பட்ட உறவு மிகவும் நெருக்கமானது.

இலங்கையிலிருந்தும் முன்பு பட்டப்படிப்புகளுக்காக வெளிநாடு செல்வோர் பெரும்பாலும் இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்களையும், கல்லூரிகளையுமே ஆக்கிரமிப்பதுண்டு.

ஆனால் சந்திரிகா தமது உயர்கல்வியை பிரான்ஸில் மேற்கொண்டிருந்தார்.

பேட்டியில் இலங்கை இராணுவத்தின் போக்கை சந்திரிகா கடுமையாகச் சாடியிருந்தார்.

ஆனால் ஜனாதிபதியாக பிரான்ஸின் லே மொண் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் சந்திரிகா இராணுவ நடவடிக்கைகளை நிராகரிக்காத நிலையில் தமது கருத்துக்களை வழங்கியிருந்தார். தேவைப்படும் பட்சத்தில் இராணுவ நடவடிக்கைகள் தவிர்க்கப்பட முடியாதவை என்ற தோறணையில் சந்திரிகாவின்




லே மொண் பத்திரிகைப் பேட்டி விளங்கியிருந்தது.

எனவே தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், சந்திரிகா அரசுக்குமிடையிலான சமரசத்தில் பிரான்ஸின் மத்தியஸ்த்தம் என்று ஏற்படும் போது, சந்திரிகாவின் பிரேஞ்சுத் தொடர்புகளையும் எடைபோட வேண்டியது இன்றியமையாததாகின்றது.

சோஷலிஸத்தன்மைகளை உள்ளடக்கியதாகவும் இருக்கக் காணப்படுகின்றது.

இந்நிலையில் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற சர்வதேச அரசியல் நிலைப்பாடுகளில் பிரான்ஸ் 'எடுப்பார் கை பிள்ளை' போல நடந்து கொள்வதில்லை. தனது சுய மதிப்பீடுகள், மற்றும் அரசியல் நிலைப்பாடுகளின் அடிப்படையிலேயே பிரான்ஸ் சர்வதேச அரங்கிலும் முடிவுகளை எடுக்கின்றது.

அமெரிக்கா வியட்நாமில் நீண்ட யுத்தத்தை மேற்கொண்ட போது பிரான்ஸ் அந்த யுத்தத்தைக் கண்டித்திருந்தது. அமெரிக்காவின் ஏகாதிபத்தியப் போக்கை பிரான்ஸ் அன்று பெரிதும் ஆதரித்திருக்கவில்லை.

இதேபோல 1982ம் ஆண்டு போக்லண்ட் தீவு தொடர்பாக பிரிட்டன்

நீண்டகாலம் அங்கே தங்கியிருந்து உயர்கல்வி பெற்றதோடு பிரான்ஸின் மாணவ அமைப்புகளுடனும் நெருக்கமான தொடர்புகளை சந்திரிக்கா தனது மாணவப்பருவத்தில் கொண்டிருந்தார்.

வியட்நாமில் அமெரிக்கா நடத்திய நீண்டகால அக்கிரமிப்பைக் கண்டித்து சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் பிரான்ஸில் ஆட்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டபோது, அன்று பிரான்ஸிலிருந்த சந்திரிக்காவும் இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்றியிருந்தார்.

இது தவிர பிரேஞ்சு மொழியில் மிகச் சரளமாகப் பேசக் கூடிய ஜனாதிபதி சந்திரிகா, பிரான்ஸின் பிரபல செய்திப்பத்திரிகையான லேமொண்ணிலும் (Le Monde) ஒரு பத்திரிகையாளராகப் பணியாற்றியிருந்தார்.

இந்த வகையில் சந்திரிகாவின் பிரேஞ்சுத் தொடர்புகள் மிகவும்

## இனப் பிரச்னையைவிட மாணிக்கக்கல் விற்பனையில் ஆர்வங்காட்டிய ரொமேஷ் பண்டாரி

ஜி.பார்த்தசாரதி, ரொமேஷ் பண்டாரி போன்றோர் இலங்கை அரசுடனும், மற்றும் இலங்கையின் தமிழ் அரசியல் குழுக்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி மத்தியஸ்த்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தியாவின் பிரபல இராஜதந்திரிகளில் ஒருவரான ஜி.பார்த்தசாரதியே இந்திய அரசின் சார்பில் முதன்முதலாக இலங்கை இனப்பிரச்னை குறித்த மத்தியஸ்தத்தில் இறங்கியிருந்தார். ஆயினும் அவரது மத்தியஸ்த்தம் மிகக் குறுகிய காலமே இடம் பெற்றிருந்தது. இராஜதந்திரப் பணியிலிருந்தும் அவர் ஓய்வு பெற்றதையடுத்து திரு.ரொமேஷ் பண்டாரி என்ற மற்றொரு இந்திய இராஜதந்திரி இலங்கை இனப்பிரச்சனையில் மத்தியஸ்த்தம் வகிக்க முன்வந்திருந்தார்.

ஆனால் இந்த ரொமேஷ் பண்டாரி என்ற இந்திய இராஜதந்திரியின் போக்கு எவ்வகையிலும் திருப்திகரமானதாக அமைந்திருக்கவில்லை.

இலங்கைக்கு அவர் விஜயம் செய்து அன்றைய ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனைகளை நடத்தியதுடன், திரு.ஜயவர்த்தனாவுடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டு தனிப்பட்ட ரீதியில் நட்புறவுகளையும் வளர்த்துக் கொண்டார்.

இலங்கை இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக ஆராய்ந்ததைவிட இலங்கையின் மாணிக்கக்கல் விற்பனை பற்றிய அராய்ச்சியிலேயே ரொமேஷ் பண்டாரி என்ற அந்த இந்திய இராஜதந்திரி கூடுதல் கவனம் செலுத்தியதாகவும் அன்று பரிகாசம் செய்யப்பட்டிருந்தது.

இலங்கையில் அவர் நடந்துகொண்ட விதம் மட்டுமல்ல இந்தியாவில் அவர் கடந்த ஆண்டுகளில் வெளியுறவுச் செயலாளராகப் பதவி வகித்த போது பணிபுரிந்த விதம் குறித்தும் கடும் விமர்சனத்துக்குள்ளாகியிருந்தார்.

இந்திய வெளியுறவுக் கொள்கை, இந்திய அரசின் நிலைப்பாடு போன்ற அனைத்துமே தனது சிரசிலிருந்தே ஊற்றெடுப்பது போன்ற பாங்கில் அவர் மனம் போன போக்கில் பல தீர்மானங்களை மேற்கொண்டிருந்தார் என இந்திய வெளியுறவு வட்டாரங்களினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தார்.

எனவே இலங்கை அரசு இனப்பிரச்னை குறித்த வெளிநாட்டு மத்தியஸ்தத்தைக் கோரும் பட்சத்தில் கடந்தகால அனுபவங்களையும் கருத்தில் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகின்றது.

பிரான்ஸிடமிருந்தோ, அல்லது வேறு நாடுகளிடமிருந்தோ சந்திரிகா அரசு மத்தியஸ்த உதவியைக் கோரலாம். ஆனால் உதவிக்கு வரும் தனிநபரோ, அல்லது குழுவோ பக்கச் சார்பின்றி இருப்பதை சந்திரிகா அரசு உறுதிப் படுத்தவேண்டியது அவசியமானதாகின்றது.

இதே வேளை கடந்த ஒரு தசாப்த காலத்தில் இலங்கை இனப்பிரச்னை தீர்வு குறித்த அரசியல் ரீதியிலான அணுகுமுறைகள் எவ்வகையிலும் வெற்றியளிக்காதிருக்கக் காணப்படுகின்றன.

கடந்த காலங்களில் அரசியல் அணுகுமுறைகள் என்று ஆரம்பிக்கப்பட்டபோதிலும் அவற்றின் அடிநாதமாக இராணுவ நடவடிக்கைகளே விளங்கியிருந்தன.

அத்துடன் கடந்த கால ஐ.தே.ஆட்சியாளர்கள் அரசியல் தீர்வைக்காண வெளிநாட்டு உதவிகள் தேவையில்லை என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியிருந்தனர்.

நாட்டின் அபிவிருத்திக்கு சர்வதேச அரங்குகளில் நிதி உதவிகளைப் பெற்றபோதிலெல்லாம் இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்படும், உதவிப் பணம் எவ்வகையிலும் இராணுவச் செலவீனங்களுக்குப் பயன்படுத்தப்படமாட்டாதென இலங்கையின் அன்றைய ஆட்சியாளர்கள் உறுதியளித்திருந்தனர்.

ஆனால் இலங்கையின் கடந்த பத்து வருடகால வரவு செலவுத் திட்டங்களில் இராணுவச் செலவீனங்களுக்கே கூடுதலானளவு பணம் எப்போதும் ஒதுக்கப்பட்டு வந்துள்ளது.

இந்நிலையில் இனப்பிரச்னைத் தீர்வுக்கு வெளிநாட்டு உதவிகளை அரசியல் ரீதியாக நிராகரித்ததுடன், வெளிநாட்டு உதவிப் பணத்தை இராணுவச் செலவுகளுக்கே பெருமளவில் ஐ.தே.க.ஆட்சியாளர்கள் விரயமாக்கியிருந்தனர்.

எனவே வெளிநாட்டு உதவி, மற்றும் வெளிநாட்டு மத்தியஸ்த்தம் என்று இன்றைய ஆட்சியாளர்கள் காலடி எடுத்து வைக்கும் பட்சத்தில் தமது மனம் போன போக்கில் செல்வதைத் தவிர்க்கவேண்டியவர்களாகின்றனர்.

எந்தவொரு உதவியும், எந்தவொரு மத்தியஸ்தமும் நடுநிலையான- அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவே இருக்கவேண்டும்.
அரசியலில் 'கண்ணாமூச்சி' ஆட்டம் எந்தவகையிலும் உகந்ததல்ல.

## குட்டையைக் குழப்பிவிட்டு வேடிக்கை பார்த்த ஜோகிந்திரநாத் டிக்ஸிற்

ரொமேஷ் பண்டாரிக்குப் பின்னர் இலங்கை இனப்பிரச்னை குறித்த விடயத்தில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராக இருந்த ஜோகிந்ர நாத் டிக்ஸிற் பெரிதும் ஈடுபட்டிருந்தார்.

டிக்ஸிற்றின் காலப்பகுதியிலேயே இலங்கை, இந்திய உறவு, மற்றும் இந்தியாவுக்கும் இலங்கைத் தமிழ் அரசியல் குழுக்கள் என்பவற்றுக்குமிடையிலான உறவுகள், அரசியல் சமாச்சாரங்களில் பெருமளவு மாற்றங்கள் இடம்பெறலாயின.

திரு.டிக்ஸிற் ஒரு ஸ்தானிகர் என்ற நிலைக்கும் அப்பாற்பட்ட விதத்தில் இலங்கையின் இனப்பிரச்னை குறித்த விடயத்தில் அக்கறை காட்டியிருந்தார்.

அவரது பங்களிப்பு அனைத்துத்தரப்பினரையும் குழப்பமடையச் செய்ததுடன், இலங்கை இனப்பிரச்னைக்கு ஓர் 'அரைவேக்காடான' தீர்வுத்திட்டமாக இலங்கை- இந்திய ஒப்பந்தத்தையும் திணித்து விட்டிருந்தது.

இந்தியப் படையினர் வடக்கு- கிழக்குப் பகுதிகளில் அமைதிப் படையினர் என்ற ரீதியில் வந்திறங்கிப் பின்னர் ஒரு கொடிய யுத்தத்தையே வடக்கு, கிழக்கில் ஆரம்பித்தமைக்கும், இந்த தனிநபரான 'சுங்கான் புகைக்கும்' இராஜதந்திரி ஜே.என்.டிக்ஸிற்றே முக்கிய சூத்திரதாரியாக இருந்தார்.

ஜே.என்.டிக்ஸிற்றின் பங்களிப்பை தமிழீழ விடுதலைப்புலிகள் கூட கடுமையாக அன்று விமர்சித்திருந்தன-

அன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்து தமிழீழ விடுதலைப்புலிகளுடன் டிக்ஸிற் நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முறிவடைந்திருந்தன. இதற்கு டிக்ஸிற்றின் குழப்பகாரத்தனமான அணுகுமுறைகளே முக்கிய காரணங்களாக விளங்கின.

திரு.டிக்ஸிற் ஒரு விஷமத்தனம் மிக்க இராஜதந்திரி என்பதனை இன்று இந்திய அரசாங்கமே நன்கு உணர்ந்துள்ளது.

இலங்கையில் வடக்கு- கிழக்கு பிரச்னை ஓர் ஆயுதப் போராட்டமாக உருப்பெற்ற காலங்களில் இந்தியா, இலங்கை விவகாரத்தில் பெரிதும் ஈடுபாடுகொண்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட இலங்கையின் அனைத்து தமிழ் போராட்ட இயக்கங்களும் வளர்ச்சி பெற இந்தியாவே களம் அமைத்துக் கொடுத்திருந்தது.

தென்னிந்தியாவில் -தமிழகத்தில் இலங்கைத் தமிழ் போராட்ட இயக்கங்களுக்கு ஆதரவாகவும், அனுசரணையாகவும் இந்திய அரசு நடந்து கொண்ட அதேசமயம், இந்திய மத்திய அரசு இலங்கையின் அன்றைய ஜே.ஆர். அரசுடன் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தது.

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இந்தியாவே இலங்கைக்கு ஆரம்பத்தில் மத்தியஸ்தம் செய்வதில் ஆர்வம் காட்டியிருந்தது.

சிரேஷ்ட இந்திய இராஜதந்திரிகளான

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்


கென்னடி

# திறந்த காரில் ஒரு பிரபலக் கொலை

## தருவது-ரசிகன்

இரவு விடுதியில் இருந்து துப்பாக்கியோடு புறப்பட்டவனின் பெயர் ஜாக் ரூபி.

கறுப்பு கோட் அணிந்திருந்தான். தலையில் ஒரு தொப்பி மாட்டியிருந்தான்.

இரவு அழகிகள் அவனைக் கண்டதும் மரியாதையாக ஒதுங்கி நின்றனர்.

அவன்தான் இரவு விடுதியின் உரிமையாளன் என்பதால்தான் அந்த மரியாதை.

கோட் மறைப்புக்குள் கைத் துப்பாக்கி தயாராக இருந்தது.

அடுத்த சில மணி நேரங்களில் ஒரு கொலையைச் செய்யப்போகிறோமே என்ற பதட்டம் இல்லை. படபடப்பும் இல்லை.

ஏதோ கண்காட்சிக்கு செல்லும் சுவாரசியத்தோடு நடந்து சென்றான்.

□□

ஒஸ்வோட் தொடர்ந்து மறுத்தான்.

"என்னை அடித்து துவைத்து பிழிந்து போட்டாலும் ஒரே பதில்தான், நான் கென்னடியை கொல்லவில்லை... கொல்லவில்லை.... கொல்லவேயில்லை!"

சடங்கு எப்படி நடந்ததோ அப்படியே நம்மவரின் இறுதிச் சடங்கும் நடக்க வேண்டும்."

உத்தரவிட்ட ஜாக்குலினின் உடையில் இரத்தக் கறை.

கென்னடி சிந்திய இரத்தம் வாங்கிய உடையோடுதான் இறுதிச் சடங்கிலும் ஜாக்குலின் கலந்துகொண்டார்.

நீதிமன்றத்தில் ஒஸ்வோல்ட் இறக்கப்பட்டான். கூட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸ் திணறியது.

கூட்டத்துக்குள் இருந்து வெளிப்பட்டான் ஜாக் ரூபி.

நேராக ஒஸ்வோல்ட்டை நெருங்கினான். ஒஸ்வோல்ட் தன்னை நெருங்கி வரும் ஜாக் ரூபியை பார்த்தான்.

'ஆபத்து' என்றது உள்ளுணர்வு!

'ஒஸ்வோல்ட்-தப்பிக்கொள்' என்றது உள்ளுணர்வு.

ஒஸ்வோல்ட் உள்ளுணர்வின் உத்தரவை ஏற்பதற்கு இடையில்....

ஜாக் ரூபி கோட் மறைவில் இருந்த கைத்துப்பாக்கியை மின்னல் வேகத்தில் உருவினான்.

ஒஸ்வோல்ட்டை குறிபார்த்து சுட்டான். டுமில்... டுமில்..

மார்பில் பொத்தல்களோடு ஒஸ்வோல்ட்


ஆஸ்வால்டு சுடப்படும் காட்சி

# உலகை உலுக்கிய கொலை

உறுதியான குரலில் உரத்துச் சொன்னான்.

பொலிசுக்கு அவனை அடித்துக் கொல்லலாம் போல் இருந்தது. அமெரிக்காவின் ஜனநாயகம் அவர்கள் கரங்களைக் கட்டிப் போட்டுவிட்டது.

கென்னடியை சுட்டுவிட்டு மாடியில் ஒளித்து வைக்கப்பட்ட துப்பாக்கி சிக்கியது.

கைரேகைகளை ஒப்பிட்டும் பார்த்தார்கள். ஒஸ்வோல்டின் கைரேகைகளோடு கச்சிதமாகப் பொருந்தியது.

சந்தேகமேயில்லை, ஒஸ்வோல்ட் தான் கொலைகாரன்!

நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டியதுதான். சட்டம் இனி அவனைக் கவனிக்கும்.

நீதிமன்ற வளாகத்தில் கொலையாளியை சபிக்கவும், காணவும் கூட்டம், கூட்டமாய் மக்கள்.

□□

அழகி ஜாக்குலின் சோகத்திலும் கம்பீரமாய் இருந்தாள்.

'ஓ.... என் பிரிய கணவனே ! இனிய கென்னடி! நீ எனக்கு மட்டும் சொந்தமான சொத்தல்ல; அமெரிக்கர்கள் வேறு எவரையும் விட உன்னை நேசித்தார்கள்."

மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்; உதவியாளரை அழைத்தாள்.

"ஆபிரகாம் லிங்கனின் இறுதிச்

செத்துப்போனான்.

பொலிஸ் பாய்ந்து ஜாக் ரூபியை மடக்கியது.

"ஏனடா ஒஸ்வோல்ட்டை சுட்டாய்?"

"பெரிதாய்ச் சொல்ல ஒன்றுமில்லை. கென்னடியைக் கொன்று ஒஸ்வோல்ட் பிரபலமானான். ஒஸ்வோல்ட்டை ஒழித்துக் கட்டி நான் பிரபலமானேன். இன்னுமா புரியவில்லை? எனக்கு... எனக்கு பிரபல ஆசை!"

அவன் சொன்னதை யாரும் நம்பவில்லை.

கென்னடி கொலையின் சூத்திரதாரிகள்தான் ஒஸ்வோல்ட்டை கொல்ல ஜாக் ரூபியை ஏற்பாடு செய்திருக்க வேண்டும் என்று நம்பினார்கள்.

நிரூபிக்கத்தான் ஆதாரமில்லை.

ஆதாரமில்லாதபோது ஊகங்கள் கிளம்பின.

'கென்னடிக்கும் ஹொலிவூட் கவர்ச்சிக் கன்னி மர்லின் மன்றோவுக்கும் கட்டில் வரை நெருக்கம் உண்டு.

'அந்த உறவுதான் கென்னடி சுட்டுக் கொல்லப்படக் காரணமோ' என்று சந்தேகம் கிளப்பப்பட்டது.

கென்னடி மட்டுமல்ல அவரது சகோதரன் ஹொபேட் கென்னடியும் மர்லின் மயக்கத்தில் இருந்தது பரகசியம்.

கென்னடி சகோதரர்களுக்கு அழகான பெண்களோடு பொழுதைக் கழிப்பது பிடித்தமான சமாச்சாரம்.

பிரபல போதைக் கடத்தல் மன்னனின்

## சென்ற வாரத் தொடர்

காதலியோடும் கென்னடிக்கு உறவு இருந்ததாகவும் தகவல்கள் வெளியாகின.

அதுவும் கொலைக்கு காரணமாக இருக்கலாமோ என்றும் சந்தேகம் திரும்பியது.

அதெல்லாம் கிடையாது. கட்டிலில் தேடி கொலைக்கு காரணம் கண்டுபிடிக்க முடியாது.

'கம்யூனிச ரஷியாதான் கொலைக்கு திட்டமிட்டது.' என்று வாதிட்டார்கள் ஒரு சாரார்.

அவர்களது வாதம் சற்று வலுவானது.

ஒஸ்வோல்ட் 1959இல் ரஷியாவுக்கு சென்றான். அதற்கு முன் அமெரிக்க கடற்படையில் மாலுமியாக இருந்திருக்கிறான்.

குறி தவறாமல் சுடுவதில் வல்லவன். கடற்படைக்கு கும்பிடு போட்டுவிட்டு ரஷியா சென்ற ஒஸ்வோல்ட் அங்கு திருமணம் செய்தான். ஒரு குழந்தையும் பிறந்தது.

மனைவியோடும் குழந்தையோடும் அமெரிக்கா திரும்பும்போதே ரஷியா கொடுத்த திட்டத்தையும் மனதில் சுமந்து வந்தான்.

அமெரிக்காவின் செல்வாக்குள்ள தலைவரை ஒழித்துக்கட்டுவதால் ரஷியாவைத் தவிர வேறு யாருக்கும் இலாபம் கிடையாது.

இந்த வாதத்தின் மத்தியில் அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று கென்னடி கொலை பற்றி விசாரித்தது.

கியூபாவின் அதிபர் பிடல் காஸ்ரோ. அவரைக் கொல்ல அமெரிக்க உளவு நிறுவனம் தொடர் முயற்சிகள் செய்து பார்த்தது.

காஸ்ரோ தப்பி வந்தார். அதனால் சவாலுக்கு சவாலாக காஸ்ரோவே கென்னடியைக் கொல்ல ஆளை ஏற்பாடு செய்தாரோ?

கியூபா சென்று நேரடியாக காஸ்ரோவிடமே பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு தலைவர் கேட்டார்.

தாடியை தடவிக்கொண்டு பிடல் காஸ்ரோ அழகாகச் சிரித்தார்.

"எனக்கென்ன பைத்தியமா கென்னடியைக் கொலை செய்ய?"


ஒஸ்வோல்டை சுட்டுக் கொன்ற ஜாக் ரூபி

கென்னடி கொலையாகி முப்பதாண்டுகள் தாண்டி விட்டன.

இன்றுவரை கொலை மர்மத்தின் முடிச்சு அவிழவில்லை.

உலகில் மிகப் பெரிய கில்லாடியான உளவு நிறுவனமாக விளங்கும் அமெரிக்க டி.ஐ.ஏ யால் கூட விடுவிக்க முடியாத மர்ம முடிச்சு அது. எப்போது முடிச்சு அவிழுமோ?

- சபம் -

### அறிந்து கொள்ளுங்கள்-ஆரோக்கியம் பெறுங்கள்-ஆனந்தமாய்

# மருத்துவ விந்தைகள்

## 'வரிக்கோஸை' கண்டு பிடியுங்கள்

வரிக்கோஸ் (varicose vein) எனப்படும் நரம்புச் சுருள் நோய் சில குறிப்பிட்ட வயதைக் கொண்ட ஆண், பெண் இரு பாலார் மத்தியிலும் காணப்பட்டு வருகிறது.

இந் நோய்த் தாக்கம் சிலருக்கு வம்ச வழி காரணமாகவும் ஏற்படுவதற்கு சாத்திய முண்டு. இவை தவிர (குறிப்பிட்ட வயதின் காரணமாக) காலப் பகுதியில் உள்ள தசைச் சுவர்கள் பலவீனமடைந்துள்ள காரணத்தினால் ஏற்பட்டு வருவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இந் நரம்புச் சுருள் தாக்கம் ஏற்படுவதற்கு முன்பு கீழ் காணும் சில அறிகுறிகள் தென்படுவது வழக்கமாகும்:

- கால் கெண்டைப் பகுதியில் வலி தோன்றப்பெறுதல், இவ் வலி மாலை அல்லது இரவு நேரங்களில் அதிகரித்துக் காணப்படுதல்.
- சில சமயங்களில் கால் விறைப்பும் தசைப் பிடிப்பும் ஏற்படும் காணப்படுதல்.
- கால்ப் பகுதி காரணமின்றி வீக்கமடைந்து நமைச்சலும் ஏற்பட்டு வருதல்.



இவ் வறிகுறிகளில் ஒன்றோ அல்லது இரண்டோ காணப்படும் பட்சத்தில் உடலைப் பரிசோதித்து சிகிச்சை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் இவற்றை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்திக்கொள்வது சாத்தியமாகும்.

கர்ப்ப காலத்தில் சில பெண்களுக்கு நரம்புச் சுருள் தாக்கமேற்படுவதற்கும் சாத்தியமிருந்து வருகிறது. அத்துடன் தொடர்ச்சியாக நீண்ட நேரம் நிலையிலே நின்று பணிபுரிந்து வரும் சிலருக்கும் இந் நோய்த்தாக்கம் ஏற்படுவதற்கும் வாய்ப்பிருக்கிறது.

உரிய தருணத்தில் இவற்றிற்கான சிகிச்சை மேற்கொள்ளப்படாவிடின் இதன் நிமித்தம் சில பக்க விளைவுகள் ஏற்படக்கூடும். சில சமயங்களில் பாதம் வீக்கமடைந்து கால்ப் பகுதியில் புண்போன்றவைகள் தோன்றுவதற்கும் வாய்ப்பேற்படக்கூடும்.

இதன் நிமித்தம் ஏற்படும் புண்களை குணமாக்குவதற்கும் நீண்ட நாட்கள் செல்லக் கூடுமென்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

## குண்டாக இருப்பவர்களுக்கு இனிப்பான செய்தி



உடல் பருமன், இன்று பலருக்கும் பெரும் தலைவலியைத் தோற்றுவித்துவரும் பிரச்சனையாக மாறி வருகிறது. சிலர் தமது உடல் பருமனைக் குறைப்பதற்கு பகீபத்துப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் சிலர் கடினமான தேகஏப்பியாசங்களில் ஈடுபடுவதோடு விரதங்களையும் அனுஷ்ட்டித்து வருவதை காணமுடிகிறது. ஆனல் இவற்றின் மூலம் பூரண பயனையடைந்தோரின் எண்ணிக்கையைத் நம்மால் குறித்துக் காட்டுவதுதான் கஷ்டமான காரியமாக இருந்துவருகிறது.

உடல் பருமனைப் பொறுத்தவரை மருத்துவ விஞ்ஞானிகள் கூட தேகாப்பியாசம், உபவாசம், பொன்றவை குறித்து நம்பகமாக சிபார்சு செய்வதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர்.

மருத்துவ விஞ்ஞானிகளின் கருத்துப்படி உடல் பருமன் ஏற்படுவதற்கு அந்தந்த மனிதர்களின் வம்சவழிக் கூறுதான் (Jene) காரணம் என்றும், பருமனை ஏற்படுத்தும் வம்சவழிக் கூறை (Gene) இனங்கண்டு அவற்றை அம் மனிதர்களுக்கு ஏற்ற முறையில் நெறிப்படுத்துவதன் மூலம் பருமனை குறைப்பது மாத்திரமின்றி மெலிந்தவர்களைக் கூட பருமனாக்குவதற்கு வழியமைக்க முடியுமென குறிப்பிடுகின்றனர்.

ஆனால் மனித உடலில் உறைந்திருக்கும் வம்சவழிக் கூறுகளில் வளர்ச்சியோடு தொடர்பு பட்டிருக்கும் குறிப்பிட்ட அவ் வம்சவழிக் கூறை (Gene) இனங் காணுவது எவ்வாறு என்ற கேள்விக் குறியோடு இவ்விடயம் கைவிடப் பட்டிருந்தது.

இவ் வினாவிற்கு விடையளிக்கும் பொருட்டு அமெரிக்காவில் உள்ள ராக்ஃபல்லர் பல்கலைக்கழக மருத்துவத் துறை வாராய்சியாளர்கள் நடாத்திய நீண்ட பரிசோதனையின் விளைவாக மனிதர்களின் உடலைப் பருமனடையச் செயது வரும் வம்சவழிக் கூறு (Gene) இவ் வாராய்ச்சியாளர்களால் தற்போது இனங் காணடப்பட்டுள்ளதாக சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்திகளின் மூலம் தெரிய வருகிறது.

## மகிழ்ச்சியான வாழ்வுக்கு அருமையான ஆலோசனைகள்



ஓய்வேயற்ற வேலைப்பழுவால் திண்டாடும் பலர் இருக்கின்றனர். அவர்கள் பலவிதமான அழுத்தங்களில் இருந்தும் தங்களைக் காத்து ஆரோக்கியமாக வாழ்வதற்கு சில ஆலோசனைகளை இங்கு தருகிறோம். பல நாடுகளிலும் பல தரப்பட்ட ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சிகளில் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள் இவையாகும்:

**நகைச்சுவை:**

எத்தகைய கஷ்டமான தொழிலாக இருந்தாலும் அத்துடன் சிறிதளவு நகைச்சுவைக்கு இடமளித்தால் வேலைப்பளு இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். நாமும் நகைச்சுவையாகப் பேசி நம்முடன் பணியில் ஈடுபட்டிருக்கும் ஏனையோரையும் சிரிப்பூட்ட முயற்சிக்க வேண்டும்.

ஏனையோர் உங்களை நையாண்டி பண்ணி சீண்டினாலும் அதனையே நகைச்சுவை அம்சமாக மாற்றி நாமும் சிரித்து ஏனையோரையும் சிரிக்கவைக்கப் பழகிக்கொள்ளவேண்டும்.

சிரிப்பதன் மூலம் வேதனைகளைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றலை வளர்க்கக்கூடிய 'என்டோபின்' என்ற சுரப்பிகள் சிறப்பாகச் செயற்படுவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

**உணவு:**

சுலமாக சீரணிக்க வல்ல உணவினை உட்கொள்வதன் மூலம் உள்ளத்திற்கு ஏற்படும் அழுத்தங்களை குறைத்துக் கொள்ளாம்.

**உழைப்பு:**

உளரீதியான வேலைகளில் ஈடுபட்டிருப்போர் அவ்வப்போது உடலுக்கும் சில வேலைகளைக் கொடுப்பது அவசியமாகும். சிறு அப்பியாசங்களைக் கொடுக்கலாம். அல்லது விளையாட்டுகளில் ஈடுபடலாம் இதே போன்று உடல் உழைப்பில் அதிகமாக ஈடுபடுபவர்கள் உள்ளத்திற்கும் சிறிதளவு வேலை தருவது அவசியமாகும். நூல்களை வாசித்தல் கருத்தரங்குகளில்-விவாதங்களில் ஈடுபடுதல் போன்றவை இதற்கு உதவும்.

**ஓய்வின் முக்கியத்துவம்:**

ஓயாது உழைக்கும் இயந்திரத்திற்கும் சிற்சில வேலைகளில் ஓய்வு கொடுப்பது பிரதானமானது. அது போன்றதே மனித இயந்திரமும் ஒரு நாள் உழைப்பின் பின் சில மணி நேரம் ஓய்வு தேவை. அதே போல் வார முடிவிலும் பூரண ஓய்வு தேவை. ஓய்வு வேளையில் தனது அன்றாடத் தொழிலையும் தொழிற்கூடத்தையும் முற்றாக மறந்து விட்டு-குடும்பஸ்தரானால் தன் குடும்பத்தினருடனும் தனியாளானால் நண்பர்களுடனும் பொழுதைப் போக்கி-கூடுமானவரை மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.


www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## ஆடு லஸ்ஸி, ஆடு!

3 வயதுச் சிறுமி 'ரம்மி கோர்சி'க்கு வீட்டுத்தோழன் இந்த செல்ல நாயார்தான். அதற்கு நடனம் கற்றுக் கொடுப்பதில் சிறுமிக்கு அவ்வளவு ஆனந்தம். அமெரிக்காவின் கலிபோனியா மாநிலத்தில் 'லான்ஜோஸ்' நகரின் அழகான வீட்டு முற்றத்தில் பதிவு செய்யப்பட்டது இந்த காட்சி. நாயின் பெயர் 'லஸ்ஸி!

## வெளியேவந்து— வாரங்கள் மூன்று.




இங்கிலாந்து-ஹாம்ஷயர், றிங்வூடிலுள்ள ஆந்தைகள் சரணாலயத்தில் குஞ்சு பொரிக்கப்பட்ட இம்மூன்று ஆந்தைக் குஞ்சுகளின் முகத்தைப் பாருங்கள். வெண் தாடிக்கார வயோதிபர்கள் போலத் தோன்றவில்லையா? இவை முட்டைக்குள்லிருந்து வெளி வந்து 3 வாரங்களே ஆகின்றன. இன்னும் சில வாரங்களில் இவற்றுக்கு வரிகள் உண்டாகிவிடும். அதன் பின்னர் முகத் தோற்றமும் மாறிவிடும்.

தென் அமெரிக்காவிலுள்ள காடுகளில் தென்படும் இந்த ரக ஆந்தைகளை இப்பொழுது இங்கிலாந்திலும் இனப்பெருக்கம் செய்வதற்குரிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன

# தகவல் பெட்டி

## கொட்டுது கொட்டுது குடை கொண்டு வா!




இராட்சத 'பைப்'பிலிருந்து கொழ கொழவென்று நீர் கொட்டப்போகிறது எனக் குடை பிடித்து நிற்கிறார் 'மேரி றொய்வோட்', இவர் பெல்ஜியம் நாட்டின் 'பிரஸ்ஸெஸிலுள்ள வானிலை அவதானிப்பு நிலைய தலைமை அதிகாரி. "நல்லவேளை என்கையில் குடையிருப்பதால் தப்பித்து விட்டேன்" என்கிறார் நகைச்சுவையாக.

## கைகொடுத்த கரடி



ஜேர்மனி நாட்டின் ஃபிராங்போர்ட் நகரிலுள்ள சஃபாறி பூங்காவில் பயிற்சியாளர்கள் 'வில்லியம்-ரேச' ஓட்டிவந்த ஜீப் சகதிக்குள் மாட்டிக்கொண்டது. 'ஓட்டோ' என்னும் செல்லப் பெயருடைய கரடியும் சேர்ந்து புதையுண்ட வாகனத்தை மீட்கப் பாடுபடுகின்றது. அதைவிட ஆச்சரியம் கரடியார் 'ஜீப்'இனைச் செலுத்தவும் பயிற்சி பெறுகிறாராம். எல்லாம் சரி, தானாக முன்வந்து உதவும் குணம் மனிதர்கள் மத்தியில் மறைந்து வரும் காலத்தில் தேடிப் போய் கைகொடுத்து உதவுகிறார் கரடியார். கை குலுக்கி பாராட்டலாம்!



## தரமாட்டேன் போ

உரிமையாளரின் குழந்தையின் கையிலிருந்து நழுவிய 'சூப்பி'யை கவ்வி எடுத்து வாயில் வைத்துக் கொண்டது குறும்புக்கார நாயார் 'டொமி'. எவ்வளவு கேட்டும் 'சூப்பியை' தர மறுத்துவிட்டது. அற்புதமாக படம்பிடித்தார் 'டொமி'யின் உரிமையாளரின் தாயார் ஹில்மி ஹன்சன். வயது 80. வயதான காலத்திலும் உறுதியாகக் கமிராவைப் பிடித்து 'கிளிக்' செய்த படம் என்பதால் பரிசாக 50 அமெரிக்க டொலர்கள் கிடைத்தன. நாயாரும் சர்வதேச புகைப்படக் கண்காட்சியொன்றில 'இடம் பிடித்துவிட்டார்.

றொம்ப மகிழ்ச்சி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## ...பொண்ணு காத்திருக்கு!"

...ரகதி, ராகவி, விஜயகுமார் ...ள் நடித்துவரும் படம் புதல்வன்.
...பாடல் எழுதி இருக்கிறார். ...பொண்ணு காத்திருக்குது. ...அழகு பூத்திருக்குது ...த்தில் சொர்க்கத்தைப் ..." என்று வருகிறது ஒரு ...டல். இசை, தேவா.
...ட்டம் போட அனுராதா ...வந்திருக்கிறார்கள். ...கவில்லாமல் கவர்ச்சி ...ட்டியிருக்கிறார். ...ல் மாதம் திரையிட ...டமிட்டுள்ளார்கள்.

## ...காதலன்

## பாவம் சக்கரவர்த்தி!

மார்க்கெட்' பறிபோன பானுப்பிரியா நட்சத்திர கலை நிகழ்ச்சிகளுக்கு பறந்து திரிந்து நாலு காசு சம்பாதிக்கிறார்.

பானுப்பிரியாவோடு கார்த்திக் ஜோடி சேர்ந்து நடித்த படம் சக்கரவர்த்தி.

ஒன்றரை வருடத்தின் முன்னர் பானுப்பிரியா உச்சத்தில் இருந்தபோது தயாரிக்கப்பட்ட படம் தயாரிப்பாளர்கள் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. பெட்டிக்குள் சுருண்டு கிடந்த படத்தை தூசு தட்டி ஏப்ரல் மாதம் திரையிட ஆயத்தம் செய்கிறார்கள்.

போட்ட முதலை என்றாலும் திரும்ப எடுக்கும் முயற்சி.

## படமாகும் கடத்தல்

இந்தியாவின் 'ராக்கெட்' தயாரிக்கும் இரகசியங்களை சில இலட்சங்களுக்கு ஆசைப்பட்டு அந்நியருக்கு விலைக்கு கொடுத்தனர் சில விஞ்ஞானிகள். சமீபகாலத்தில் பரபரப்பாக பேசப்பட்ட செய்தி அது.

கதைக்கு பஞ்சமான இந்தகாலத்தில் விடுவார்களோ தயாரிப்பாளர்கள். 'ராக்கெட்' ரகசியம் கடத்தப்படுவதை வைத்து மலையாளத்தில் படம் தயாராகிறது. பெயர் 'பிரதிநிதி.'

விஞ்ஞானிகளை மயக்கிய மரியம் ரஷீதாவாக நடிப்பவர் சில்க் சுமிதா. இரசிகர்கள் மயங்கப் போவது உறுதி. அந்தளவுக்கு கவர்ச்சியாக நடித்து வருகிறார்.

## டிஸ்கோவின் தியாகம்

நடிகை டிஸ்கோ சாந்தி ஆடைகளை மட்டுமல்ல ஆசைகளையும் தியாகம் செய்யக்கூடியவர் என்பது புதிய செய்தி.

அவரது சகோதரி லலிதகுமாரிக்கு திருமணம் நடந்துவிட்டது. "ஓகே, உங்கள் திருமணம் எப்போது?" என்று கேட்டால் டிஸ்கோவின் தியாகத்தனமான விடை இது:

"நான் திருமணமே செய்யப்போவதில்லை. என் அக்கா, தங்கச்சி, தம்பி எல்லோருமே வாழ்க்கையில் உயர்ந்தால் அதுவே எனக்குப் போதும். அவங்களுக்காக கடைசிவரை உழைப்பதே எனக்குத் திருப்தி." என்கிறார் டிஸ்கோ சாந்தி.



அரவிந்த்சாமி-மனிஷா கொய்ராலா
படம்-பம்பாய்



கஸ்தூரி-மன்சூர் அலிகான்
படம்-சிந்துபாத்

## அடி வாங்காத ஹீரோ

குறைந்த பட்ஜெட்டில் படம் தயாரிப்பவர்களுக்கு விக்னேஷ்தான் பிடித்தமான ஹீரோ.

பல படங்களில் ஒப்பந்தமாகியிருக்கிறார். 'பசும்பொன்' படத்தில் பாரதிராஜா விக்னேஷையும் நடிக்கவைத்துள்ளார். சிவாஜி, பிரபு, சிவகுமார் ஆகியோரோடு நடிப்பதில் விக்னேஷுக்கு ஒரே குஷி. பாரதிராஜாவிடம் அடிவாங்காமல் நடிப்பதை பெருமையுடன் கூறுகிறார்.

## துரைராஜா தேவர்

'தேவர் மகன்' படத்தில் பெரிய தேவராக நடித்து பாராட்டு மழையில் நனைந்தவர் சிவாஜி. இப்போது 'பசும்பொன்' படத்தில் துரைராஜா தேவராக நடிக்கிறார் சிவாஜி.

அவரை மேள தாளத்தோடு ஊர்மக்கள் வரவேற்பது போன்ற காட்சி சமீபத்தில் படமாக்கப்பட்டது. தமிழ் புத்தாண்டான ஏப்ரல் மாதம் திரைக்கு வருகிறது 'பசும்பொன்.'

## புதுவருச வெளியீடு

சுகாசினி இயக்கிய 'இந்திரா' படத்தின் படப்பிடிப்புக்கள் முடிவடைந்துவிட்டன. ஜி.வி.தயாரித்துள்ள இந்தப் படம் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று வெளிவரவுள்ளது. இதே தினத்தில் மணிரத்தினத்தின் ஆலயம் நிறுவனம் தயாரித்துள்ள 'ஆசை' படமும் வெளியாகவுள்ளது. ஆசை படத்தை 'கேளடி கண்மணி' வசந்த் இயக்கியுள்ளார்.

## ...ட்சுமி

...ல் உண்மையாக ...வரது அம்மா ...லட்சுமி. ...சுலட்சுமி. ...ரம். ...மேடைக் ...ஜோராம். ...வை ...

## சுவர்ணா நீ எங்கே?


'தாய் மனசு' படத்தில் (நமது ரூபவாஹினி ...) படம் நடித்தவர் சுவர்ணா. ... சுவர்ணாவை யாரும் திரும்பிப்பார்க்கவில்லை.

பிறகென்ன, பிறமொழிப் படங்களுக்கு தாவி விட்டார் சுவர்ணா.

கன்னடத்தில் 2 படம், தெலுங்கில் ஒரு படம் என்று நடித்து வருகிறார். அங்கு புகழ் கொடி பறந்ததால் தமிழ் பட தயாரிப்பாளர்கள் சுவர்ணாவைத் தேடி அலைவார்கள்.



பாலகிருஷ்ணா-ரம்யா கிருஷ்ணன்
படம்-தங்கப்பாண்டி



சரத்குமார்-மீனா
படம்-கூலி

## திரையில் புதியவை

தமிழ் நாட்டில் தற்போது திரைக்கு ...ள்ள புதிய படங்களில் சில: 'சின்னமணி' (நெப்போலியன்-கஸ்தூரி) ... அண்டு எம்.எல்.ஏ' (மொழிமாற்றுப்) ... 'புதிய ஆட்சி' (சரத்பாபு-ராதிகா) 'முத்துக்குளிக்க வாரீகளா' (குஷ்பு-...வெங்கடேஷ்-சங்கவி) ...ஜென் இந்தியா' (மம்முட்டி-...ராமன்) ...கல்யாணம் (புது முகங்கள்) ...தொட்டில் குழந்தை' (ராம்கி-ரஞ்சிதா) ...முத்துக்காளை (கார்த்திக்-சௌந்தர்யா) ...இவற்றில் எது வெற்றிப் படமாகப் ...கிறது என்பது விரைவில் தெரியும்.

## செலவு 3 கோடி

சரத்குமார் ஜோடியாக மீனா இரட்டை வேடத்தில் நடிக்கும் படம் 'நாடோடி மன்னன்' என்பது ஏற்கெனவே சொன்ன செய்தி.

கோடீஸ்வரர் வேடத்தில் சரத்குமார் நடிக்கிறார். சென்னை, மைசூர், கோவா போன்ற இடங்களில் படப்பிடிப்பு வேகமாக நடந்துவருகிறது.

மூன்று கோடி செலவாகும் என்று முதலில் பட்ஜெட் போடப்பட்டது. இப்போது அதையும் தாண்டி செலவு பண்ணப் போகிறார்கள்.

## அக்காவும்-தங்கையும்

பாக்கியராஜின் 'சுந்தரகாண்டம்' படத்தில் நன்றாக நடித்திருந்தும் சிந்துஜாவிற்கு தமிழில் அதிக வாய்ப்பில்லை. தெலுங்கில் 'குண்டுகுண்டாம் கதா' என்ற பெயரில் தயாராகும் இந்தப் படத்தில் இரண்டு கதாநாயகிகள், ஒருவர்-சிந்துஜா, இன்னொருவர் சிந்துஜாவின் தங்கை பார்வதி.



அஞ்சு
படம்-இளவரசி

## அய்யோ பாவம் அஞ்சு


ரஜினிகாந்த், கார்த்திக் ஆகியோருக்கு மகளாக நடித்தவர் அஞ்சு. அவரது கெட்ட காலம் கொஞ்சம் குண்டாகிவிட்டார். 'இளவரசி' படத்தில் அம்மாவாக நடிக்கவைத்துவிட்டார்கள். விஜயகுமாரின் ஜோடியாக நடித்துக் கொண்டிருக்கிறார்.

## ஊர்வசிக்கு ராசி

நடிகை ஊர்வசிக்கு நல்ல நேரம். மலையாளம் படவுலகில் இருந்து மீண்டும் தமிழுக்கு வந்து பல படங்களை கைவசம் வைத்திருக்கிறார். 'மகளிர் மட்டும்' படத்தின் பின்னர் மீண்டும் அதிஷ்டக் காற்று!

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# ஆத்தாடி கூந்தல் காத்தாட



பெண்ணுக்கு அழகு தருவது அவளது நீண்ட கூந்தல்தான். 'கருகரு' வென்று சாட்டைபோல பின்னுவது அழகாக இருக்கும். கூந்தலை அழகுப்பாரம் என்பார்கள். கூந்தலை மிகவும் தூய்மையாகப் பராமரிப்பது என்பது முக்கியம்.

எப்படிக் கூந்தலைப் பராமரிப்பது என்பது தெரியாமல் கூந்தல் அழகாகக் காணப்பட வேண்டுமென்று ஸ்பிரேக்கள், சாயங்களை உபயோகிப்பது அச்சமயத்திற்கு கூந்தலை அழகுபடுத்தினாலும் பிறகு கூந்தலுக்கு தீமையே விளைவிக்கும். அவர்களது கூந்தல் காய்ந்துபோகும். பொர பொரவென ஆகிவிடும். இது அழகான முகத்தை அசிங்கமாக்கிவிடும்.

இப்படிக் கூந்தலைக் கெடுத்துக் கொண்டவர்கள் என்ன செய்யவேண்டும் தெரியுமா?

குளிப்பதற்கு முன் வெதுவெதுப்பான தேங்காய் எண்ணெய் அல்லது ஒலிவ் எண்ணெயை எடுத்து விரல் நுனிகளில் தொட்டு முடியின் வேர்ப்பாகத்தில் படும்படி நன்றாக அழுந்த தேய்த்துவிடவேண்டும். தலை முழுவதும் மயிர்க்கால்களின் அடியில் நன்கு எண்ணெய் படும்படி நிதானமாகத் தேய்க்கவேண்டும்.

எண்ணெய் தேய்த்துக்கொண்ட பிறகு ஐந்து நிமிடத்திலிருந்து பத்து நிமிடம் வரை தலையில் ஒவ்வொரு இடத்தையும் மெதுவாக அழுத்தி மசாஜ் செய்யவேண்டும்.

அதன் பிறகு தலையை அப்படியே விட்டுவிட வேண்டும். தலை ஒன்று அல்லது இரண்டு மணிநேரம் எண்ணெயில் ஊற வேண்டும். பிறகு சீயாக்காய் சேர்த்துத் தண்ணீரில் தலையை அலச வேண்டும்.


முல்தான் வேர் அல்லது அதன் தூள் நாட்டு மருந்துக் கடையில் கிடைக்கும். மேசைக்கரண்டி அளவில் ஒரு கிண்ணத்தில் போட்டு தண்ணீர் விட்டுக் குழைக்கவேண்டும். களிம்புபோல வரும். அத்தோடு இரண்டு தேக்கரண்டி வெதுவெதுப்பான தேங்காய் எண்ணெய் கலந்து தலையில் தேய்க்க வேண்டும்.ஊறவிட வேண்டும். பிறகு நிறைய தண்ணீரில் தலை முடியை அலசவேண்டும்.

இப்படிச் செய்து வந்தால் காய்ந்து போன- முடிகள் பட்டுப்போல மிருதுவாகி, கருமையாக அழகான தோற்றத்தைக் கொடுக்கும்.

## வீட்டுக் குறிப்புக்கள்



மீன் வாங்கி சுத்தப்படுத்தி, கழுவி முடிந்தவுடன் உங்கள் கையில் கப்பென்று மணம் வீசுகிறதா? மீன் கழுவியதும் கொஞ்சம் உப்புத் தூளை எடுத்து நன்றாக கையில் தேய்த்துக் கழுவி விடுங்கள். இப்போது கையை முகர்ந்து பாருங்கள். மணம் போச்சு.



குழம்பு சமைக்கும்போது காரம் அதிகமாகி விட்டால் ஒரு எலு மிச்சம் பழத்தை எடுத்து குழம்பில் அளவா சாறு பிழியுங்கள். காரம் குறைந்துவிடும். இது குழம்புக்கு மட்டும் என்றில்லை. ரசம், பலகாரம் போன்றவற்றில் காரம் அதிகமானாலும் இதைச் செய்யலாம்.



அதிகமாக உருளைக்கிழங்கு வாங்கி வந்து வைத்தால் விரைவில் வாடிப்போய் விடுகிறதா? இருட்டாக ஆனால் காற்றோட்டமாக இருக்கும் அறையில் வைத்து விடுங்கள். எப்போது பார்த்தாலும் புதிதாக வாங்கியதுபோல் இருக்கும்.

# கொடி உடல்-பெறும் முறை

## சுருக்கமாய் ஒரு யோசனை



பெண்களின் உடலமைப்பு கொடி போன்ற அமைப்புடையதாக இருப்பது அவர்களுக்கு அழகைச் சேர்க்கும். சிறுத்த இடையும், ஆரோக்கியமான உடல்வாகும் பெண்ணுக்கு அழகும் கவர்ச்சியும் தருபவை.

சில பெண்களுக்கு உடம்பில் சதை போட்டு விடுகிறது. அதனால் இடுப்பில் வட்ட வட்டமாய்ச் சதை டயர் போல விழுந்து அவர்களது அழகைக் கெடுத்து விடுகிறது. தாங்கள் மீண்டும் அழகான கொடி போன்ற உடலமைப்பைப் பெற அவர்கள் உணவைக்குறைத்து 'டயட்டில்' (உணவுக் கட்டுப்பாடு) இருக்கத் தொடங்கு கிறார்கள். 'டயட் கண்ட்ரோல்' என்பது அதிகமான உடல் சதையை ஓரளவுதான் குறைக்கும். அதனால் அவர்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும். 'டயட்'டினால் உடம்பின் எடை சீராகக் குறைந்து விடுமே தவிர தேவைப்படும் இடங்களில் உடலில் சதை குறையாது. உடற்பயிற்சி செய்வதன் மூலம் மட்டுமே அப்பகுதிகளின் சதையைச் சீராக்க முடியும்.

'டயட்'டில் இருக்கும் பொழுது மட்டும் பெண்கள் இரும்புச் சத்துக்கான மாத்திரை களை உட்கொள்ள வேண்டும். மற்ற விட்டமின் மாத்திரைகள் தேவையில்லை.

'டயட்டிங்' மூலமாக உடல் எடையை சீக்கிரமாகக் குறைத்துக் கொள்ளக் கூடாது. அதனால் உடம்பில் பல பிரச்சனைகள் உண்டாகும். அதைச் சரி செய்ய, அதிகமாகச் சாப்பிடத் தொடங்க வேண்டி வரும். அதனால் எடை மீண்டும் அதிகமாகி விடும். வாரத்திற்கு ஒரு கிலோ எடை குறைவதுதான் நல்லது.

முழுமையான 'டயட்டிங்' என்பது திட்டமிட்ட உணவுப் பழக்கமும், உடற் பயிற்சியுமேயாகும்.

'டயட்டிங்' காரணமாக சாப்பிடாதிருந்த இனிப்புக்கள், எண்ணெய் பதார்த்தங்கள் ஆகியவற்றை உடல் இளைத்ததும் மீண்டும் சாப்பிடத் தொடங்கக் கூடாது.

மிகவும் இளைத்து விட்டால் உடற் பயிற்சியை நிறுத்தி விட்டு, சக்தி தரும் உணவு வகைகளை அதிகமாகச் சாப்பிட வேண்டும்.

# லேடீஸ் ஸ்பெசல்

## சேலை கட்டும் பெண்களுக்கு இந்தச் சேதி!

ஆள்பாதி, ஆடைபாதி என்பது பழமொழி.



ஆடை மானத்தைக் காப்பாற்றுவதோடு மட்டுமல்லாமல் தமது மதிப்பையும் உயர்த்து கிறது. மரியாதையைப் பெற்றுத் தருகிறது.

பெண்கள் உடுத்தும் புடவைகள், அணியும் பிளவுசுகள் அவர்களது அழகான தோற்றத்தை மேலும் பொலிவடையச் செய்கிறது. சாரிக்கு 'மட்ச்'சாக பிளவுஸ் அணிவது, அழகான பொன் குடத்திற்கு பொட்டிடுவது பொல் அழகாகும்.

சாரிகள் இன்று புதுவிதமாக நிறைய விற்கப்படுகின்றன.

பெண் புதிதாக வந்திருக்கும் ஒரு சாரியை தான் வாங்க வேண்டுமென்று எண்ணுவதை விட தன் நிறத்திற்கு ஏற்ற- தனக்கு மிகவும் அழகைக் கொடுக்கிற சாரியை மட்டுமே வாங்க வேண்டும். தனக்கேற்ற சாரி, பிளவுஸ்களை பெண்ணே பார்த்துத் தேர்ந் தெடுக்க வேண்டும்.

ஏதோ புடவை வாங்கினோம் பிளவுஸ் பீஸ் வாங்கினோம் என்று வாங்கக் கூடாது.

வாங்குகிற புடவை மெல்லியதாகவும் இலேசான வெளிர் வண்ணங்கள் உடைய தாகவும் இருத்தால், பிளவுஸ் திக்கான கலர் உள்ளதாகவும், அழுத்தமானதாகவும் பார்த்து வாங்க வேண்டும்.

சாரி சற்று கனமாக அமைந்து விட்டால் பிளவுஸ் பீஸ் லேசான துணியில் வாங்க வேண்டும்.

அதிகமாக இல்லாமல் சற்று குறைவான வண்ணத்தில் சாரி வாங்கும் பொழுது திக்கான வண்ண உள்பாவாடை வாங்க வேண்டும்.

சில்க் ரகப் புடவைகளுக்கு பருத்தித் துணியிலான உள்பாவாடை வாங்கி அணிய வேண்டும்.

சாரியில் பூக்களோ அல்லாது டிசைன் களோ இல்லாது இருந்தால் பிளவுஸில் பூ இருக்கிறமாதிரி வாங்க வேண்டும். உள்பாவா டையும் சாரியின் நிறத்திலேயே வாங்குவது நல்லது. எல்லா வண்ணச் சேலைகளுக்கும் வெள்ளை, கறுப்பு நிற பிளவுஸ்கள் 'மட்ச்'சாக இருக்கும். வெள்ளையை விட கறுப்பு வண்ண பிளவுஸ் மிகவும் அழகாக இருக்கும்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### பயத்தம் புட்டு

**தேவையான பொருட்கள்:**

பயத்தம்பருப்பு-300 கிராம்
வெள்ளை வெல்லம்-300 கிராம்
பெரிய தேங்காய்முடி-1
முந்திரிப் பருப்பு-10
நெய்- 100 கிராம்
ஏலக்காய்-5

**செய்முறை:**

பயத்தம் பருப்பை அரைமணி நேரம் ஊறவைக்க வேண்டும். பிறகு அதைச் சுத்தமாகக் கழுவி எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு மிக்ஸியில் போட்டு 'கரகர'வென அரைத்து எடுத்துக்கொள்ள வும். எண்ணெய் தடவிய இட்லி தட்டில் அரைத்த கெட்டியான பருப்பைச் சமமாகப் பரப்பி பத்து நிமிடம் ஆவியில் வேக வைக்கவும். சிறிது ஆறியதும் வெளியே எடுத்து ஒரு தட்டில் உதிர்த்து வைத்துக் கொள்ளவும்.

வாணலியை அடுப்பில் வைத்து, வெல்லப்பாகு காய்ச்சவும். பாகு கம்பிப் பதமாக வந்ததும் அடுப்பைவிட்டு இறக்கி உதிர்த்த புட்டைக் கொட்டிக் கிளறி விடவும். பொல பொலவென வரும். ஏலக்காயைப் பொடியாக்கிப் போடவும். தேங்காயைத் துருவிப் போட்டுக் கரண்டிக் காம்பால் கிளறவும். முந்திரிப்பருப்பை சிறிது சிறிதாகத் துண்டாக்கி நெய்யில் பொரித்துப்போடவும். பிறகு எல்லாவற்றையும் மீண்டும் கரண்டிக் காம்பால் கிளறிக்கொடுக்கவும்.

இது பயத்தம் பருப்பு புட்டாகும். இதைச் செய்வது எளிது. சுவையாக இருக்கும்.


**பரிசுக் கூப்பன்**
**மகளிர் மட்டும்**
**இல 5**

மகளிர் மட்டும்
—பரிசுப் போட்டி—

முதல் அதிஷ்டசாலிக்கு
தங்கநகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.


# குரலும் — உடலும்



'பொப்' இசை உலகில் கொடி கட்டிப் பறக்க தேவையானவை என்ன?
கொஞ்சம் குரல் வளம், நிறையக் கவர்ச்சி, கவர்ச்சியை நளினமாய் வெளிப்படுத்தும் உத்தி.

குறிப்பாக 'பொப்' பாடகிகளுக்கு இது மிக முக்கியம். படத்தில் இருப்பவர்கள் விருதுகள் பெற்ற 'பொப்' பாடகிகள். லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அண்மையில் இவர்கள் விருது பெற்றுக்கொண்ட பின்தான் இப்படி இதழ்கள் நிறைய புன்னகைத்தார்கள்.

# முத்திரை பதித்த அழகிக்கு அமெரிக்க அரசின் முத்திரை!




அமெரிக்க நாட்டு தபால் இலாகா, பிரபல ஹோலிவூட் திரைத்தாரகை மர்லின் மன்றோவுக்கு நினைவு முத்திரை வெளியிட்டு கௌரவித்திருக்கிறது. ஒரு திரைப்பட நடிகைக்கு முத்திரை வெளியிட்டது அந்த நாட்டின் வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும். நியூயோர்க்கிலுள்ள 'பிளானட் ஹோலிவூட்' விடுதியில் இம் முத்திரை சம்பிரதாய பூர்வமாக வெளியிடப்பட்டது.

பின்னாளில் மர்லின் மன்றோ என்று பெயர் பெற்ற பெண், 1926 ஜுன் முதலாம் திகதியன்று வசதியற்ற ஒரு குடும்பத்தில் பிறந்து ஜீன் பேக்கர் என்ற பெயருடன் வாழ்ந்து வந்தாள்.

இளமையிலேயே அழகுப் பதுமையாகத் திகழ்ந்த மர்லின், திரைப்படத்துறையில் பிரவேசித்து இலட்சோப இலட்சம் இரசிகர் களின் இதயக் கன்னியானாள். பேர் பெற்ற அரசியல் வாதிகள் முதல் சாதாரண பாமர மக்கள்வரை தன் உடற் கவர்ச்சியால் கட்டிப் போட்ட மர்லின் திரையுலகின் உச்சாரக் கொம்புக்கே மிக விரைவாக ஏறிவிட்டார்.

பல திரைப்படங்களில் நாயகியாகத் தோன்றி இலட்சோப இலட்சமாகப் பணம் சம்பாதித்தார். ஆனால் 1962 ஆகஸ்ட் 05ல் அதிகமான தூக்க மாத்திரைகளை உட்கொண்டு பரணத்தின் மடியில் சரிந்தார் மர்லின் மன்றோ.

மர்லினுடைய மரணத்தைச் சுற்றி மர்மம் சூழ்ந்திருப்பதாகவே இன்றும் கருதப்படுகிறது.

அமெரிக்க தபால் இலாகா வெளியிட்டு வரும் முத்திரைகளில் இடம் கிடைப்ப தென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. பிரதி வருடமும் சுமார் 40,000 பேரின் பெயர்கள் முத்திரையில் இடம்பிடிக்க சிபார்சு செய்யப்படுவதுண்டு.

இவற்றில் ஆக 25 முதல் 30 வரை மட்டுமே தெரிவு செய்யப்படும்.

இவ்வாறு இந்த வருடம் வெளியிடப் படும் முத்திரைகளில் மர்லின் மன்றோவின் படம் தெரிவு செய்யப்பட்டிருப்பது பலருக்கு வியப்பாக இருந்தாலும், இத்தகைய கௌரவத்திற்கு மர்லின் தகுதியுடைய வர்தான் என்பதை எவரும் மறுக்கவில்லை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தேன் கிண்ணம்



## கண்ணீர்ப்பிரிவு

ஒரு
அழகிய மாதத்தின்
முகவரி
சொல்லாமல் கொள்ளாமல்
எங்கோ
அமிழ்ந்து போன....
கண்ணுக்கு
தெரியாத
காற்றைப்போல!

□□

அதோ
அந்த வானத்து
மேனியின் தோல்களில்
ஒர்
அழகிய நிலாப்புறாவின்
அற்புதப்பிரசவம்!
அதன் சிறகடிப்பில்
ஆயிரம்கோடி
'அல்லாஹு அக்பர்'
கோஷங்களின்
அட்சரப்புள்ளிகள்.

□□

முப்பது பொழுதுகள்
மூடி மறைந்தபோது
அல்லாஹு அக்பர்
என்ற முளைத்தல்கள்
காற்றின்
முனையோடு
கம்பீரமாய்
கைகுலுக்கிக் கொண்டன.

□□

கடூரத்தை
ஷைத்தானியத்திலிருந்து
பலமான
கயிற்றால்
கட்டிப்போட்ட
அந்த நிமிடங்கள்
எங்கள்
ஆத்மாக்களிடமிருந்து
பிரியாவிடையினை
ஏகிச் சென்ற போது
எத்தனை
இதயங்கள்
விழிக்குழிகளிலிருந்து
கண்ணீர் ஊற்றினை
வியாபித்திருக்கும்....?

□□

ஈதுல் பித்ரை
ஈன்றளித்துவிட்டு
அருள்மிகு ரமழான்
ஆகாயத்துள்
சென்று மறைந்து விட்டது.
நல்வினை
நாடிய
மானுடங்களின்
நெஞ்சின் ஓரத்தில்
நெருடல் வருடித்தொட்டது.

□□

பெருநாளும்
திருநாளில்
எங்களுக்கு
ஒரு நாளாகட்டும்!
வருநலங்கள்
விடைபெற்ற
நோன்பிலிருந்து
எம்மிடையே
நிதம் சேரட்டும்.

□□

அமைதியாய் வந்து
அருளினை
அள்ளித்தந்து விட்டு
போன
அற்புதமாதமே
உனக்கு
விடைதந்துவிட்டு
மண்ணில்
எதிர்பார்ப்புடன்
காத்து நிற்கின்றோம்
ஆம்
என்
அடுத்த வருகையின்
ஆரம்பிப்புக்காய்
வேண்டி.....

**கிண்ணியா சபருள்ளா.**



## உண்மை!

முகில் இடுக்குகளில்
மழைத்துளி தேடிய
நிலாப்பொழுதுகளில்
என உயிர்துடித்துக
கால் பெருவிரல்
நிலம் கீறக் கீற
உணர்வுகளின்
உச்ச வேகத்தில
நான் கவிதைகளைப்
பிரசவித்தேன்.
எனக்குள் பிரவாகிக்கும்
அந்த உச்ச நெருப்பிற்கு
ஈடுகொடுக்க–இங்கு
இரசிகர்கள் இல்லை.
விமாசகர்கள இல்லை!
குடத்திற்குள ஒளிரும்
ஒரு குத்து விளக்காய்
நான் இத்தீவிற்குள்
முடங்கிப் போனேன்.
இங்கு
கலைத்துறை
ஒரு சாக்கடை!
பழைய பானைகளை
உருட்டும ஒலியெழுப்பி
'இசையமைக்கிறோம்'
என்பார்கள்!
சிலர் மட்டும்
கவிதை எழுதுவார்கள்,
இசையமைப்பார்கள்,
பாடுவார்கள்...
எல்லாம் அவர்களே!
இங்கு
தமிழக கலைத்துறை
சிலரின்
குடும்பச சொத்து!
போகட்டும்....
என கவிதைகள்
ஒரு நாள்
இன்னொரு சூரியனாய்ப்
பரிணமிக்கும,
உலகெங்கிலுமுள்ள
தமிழ் நெஞ்சங்களைத்
தீப்பிடிக்கச் செய்யும்.
அப்போது
பலர் இத்தேசத்திற்கு
வந்து
மூலை முடுக்கெல்லாம
என்னைத் தேடுவார்கள்.
விமாசிப்பார்கள்....
அந்த நிமிடங்களில
நான் நிச்சயமாய்
இருக்கமாட்டேன்!

**எம். சுரேஷ்.**



## என் எதிரிகள்!

காற்று
என்
எதிரி!
உன்னைக்
கட்டிப்போடுவதால்.

•

மலர்கள்
என் எதிரி!
உன்னை
மாலையிடுவதால்.

•

உடைகள்
என்
எதிரி!
உன் உடம்பை
மறைத்திருப்பதால்.

•

நிலவு
என்
எதிரி
உன் அழகை
விலைபேசுவதால்.

•

விடியல்
என்
எதிரி!
உன் விழியை
வேட்டையாடுவதால்.

•

கதால்
என்
எதிரி!
உன் மனசை
களவாடுவதால்.

•

தலையனை
என்
எதிரி
உன் படுக்கையைப்
பங்கு போடுவதால்.

**ஷஹிர்ஷா தாஸிம்**
**தர்கா நகர்.**

## பின் தொடர்ந்த பிருந்தாவனம்...

தென்றலுக்கும்
உற்சவம் நடக்கட்டும்!
என் வாழ்க்கைக்கும்
அர்த்தங்கள்
எழுதப்படட்டும்...

□□

என்
உணர்வுகள்
இருக்கும் வரைக்கும்
தொலைந்து போவேன்
எண்ணங்களுக்குள்...

□□

எனக்குள் தூங்கும்
உன் விழிகளுக்கு
நான்
ஆராரோ பாடுகிறேன்.
எனக்குள் விழித்திருக்கும்
உன்
உதட்டிற்கு
நான்
முத்தமிடுகிறேன்.
எனக்குள் ஈருண்ட
உன்
கூந்தலுக்கு
நான்
பூச்சூடுகிறேன்.
என்னை
அழைக்கும்
உன
கன்னங்களுக்கு
அருகில் வருகிறேன்.

□□

நம்மை
வாட்டிவிட்டு
அழைக்கின்ற
விதி
நல்லா இருக்கட்டும்.

□□

இது....
பெரும்பாடு

□□

எது...?

□□

காதலும்
கனவுகளின்
சமாச்சாரமும்.

**பொத்துவில்**
**பௌர்ணமி நிலா.**

## என்னைத் தேடி உன்னிடம்...

நீதான்
என் இதயம்.
என் உயிருக்கு வீடு.
என் உணர்வுக்கு ஊட்டம்.
என் எழுத்துக்கு கரு!

உன் புன்னகைதான்
என்னைப் புதுப்பித்தது!

உன் கண்கள்தான்
என்னை
காதலிக்கச் சொன்னது!

உன் வடிவழகுதான்
என் வாலிப நெஞ்சை
கிள்ளி விட்டது!

உன் கனிவு ஒன்றுதான்
என்னை
உணர்ச்சிக் கனவுகளின்
ஊஞ்சலில்
ஆட்டிவிட்டது!

இருண்டு கிடந்த
என் இதய அறைகளில்
ஒளி வெள்ளத்தை
பாய்ச்சியது
உன் பார்வைதானே!

ஒன்றை மட்டும்
உணர்ந்து கொள்!
நான்
உன்னைத் தேடி
ஒரு நாளும்
வந்தது இல்லை;
இனியும் வரமாட்டேன்
என்னைத் தேடித்தான்
உன்னிடம் வருகிறேன்.

**இ. சார்தீன்**
**சவூதி அரேபியா.**



## மழை

மேகம் அழுதது
வானத்தை
தொடமுடியாமல்!

## வித்தியாசம்!

ஏழை
குளிருக்குப் போர்வை
வாங்கினான்!
பணக்காரன
போர்வைக்காக 'குளிரர்'
வாங்கினான்.

## தேடல்!

வேறு
கிரகங்களில்
உயிரினங்களைத் தேடுகிறோம்
எங்கள்
தில்லு, முல்லுக்களை
கற்றுக் கொடுக்க!

**கோவுஸ்ஸ-ராம்ஜீ-எல்ல.**

## மௌக உரசல்

இதழ்களை மூடி
இமைகளால் பேசினாள்....
என்
இதயம் சறுகி
அவள்–
விழிகளுள் விழுந்தது....!

## பிணைப்பு

காரணமேயில்லாமல்
என்
கண்கள் கரிக்கிறதே...
என்
காதலி
அங்கே
அழுதிருக்க வேண்டும்.

## காதல்

கையை–அவள்
சுட்டுக் கொண்டாள்..
இங்கு–
எரிகிறது
என் இதயம்.

## வானவில்

வானக் கொடியில்
மழை மச்சி
காயப் போட்ட
'மல்டி' கலர்
தாவணித்துண்டு.

## மூன்றாம் பிறை

காதலி...!
உன் நெற்றியை–
வெட்டி–யார்
வானத்தில்
ஒட்டியது...??

**யூயெல் மப்றூக்**
**அட்டாளைச்சேனை.**

## கத்தரித்த கடி ஜோக்ஸ்

நோயாளி: நேர்ஸ்! எனக்கு வாழணும்ணு ஆசையா இருக்கு.
நேர்ஸ்: அது இங்கே அட்மிட் ஆவதற்கு முன் யோசிச்சு இருக்கணும்.

□□

திருடன்: கண்ணே உன் இதயத்தை நான் திருடிவிட்டேன்.
காதலி: இந்த இடத்தில்கூட திருட்டைப் பற்றித்தான் பேசவேண்டுமா?

□□

நேர்ஸ்: அந்த அஞ்சாம் நம்பர் பேஷன்ற் ஆறுமுகம், போகும்போதும் வரும்போதும் என்னைப் பார்த்துக் கண்ணடிக்கிறார் டாக்டர்.
டாக்டர்: நீ பேசாம இரு. ஒப்பரேஷன் அண்ணைக்கு இவனைக் கவனிச்சுக்கிறேன்.

□□

நீதிபதி: நீ நகையைத் திருடியதாக இப்பொழுது பத்துப் பேர் சாட்சி சொல்கிறார்களே- நீ குற்றவாளி அல்ல என்று எப்படிச் சொல்கிறாய்?
கைதி: பார்த்ததாகப் பத்துப் பேர்தானே சாட்சி சொல்கிறார்கள். அதைப் பார்க்காதவர்கள் பத்தாயிரம் பேரைக் கொண்டுவர நான் தயாராயிருக்கிறேன்.

□□

பெண்: டாக்டர்! இந்த நிமிடம் நினைப்பது அடுத்த நிமிடமே மறந்திடுது டாக்டர்.
டாக்டர்: இந்த வியாதி எத்தனை நாளா இருக்குது?
பெண்: எந்த வியாதி டாக்டர்?
டாக்டர்: ?....?....?




### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | துன்பம் நீங்கும், மனப்போராட்டம். | காலை 6 மணி |
| புதன்- | செலவு மிகுதி, கடன்படல். | பகல் 12 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 7 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| சனி- | பயனற்ற செயல், புதிய முயற்சி. | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7**

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | மனக்கலக்கம், வீண் முயற்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பெரியோர் அனுகூலம், மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வியாழன்- | பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| சனி- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3**

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, அந்நியர் சகவாசம். | காலை 6 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | வெளியிடவாழ்க்கை, உயர்ந்தநிலை. | காலை 8 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, வீண்குறை கேட்டல். | பி.ப. 2 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | மறைமுக எதிர்ப்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| புதன்- | அந்நியர் சகவாசம், மறைமுக எதிர்ப்பு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, உயர்ந்தநிலை. | காலை 8 மணி |
| வெள்ளி- | பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. 2 மணி |
| சனி- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5**

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியசித்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், செய்தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர்நட்பு, காரியத்தடை. | பி.ப. 2 மணி |
| புதன்- | மனமகிழ்ச்சி, உறவினர் உதவி. | காலை 8 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், முயற்சித் தடை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | பெரியோர் பகை, கௌரவக் குறைவு. | காலை 6 மணி |
| சனி- | மனநிம்மதி குறையும், வீண் பயம். | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3**

## ★ இந்த வாரம் உங்கள் பலன் ★

(19.03.95 முதல் 25.03.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| மீனம் | - | சூரியன் |
| மேடம் | - | கேது |
| கர்க்கடகம் | - | செவ்வாய் |
| துலாம் | - | இராகு |
| விருட்சிகம் | - | வியாழன் |
| மகரம் | - | வெள்ளி |

சந்திரன் துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்
22.03.95இல் கும்ப வெள்ளி

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 8 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- | பயனுள்ள செயல், மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், கௌரவம். | காலை 8 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, பொருள் நஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, மனக்கலக்கம். | காலை 7 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 6**

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் நஷ்டம், காரியக்கேடு. | காலை 6 மணி |
| திங்கள்- | உறவினர் பகை, கௌரவக் குறைவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| புதன்- | பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண் துயர், மனக்கலக்கம். | காலை 8 மணி |
| வெள்ளி- | அந்நியர் சகவாசம், மனப்பயம். | பி.ப. 2 மணி |
| சனி- | வெளியிட பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -8**

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், பொருள் வரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | தொழில் விருத்தி, காரியசித்தி. | காலை 8 மணி |
| வெள்ளி- | தெய்வானுகூலம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பி.ப. 1 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7**

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, காரியசித்தி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, துன்பம் நீங்கும். | காலை 7 மணி |
| செவ்வாய்- | உயர்ந்தநிலை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- | மனக்கலக்கம், உறவினர் பகை. | காலை 6 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | தேகசுகக் குறைவு, மனப்பயம். | காலை 6 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், பொருள் செலவு. | காலை 7 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -4**

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- | காரியசித்தி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | முயற்சி பலிதம், மனக்கலக்கம். | காலை 7 மணி |
| வெள்ளி- | வீண் குறைகேட்டல், மனப்போராட்டம். | பகல் 12 மணி |
| சனி- | ஆடம்பரச் செலவு, பணத்தட்டுப்பாடு. | காலை 7 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9**

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- | துயர் நீங்கும், உறவினர் உதவி. | காலை 8 மணி |
| வியாழன்- | மனக்கலக்கம், மறைமுக எதிர்ப்பு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | முயற்சி பலிதம், கௌரவநிலை. | காலை 7 மணி |
| சனி- | வீண் சந்தேகம், தொழில் மந்தம். | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 2**

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| திங்கள்- | மனக்கலக்கம், கௌரவக் குறைவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நட்பு, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, பொருள் இலாபம். | பகல் 12 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வெள்ளி- | காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| சனி- | பயந்த நிலை, மனக் கிலேசம். | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





## புவி விளங்கும் செந்தமிழ்!

நன்நெறிகள் கொண்ட தமிழ்
நல்வழிகள் அடங்கு தமிழ்
நாநிலமும் வென்ற தமிழ்
நாற்றிசையும் வழங்கும் தமிழ்

சங்கம் வளர்த்த தமிழ்
சரள மொழியான தமிழ்
தேனும் தினை மா போன்று
தீஞ்சுவையாய் இனிக்கும் தமிழ்


இலக்கியங்கள் ஈந்த தமிழ்
இயல் இசைகள் நிறைந்த தமிழ்
இறவாத பொக்கிஷமாம்
இன்ப திருக்குறளைத் தந்ததமிழ்

ஔவை வளர்த்த தமிழ்
அரும் புலவர் ஈன்ற தமிழ்
புகழேந்தி புனைந்த தமிழ்
புவி விழங்கும் செந்தமிழே!

*அனுப்பியது - மு.ச.முகம்மது நியாஸி-சியாம்பலகஸ்கொட்டுவ.*

"வான மழை பொழிதல் போலவே-நித்தம்
வந்து பொழியுமின்பங் கூட்டுவீர்:...
கானை அழித்துமனை கட்டுவீர்-துன்பக்
கட்டு சிதறிவிழ வெட்டுவீர்."
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை



## நரியை ஏமாற்றிய முள்ளம்பன்றி

காட்டிலிருந்து ஒரு முள்ளம்பன்றி பாலைவனத்துக்கு ஒடி வந்து விட்டது. அதற்கு திரும்பிப் போக வழி தெரியவில்லை. அதனால், பாலைவனத்திலேயே இருந்து விடுவதென்று முடிவு செய்தது. பாலை வனத்தில் என்ன கிடைக்கிறதோ அதைச் சாப்பிட்டுவந்தது.

ஆனாலும் பாலைவனத்தில் தனியாக இருக்கிறோமே என்கிற ஏக்கம் அதை வாட்டி வருத்தியது. யாருடனாவது நட்புக் கொள்ள வேண்டுமென்று ஏங்கியது. பாலைவனத்தில் ஒட்டகங்கள்தான் இருக்கின் றன. அவற்றுடன் எப்படி நட்புக் கொள்வது என்று கவலைப்பட்டது.

ஒருநாள் எதிர்பாராத விதமாக ஒரு நரி அங்கு வந்து சேர்ந்தது. அது நல்ல கொழுத்த பிராணிகளைச் சாப்பிட்டு வெகுகாலம் ஆயிற்று. அது முள்ளம்பன்றி யைப் பார்த்தது. அதற்குக் கூரிய முட்கள் இருந்தாலும் முள்ளம் பன்றி நன்கு கொழுத் திருந்தது. மெதுவாக அதனுடன் சிநேகம் கொண்டு தருணம் வரும்போது அதைச் சாப்பிட்டு விடலாம் என்று எண்ணியது நரி.

நரியைப் பார்த்ததும் முள்ளம்பன்றிக்கு சந்தோஷம் உண்டாயிற்று. காட்டில் அது நரியைப் பார்த்திருக்கிறது. நரி தந்திரசாலி என்றும் மற்றவர்களை எளிதில் ஏமாற்றி விடும் என்றும் முள்ளம்பன்றிக்குத் தெரியும். அதனால் நரியிடம் மிகவும் கவனமாகப் பழகவேண்டும் என்று எண்ணிக்கொண்டது. இருப்பினும் அது நரிக்கு அருகில் சென்று,

"வாருங்கள் நரியாரே! ஏது இந்தப் பக்கம்?" என்று வரவேற்றது.

"அடடே முள்ளம்பன்றியா? காடு வர வர ரொம்ப மோசமாகி விட்டது. அதுதான் இங்கு ஓடி வந்துவிட்டேன். உன்னைச் சந்தித்ததில் ரொம்ப மகிழ்ச்சி," என்றது நரி.

"நானும் அப்படித்தான் காட்டை விட்டு இங்கு வந்து விட்டேன். காட்டை விட இங்கு வசதிகள் அதிகம். உங்களைப்போல் ஒரு அறிவாற்றல் உள்ள நண்பனைத்தான் நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்." என்றது முள்ளம்பன்றி.

"முள்ளம்பன்றியே....நீ கவலைப்படாதே நீ தேடும் நண்பன் நான்தான். நாமிருவரும் நண்பர்களாக இங்கேயே இருந்து விடு வோம்." என்றது நரி.

"மிக்க மகிழ்ச்சி நரியாரே! உங்களை நான் நண்பராக அடைந்தது என் பெரும் பாக்கியம்," என்றது முள்ளம்பன்றி.

இரண்டும் நண்பர்களாயின. முள்ளம் பன்றி நரியை அழைத்துக் கொண்டு சென்று பாலைவனத்தைச் சுற்றிக்காட்டியது. அப்பொழுது இரண்டுக்கும் பசியெடுத்தது. காட்டைப்போல் பாலைவனத்தில் உணவு கிடைப்பது கடினம் என்று உணர்ந்து கொண்டது நரி. எனினும் அதைப்பற்றி முள்ளம் பன்றியிடம் எதுவும் கூறாமல் வந்தது நரி.

வரும் வழியில் ஒரு ஒட்டகம் இறந்து கிடந்தது. அது பெரிதாக இருந்தது. அதை உணவாக்கிக் கொள்ளலாம் என்று இரண்டும் தீர்மானித்தன. ஆனால் நரி, தான் மட்டும் ஒட்கம் முழுவதையும் சாப்பிட்டுவிட எண்ணிற்று.

"நண்பரே! இந்த ஒட்டகத்தின் உடம்பு முழுவதும் உரோமங்கள் உள்ளன. நாம் அவைகளோடு இதைத் தின்றால் உரோமங்கள் நம் தொண்டையில் சிக்கி துன்புறுத்தும். வயிற்றிற்குள் போய் விட்டாலோ கேட்கவே வேண்டாம். படாதுபாடு படுத்திவிடும," என்றது நரி.

"நரியாரே! நீர் சொல்வது சரிதான். ஒட்டகங்களின் உரோமங்களை எப்படி நீக்குவது?" என்று ஒன்றும் தெரியாதது போல் கேட்டது முள்ளம்பன்றி.

"நண்பரே! உமக்குத்தான் இந்தப் பாலைவனத்தில் என்ன பொருள் எங்கே இருக்கிறது என்று தெரியும். அதனால் நீரே சென்று ஒட்டகத்தின் உரோமங்களைப் பொசுக்க நெருப்புக் கொண்டு வாரும்." என்றது நரி.

'என்னையா ஏமாற்றப்பார்க்கிறாய்? நான் உன்னை ஏமாற்றுகிறேன் பார்!' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டது முள்ளம்பன்றி. சிறிது நேரம் யோசித்துவிட்டு,

"நரியாரே என்னை விட நீங்கள் தான் வேகமாக ஓடுவீர்கள். நான் எங்கே நெருப்பு கிடைக்கும் என்பதைச் சொல்லுகிறேன். நீங்கள் ஒட்டமாக ஓடி நெருப்பை எடுத்து வாருங்கள். அதுவரை இந்த ஒட்டகத்தை நான் காவல் காத்துக்கொண்டிருக்கிறேன்." என்றது முள்ளம்பன்றி.

'நம்மால் வேகமாக ஓட முடியும்' என்று முள்ளம்பன்றி பாராட்டுகிறதே,' என்று சந்தோஷத்துடன் நரி நெருப்பைத் தெடி ஓடியது.

நரி அந்தப் பக்கம் ஓடியதும் முள்ளம் பன்றி இறந்த ஒட்டகத்தை கடித்துத் துண்டு துண்டுகளாக்கியது. அவைகள் தனக்கு பல நாட்களுக்கு உணவாக இருக்கும் என்று மண்ணிற்குள் புதைத்து வைத்தது. வாலை மட்டும் தனியாக எடுத்து வைத்துக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்திற்குப் பின் வாயில் கொள்ளிக்கட்டையைக் கவ்விக் கொண்டு மேல்மூச்ச கீழ்மூச்ச வாங்க ஒடி வந்தது நரி. அங்கே வந்ததும் ஒட்டகத்தின் உரோமத்தைப் பொசுக்க ஒட்டகத்தைத் தேடியது.

"ஒட்டகம் எங்கே" என்று முள்ளம்பன்றியிடம் கேட்டது.

"நாம் ஏமாந்து விட்டோம் நண்பரே! ஒட்டகம் இறக்கவில்லை. மயக்கமாகக் கிடந்தது." என்றது முள்ளம்பன்றி.

"அது இருக்கட்டும், இப்போது அந்த ஒட்டகம் எங்கே?" என்று கேட்டது நரி.

"நாமிருவரும் பேசிக்கொண்டிருந்தை எல்லாம் ஒட்டகம் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறது நரியாரே. நீர் போனவுடன் அது எழுந்து ஓடத்தொடங்கியது. நான் சின்னவன் தானே! அதனுடன் போராட என்னால் முடியவில்லை. வாலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். வாலை அது அறுத்து விட்டு அது ஓடி விட்டது." என்று எடுத்து வைத்திருந்த வாலைக் கொடுத்தது முள்ளம்பன்றி.

நரி, வாலை வாங்கிக்கொண்டது. முள்ளம்பன்றி கூறியதை நம்பியபடி நரி களைப்புடன் அமர்ந்தது.

"இனி என்ன செய்வது? இந்த வாலையாவது நாம் ஆளுக்குப் பாதி யாகச் சாப்பிடலாம்," என்றது முள்ளம்பன்றி.

"என்ன சொன்னாய் முள்ளம் பன்றியே... இவ்வளவு சின்னவாலை நாம் ஆளுக்குப் பாதியாகச் சாப்பிடுவதா? ஏற்கெனவே சரியான பசியுடன் இருந்த நான் நெருப்புக் கொண்டு வர எவ்வளவு தூரம் அலைந்து திரிந்தேன். நான் சரியான பசியில் இருக்கிறேன். இது எனக்கேபோதாது. இதில் உனக்கு வேறு பங்கா? போ...போ... உனக்கு ஒன்றும் கிடையாது." என்று சொல்லி விட்டுக் காட்டை நோக்கி வாலுடன் ஓடியது நரி.

தான் புதைத்து வைத்திருந்த ஒட்டகத் துண்டுகளை நெடு நாட்களுக்குச் சாப்பிட்டது முள்ளம்பன்றி.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.03.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 83
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 80

**பரிசுக்குரியவர்**
பழனிவேல் கிருஸ்ணகுமார்
வெஸ்ட்ஹோல் தமிழ் வித்தியாலயம்-கொட்டபுலா.

**பாராட்டுக்குரியவர்கள்**
நிறஞ்சன் குழந்தைவேல்
உவெஸ்லி உயர்தர பாடசாலை-கல்முனை.
ம.புஸ்பேந்திரன்- மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம்.
செல்வி.எல்.வசந்தமலர்- பலாபத்வெல த.வி -மாத்தளை.
எம்.ரதிதேவி-மாதம்பிட்டி வீதி, கொழும்பு-15.
அ.சஜீந்தன்- தமிழ் மத்திய மகாவித்தியாலயம்-வவுனியா.
சினாஸ் உவைஸ்-பாபுல் ஹஸன் ம.ம.வி-வறகாபொளை.
எஸ்.பன்னீர் செல்வம்
ஒபேசேகரபுர தமிழ் கலவன் பாடசாலை-ராஜகிரிய.

## விடுகதைகளும் விடைகளும்

01. தாய்க்கு மூன்றெழுத்து-மகளுக்கோ நான்கெழுத்து அது என்ன?
02. பகலிலே ஊரெல்லாம் சுற்றுவான், இரவிலே சிறையில் அடைபட்டு இருப்பான். யார் அவன்?
03. உயிரோடு ஒன்று சேர மாட்டார்கள். இறந்தபின் ஒன்று சேர்பவர்கள். யார் அவர்கள்?
04. கடையிலே வாங்கக் கூடிய ஒன்று. இரு எழுத்துகளை எடுத்தால் மானிடர்கள் தேடக்கூடிய ஒன்று. அது என்ன?
05. ஆங்கில எழுத்து ஒன்றையும் தமிழ் இலக்கம் ஒந்றையும் சேர்த்து வேகமாகச் சொன்னால், முன்னைய நாள் ஜனாதிபதி ஒருவரின் பெயர் சுருக்கமாக வரும். யார் அவர்?
06. வணங்கக்கூடிய ஒன்று. அந்தப் பெயரிலே திரைப்படம் ஒன்று உண்டு. அது என்ன?
07. உருவமோ கறுப்பு, உள்ளமோ சிவப்பு. அது என்ன?
08. பறக்கும் ஆனால் பறவை அல்ல. சூட்டலாம் அது பெயர் அல்ல. அது என்ன?
09. நாம் அவனைப் பிடிக்கலாம்; ஆனால் அவனால் நம்மைப் பிடிக்க முடியாது - அவன்யார்?
10. இளமையில் புளிப்பான்; முதுமையில் இனிப்பான் - யார் அவன்
11. ஓடிக்கொண்டிருந்தால் பார்ப்பார்கள்; ஓடாவிட்டால் வைத்தியம் பார்ப்பார்கள்?
12. விரிக்கலாம் குடையல்ல; மடிக்கலாம் மடலல்ல; மடக்கலாம் கம்பியல்ல - அது என்ன?
13. கூடினால் வெறுப்பார்கள்; குறைந்தால் எடுப்பார்கள் - அது என்ன?
14. அடுக்கடுக்காய் ஆடைகட்டி ஆடி ஆடி நிற்பாள் ஆடைகளைக் களைந்துவிட்டால் அழகாகச் சிரிப்பாள் - யார் அவள்?
15. நான்கு எழுத்துக்களைக் கொண்ட ஊரின் பெயர்; முதல் எழுத்தையும் கடைசி எழுத்தையும் இணைத்தால் உழவனுக்கு உதவும் கருவி அது என்ன?

### விடைகள்

01. உரல் உலக்கை, 02. பணம், 03. கால்கள்,
04. கவிங்கம், 05. ஜே.ஆர், 06. தெய்வம்,
07. தேயிலைதூள், 08. பட்டம், 09. குடை,
10. மாங்காய், 11. கடிகாரம், 12. கைவிரல்கள்,
13. உப்பு, 14: சோளம், 15. ஏறாவூர்.

ஏ. ஆர். சித்திசிபானி-அன்வர் வித்தியாலயம், காத்தான்குடி-06.

## ஹோரி மர்மாட்

அமெரிக்கக் கண்டத்தில் பாறைகள் அடர்ந்த மலைப்பகுதிகளில் வாழும் பெருச்சாளி போன்ற ஒரு விலங்கு ஹோரி மர்மாட். கடும் குளிரைத் தாங்கக் கூடிய அளவில் இதன் உடலில் அடர்ந்த முடிகள் காணப்படும். இலை, தழைகள் தான் இதன் உணவு. இலை, தழைகள் கிடைக்காத குளிர் காலத்தில் 'ஹைபர்னேஷன்' எனப்படும் கடும் குளிர்காலத் தூக்கத்தில் ஆழ்ந்து விடும்.



## வாரம் ஒரு நாடு

**அருபா** (தன்னாதிக்கமுள்ள டச்சுப் பிரதேசம்)

அமைவிடம்: கரிபியன் கடலில்-லீவாட் தீவுக்கூட்டங்களுள் மிகச் சிறிய தீவு.
பரப்பு: 70 சதுர மைல்
மக்கள் தொகை: 65,000 பேர்.
தலைநகரம்: ஒரேஞ்ஜெஸ்ரெட்.
பேசும் மொழி: சுதேசியமொழி: பப்பியமென்ரோ; டச்சு, ஆங்கிலம், ஸ்பானிய மொழி பேசுவோரும் உள்ளனர்.
மதம்: உரோமன் கத்தோலிக்கம், மிகச் சிறுபான்மையினர் புரொட்டஸ் தாந்து மதத்தினர்.
பார்க்க வேண்டிய இடங்கள்: வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஸொவுட்மான் கோட்டை, மூன்றாவது வில்லியம் மன்னனின் கோபுரம், பழைய புரொட்டஸ்தாந்து தேவாலயம் ஆகியவை தலைநகரான



ஒரேஞ்ஜெஸ் ரெட்டில் உள்ளன. இவை அந் நாட்டின் புராதனப் பண்பாட்டைச் சித்தரிக்கின்றன. இவை தவிர தீவினை வளைத்து அழகிய வெண்மணற் பரப்புச் சூழ்ந்த கடற்கரைகள் மிக அழகாக அமைந்துள்ளன.

## சிரிப்பிலும் வேற்றுமை

| | |
|---|---|
| கண் பார்த்து சிரிப்பவன் | -காரியவாதி |
| காணாமல் சிரிப்பவன் | -கஞ்சன் |
| கற்பனையில் சிரிப்பவன் | -கவிஞன் |
| மோகத்தில் சிரிப்பவன் | -வெறியன் |
| தெரிந்தது போல் சிரிப்பவன் | -பசப்பாளன் |
| இடம் பார்த்து சிரிப்பவன் | -எத்தன் |
| ஓயாமல் சிரிப்பவன் | - பைத்தியக்காரன் |
| ஒட விட்டுச் சிரிப்பவன் | -வஞ்சகன் |
| நீதியோடு சிரிப்பவன் | -அறிஞன் |
| செயல் மறந்து சிரிப்பவன் | -பச்சோந்தி |
| அருளுக்குச் சிரிப்பவன் | - ஆண்டி |
| துன்பத்தில் சிரிப்பவன் | -மனிதன் |

தொகுப்பு! யே.ஜெறோமி-மன்னார்.

## சைக்கிளில் உலகைச் சுற்றியவர்



முதன் முறையாக சைக்கிளில் உலகைச் சுற்றி வந்தவர் தோமஸ் ஸ்ரீவன்ஸ் என்ற அமெரிக்கர் ஆவார். இவர் மூன்று ஆண்டுகளில் சைக்கிளில் உலகைச் சுற்றி வந்தார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

மகளிடம் ஏதோ மாற்றம் ஏற்பட்டிருப்பதாக தாய் சந்தேகப் பட்டாள். முன்னைப் போல் எப்போதாவது தன்னிடம் பேசுகிற பேச்சையும் இப்போது பத்ரா குறைத்துக் கொண்டு விட்டது என்ன காரணத்தால்?

ஒருவேளைதான் செய்த தப்பு மகளுக்குத் தெரிந்து போயிருக்குமோ...

சாப்பிடக் கூப்பிட்டால் பத்ரா திருத்திரு வென்று விழித்துக் கொண்டே நிற்கிறாள்! அவளுடைய பார்வை அடிக்கடி தன்னைப் பயப்படுத்துவது போலிருந்தது நங்கைக்கு.

அன்று தன்னைச் சிவசங்கரன் அணைத்த சுகம்.... நங்கையை மறுபடியும் ஒரு சூடிகைக்குள்ளாக்கியிருந்தது நிஜம். உருண்டு திரண்ட புஜத்திலும் அகன்று கிடந்த மார்பிலுமாக முகம்பதித்து அள்ளிய உடலை- அப்படியே தனதாக்கிக் கொண்டபோது மனசுக்குள் நாராயணன் திருமேனிதான் அவளுக்குள் ஆரோகணித்திருந்தார். ஆனால் சிறிது நேரத்தில்... திணறித்திக் குமுக்காடியமனம்-அல்லவே அல்ல-இது வேறு...என்று உறுதி கொண்டு கண்விழித்தது!

முகத்தைப் பார்த்ததுமே கூசிப் போயிற்று!

அந்தக் கூச்சத்துக்குத்தான் இப்போது குமுறல்; கொந்தளிப்பு!

''வளர்ந்த பெண்ணொருத்தி இருக்கிற வீட்டிலே இப்படியா தாய் வகைகெட்டுப் போகணும்?''

கூனிக் குறுகினாள் நங்கை. ஆனாலும் சிவசங்கரனைப் பார்க்கிற போது அவளையும் அறியாத ஓர் ஆளுமைக்கு அடிபணிகிற பணிவு வந்துவிட்டது! அதட்டி வேலை வாங்கிய எஜமானியாக அல்ல; இவனுக்கு நான் அடிமை என்கிற மனோபாவத்துக்கு அளாகி விட்டாள்! சிவசங்கரன் திருமேனியைக் குடும்பத்தின் தலைவ னாகவே வரித்துவிட்டது மனசு!

ஒருநாளோடு விடுகிற விஷயமா இது?

ருசிகண்ட பூனை...பசி எடுக்கிற போதெல்லாம் பம்மிப் பதுங்கி வெளியே பாய ஆரம்பித்து விட்டது!

எப்போதும் மகளின் அருகே படுத்திருந்த நங்கை....சில இரவுகளில் திடீரென்று படுக்கையில் காணாமல் பிழிந்து கட்டிக்கொண்டு வேகமாக குளக்கதவைச் சாத்திவிட்டுப் போனாள்!

அப்புறம்...?

தவித்துப்போய் விட்டாள் தாய்! களறிப் பயிற்சிக்குப் போனமகளை வெகுநேரம் காணாததால் குழம்பிப்போய் வாசலுக்கு வந்தபோது சிவசங்கரன் முற்றத்தில் எதையோ குத்தித்துளைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தாள். மழைத் தண்ணீர் ஒரு ஓரமாகக் குளம் அமைத்திருந்தது. அதை வடிய விடத்தான் அவர் முயற்சிக்கிறார் என்று அறிந்த பிறகு.. லேசாகக் கனைத்தாள் நங்கை.

சிவசங்கரன் திரும்பிப் பார்த்தார்.

"பத்ரா இனியும் வரலியே! ஏன் இவ்வளவு நேரம்?"

"அவ அப்பவே வந்துட்டாளே!" என்றார் சிவசங்கரன். இந்த 'அப்பவே' தான் நங்கையைக் கிலிகொள்ள வைத்தது.

"அப்பவேவா....?"

"அதுக்கும் அப்புறம்!" என்றார் சிவசங்கரன். அவருக்கு ஒரு படபடப்புமில்லை. ஆனால் மொத்தப் படபடப்பும் நங்கையின் மனசில் மூண்டது! அங்கேயும் இங்கேயும் போய்ப் பார்த்தாள்.

அவள் அறையையும் திறந்து பார்த்தாள்.

பிழியாமல் போடப்பட்டிருந்த பாவாடையின் தண்ணீர் அறைக்குள் ஒழுகி வந்தது!

தன்னைத் தானே கண்ணாடியில் பார்த்தாள்.

கலவரத்தோடு ஓடியபோதுதான்.. சாம்பிராணியின் நறுமணம் பூஜை அறைக்குள்ளிருந்து வந்தது.

ஓடிப்போய் கதவைத் திறந்தாள்.

அறைக்குள் பத்மாசனமிட்டு ஈரம் ஒட்டிய ஆடையோடு அமர்ந்திருந்தாள் பத்ரா. அவள் கண்கள் மூடியிருந்தன. தியானத்தில் இருந்தாள் அவள்.

திடீரென்று! இப்படி ஏன் இவள் பூஜையில் உட்காரவேண்டும்?

நங்கையின் மனசுக்குள் மேளம் கொட்ட ஆரம்பித்ததே இதற்குப் பிறகுதான்!

அன்று இரவு, வெகுநேரம் நீண்டுகிடந்தது!

மகள் அப்போதும் சாப்பிட வரவில்லை! சிவசங்கரனுக்கு உணவு எடுத்துக் கொண்டுபோய் வைத்து விட்டு வந்தாயிற்று. அவரும் உண்டு விட்டுப் பெரிசாக ஏப்பம் விடுகிற சத்தம் கேட்டது!

என்றாலும் பத்ரா தியானத்திலிருந்து எழவேயில்லை.

பொறுமையிழந்த நங்கை புலம்ப அறைக்குள் போய் அமர்ந்து விட்டாள், பத்ரா.

'இதென்ன கூத்து? இவ்வளவு நேரத்துக்கெல்லாம் பூஜையறையிலே போய் உட்கார்ந்துட்டா இந்தப் பொண்ணு?' முனகிக்கொண்டே பின்னால் வந்தவள், அவள் தியானத்திலிருப்பதைப் பார்த்ததுமே கதவருகில் நின்று விட்டாள், நங்கை.

மத்தியானம் சாப்பாடு நேரம் வந்து அடுக்காலையில் அமர்ந்தாள். அப்போது தான் கேட்டாள் தாய்; "பக்தி வேண்டியது தான். அதுக்காக நாள் முழுக்க பூஜையிலே உட்கார்ந்துட்டா எப்ப நீ களறிக்குப் போறது?"

பத்ரா புன்னகைத்தாள்.

"நான் களறிக்குப் போகப் போறதில லேம்மா! அதைவிடக் கடவுளை நினைச்சா மனசிலே பெரும்பலம் வரும்."

"நாள் முழுக்க கடவுளையே நினைக்கப் போறியா?"

"ஆமாம்மா! சாயுங்காலம் கோவிலுக்கு ஒருநடை போனாப் போதும். காலுக்குப் பலம். மனசுக்கும் தெம்பு!

"நீ என்ன சாமியாராகப் போறியா?"

"ஆனாலும் ஆகலாம்."

எந்த ஒரு யோசனையும் இல்லாமல் எந்திரம் போலப் பேசிய மகள் சாப்பிட்டு விட்டு எழுந்து போனாள். மறுபடியும் பூஜை அறைக்கதவைத் திறந்தாள். அடைத்துக் கொண்டாள். பிறகு சாயுங்காலம் தான் மறுபடியும் கதவு திறந்தது. அப்போது

## எழுது வது யார்

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் 'முரசு'க்காக எழுதும் தொடர் இது!

வாசகர்களின்
ஊகிப்புத் திறனுக்கு சவால்!
கண்டுபிடிக்கும்
வாசகர்களில் பத்து
அதிஷ்டசாலிகளுக்கு
அசத்தலான-பரிசுகள்
காத்திருக்கின்றன.
தொடர்ந்து வாசியுங்கள்
நாம்கேட்கும் போது
விடையை எழுதி அனுப்பினால்
போதும்.

முற்றத்து வாசலின் வழியாக உள்ளே வந்து நின்றாள் பத்ரா.

கோவிலிலிருந்து திரும்பியவளின் தோற்றம் சாட்சாத் சரஸ்வதி தேவியே நடந்து வந்து நிற்பதைப் போலிருந்தது நங்கைக்கு.

இதுவே அந்த வீட்டின் தினசரி நடவடிக்கைகளாயின.

ஒவ்வொருநாளின் அதிகாலையிலும் விழித்துப் பழகிய நங்கை அதற்கும் முன்னதாகவே விழித்துக் கொண்டுபோய், இல்லக் குளத்தில் நீராடிவிட்டு ஈரம் சொட்டச் சொட்ட வந்து பூஜை அறைக்குள் அமர்ந் திருக்கும் மகளை ஆச்சரியமாகப் பார்த்தபடி நிற்பாள்.

குற்றம் மனசைக் குடையும்.

இந்தப் பெண்ணையா நாம் ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம்? என்கிற குறுகுறுப்பு! சே! இன்றைக்குச் சத்தியமாய் ஏமாற்ற க்கூடாது என்று நினைப்பாள்!

ஆனால் என்னவோ தெரியவில்லை!

சிவசங்கரனின் அறைக்குள் அவளை ஏதோ ஒரு வசியம் இழுத்துப் போவதைப் போலிருக்கும். அவர் நித்திரையைக் கலைத்து நெடுநேரம் விழிக்கவைத்து விட்டுத்தான் அதன் பிறகு தூங்க வருவாள். வந்து படுக்கும்போது மகளின் அருகே அசுத்தமாகப் படுக்கிறோமே என்கிற உறுத்தல் வரும். பயந்து போவாள்.

தலையணையை எடுத்துக்கொண்டு தரையில் படுத்துக்கொள்வாள்.

திடீரென்று விழிக்கிற போது மகள் தாயைப் பார்ப்பாள். தரையில் படுத்திருக்கிறாள் என்று நினைத்துக் கொள்வாள்!

அதுபோதும்!

இப்படித்தான் நிம்மதிப்படுவாள் நங்கை. அதன்பிறகு அவளுக்கு பொறுப்புணர்ச்சி இடிக்கும்.

"இதப்பாரு பத்ரா! நீ சரீன்னு சொல்லு. இன்னிக்கு உன்னைப் பெண்பார்க்க மாப்பிள்ளை வரப்போறார். நம்ம குடும்ப அந்தஸ்துக்குக் கொஞ்சமும் குறையில்லாத இடம்!"

மகளிடம் கெஞ்சுவாள்!

"வேண்டாம்மா! எனக்கு கல்யாணமே வேண்டாம்! தயவுசெய்து யாரையும் கூப்பிட்டு நீங்க அசிங்கப்படாதீங்க! நான் அவுங்க முன்னால வந்து நிற்கமாட்டேன்."

அடித்துச் சொல்லி விட்டுப் போய் விடுவாள் பத்ரா!

இதுவும் அந்த வீட்டில் எப்போதாவது

என்றாலும் சமாளித்து மதியச் சாப்பாட்டு வேலைகளை முடித்த க்ஷணம்....உடம்பு கொதிக்க ஆரம்பித்து விட்டது! பத்ரா சாப்பிடும் போது அம்மாவைத் தொட்டுப் பார்த்தாள்.

அதன் பிறகு....

கரிசனமாக அவளுக்குக் கசாயம் தயாரித்துக் கொடுப்பதற்குள் பொழுது போய் விட்டது! கோவிலுக்குப் புறப்பட வேண்டிய நேரம்....நெருங்கியதுமே பரபரப்பானாள் பத்ரா.

இல்லக்குளத்துக்கு வேகமாக ஓடினாள்.

இரட்டைக் கதவுகளில் இடதுபக்கக் கதவைத் திறந்தாள். அப்போது வலது பக்கத்துக் கதவும் திறந்திருந்ததை அவள் கவனிக்கவில்லை. பரபரப் பாகப் பாவாடையை அவிழ்த்துப் போட்டாள். ஒற்றைத் துண்டையெடுத்து மார்பு மறையக் கட்டிக் கொண்டாள். அங்கே வேறு யாரும் தன்னைப் பார்க்க முடியாது என்றாலும்... நிர்வா ணமாகக் குளிக்கிற பழக்கத்தை அவள் நிறுத்தியிருந்தாள்!

குளம் வெகு ஆழமானது! நீந்தவும் நிச்சலனமாய் நீர்ப்பரப்பில் மிதக்கவுமான விசாலம் உள்ளது!

எத்தனை பரபரப்பாக இருந்தாலும் நீந்த ஆரம்பித்து விட்டால் நேரம் போவதைக் கூட நினைக்க மாட்டாள் பத்ரா. அவளுக்கு அது ஒரு தேகப் பயிற்சியைப் போல்! நீந்தி முடித்ததுமே மூச்சை அடக்கிக் கொண்டு சில நிமிடங்கள் நீர்ப்பரப்பில் மிதந்தபடி தியானிக்கிற பழக்கம் இந்தச் சில நாட்களாக அவளிடம் இருந்தது!

அப்படித்தான் நிச்சலனமாய் மிதந்தாள் பத்ரா.

மல்லாந்தபடி கையையும் காலையும் ஒடுக்கிக் கொண்டவள் கண்களை மூடிக் கொண்டே சில நிமிடம் தியானித்தபோது....

அவளுடைய மேல் துண்டு அவிழ்ந்து போனதைக் கவனிக்கவில்லை.

அது மெல்ல மெல்ல ஈரம் ஏறி நீராழத்துக்கு அமிழ்ந்து கொண்டிருந்தது!

தியான நிமிடங்கள் முடிந்த பிறகுதான்



# மகரசூலம் 13

போவது அத்யாவசியமாகிவிட்டது!

அன்றே மனசுக்குள் வாளெடுத்துக் களறிக் களத்தில் கத்தியைசுற்றிச் சுழற்றியமாதிரி வீசி விளாசி தாயையும், சிவசங்கரனையும் வெட்டி வீழ்த்தி விட்டாள் பத்ரா.

ஆத்திரப்பட்டு நின்றவள் புரிந்து கொண்டுவிட்டாள்.

அதனால்தான் மனம் இருவரையுமே தண்டித்தது. கீழே கிடந்த பிணங்களைச் சுற்றிச் சுற்றிப் பேயாய் ஆடியது!

அடுத்த நிமிடமே ஓடினாள்...

இல்லத்தின் குளத்துக்குள் பாய்ந்து மூழ்கினாள்! மனசை இலகுவாக்க அந்தக் குளிரிலும் நூற்றியெட்டுத் தட வை நீந்திவிட்டுத்தான் படியேறினாள்.

அந்தக் குளத்துக்கு அப்பாவோ, அம்மாவோ இரண்டு கதவு வைத்துத் தடுத்து மேலே கூரையிட்டது இந்தப் படியில் நிற்பவர்களை அந்தப் படியில் நிற்பவர்கள் பார்க்கக்கூடாது என்பதற்காகத்தான்! இல்லத்தில் வசிப்பவர்கள் மட்டுமே குளிப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த குளம் அது. இத்தனை நாளும் திறக்கப்படாத மறுகதவு-இன்று திறக்கப்படுவதை உணர்ந்ததுமே படிக்கட்டிலேயே பம்மி உட்கார்ந்து விட்டாள் பத்ரா.

சிறிது நேரத்தில் அந்தப் பக்கம் யாரோ நீச்சலடிப்பது புரிந்தது! அதுவேறு யாமில்லை. அம்மா கொடுத்த உரிமை... சிவசங்கரனுக்கு இனி இல்லத்துக் குளத்திலும் நீச்சலடிக்கத்தைரியம் வந்து விட்டது!

பத்ரா நனைந்த ஆடைகளைப் ஆரம்பித்தாள்.

"என்ன பத்ரா இது? இப்படித் திடீர்னு பக்திலே மூழ்கிப்போயிட்டே...பசி எடுக்கலையா?"

"எனக்குப் பசி இல்லே!"

"எனக்கும் பசி இல்லே...நான் படுத்துத் தூங்கணும் பத்ரா."

"தூக்கம் வந்தா நீங்க போய்த் தூங்குங்க!"

கொஞ்சம் கோபத்தோடுதான் போய்ப் படுத்திருந்தாள் நங்கை.

மனசுக்குள் மதியநேரம் கிடைத்த மந்தகாசம்....உருளும் போதேல்லாம் உள்ளத்தின் உள்ளே முள்ளாய் உறுத்தியது!

மகள் அறிந்து கொண்டிருப்பாளா?

அறிந்து கொண்டிருந்தால் சிவசங்கரன் சாடையாகவாவது சொல்லி இருப்பாரே!

'கடவுளே! இப்படி ஒரு ஆசை ஏன் வந்தது? அதைத் தொட்டு இத்தனை அவஸ்தையும் படவா?'-நெஞ்சோடு புலம்பினாள் நங்கை. அப்புறம் எந்நேரம் தூங்கினாளோ...

விடியுமுன் வருகிற விழிப்பு எப்போதும் போல் வந்து விட்டது.

கட்டிலில் எழுந்தவள் திரும்பிப் பார்த்தாள்.

மகள் பத்ரா தூங்கிக் கொண்டிருந்தாள்.

அடுத்தநாள் முதல் நங்கையின் மனசுக்குள் மற்றொரு கடமை உணர்வு!

சீக்கிரமே பத்ராவிக்குக் கல்யாணம் செய்து வைத்துவிட வேண்டும்! முடிவெடுத்தாள் தாய். களறிக்குப் போய் விட்டு வந்தபிறகு இதைப்பற்றி மகளிடம் கேட்க வேண்டும் என்றிருந்தாள். ஆனால் அவள் களறிக்குப் போகவே இல்லை!

காலையில் மறுபடியும் பூஜை அவள் கையில் பூக்கூடையும் எண்ணையும், கற்பூரமும் இருந்தன.

"கோவிலுக்குப் போயிட்டு வரேம்மா!"

பதிலுக்காக் கூடக் காத்திராமல் புறப் பட்டுப் போனாள் பத்ரா.

சிவசங்கரன் தோப்புக்குள் வேலையாக இருந்தார். உதிர்ந்த மட்டைகளைக் கட்டிக் கொண்டிருந்தார். அவர் அதைத்தூக்கிக்கொண்டு வந்து முன்வாசலில் போடுகிறவரை காத்திருந்த நங் கைக்கு அவரிடம் இதைப் பற்றிக் கேட்கத் தோன்றியது! ஆனால்- கூச்சம். எனவே தான் வேறு தினுசாகச் சொன்னாள்.

"சீக்கிரமே பத்ராவுக்கு ஒரு மாப்பிள்ளை தேடணும் திருமேனி."

"தேடுவோம்."

"என்னவோ தெரியலே! திடீர்னு அவளுக்குப் பக்தி முத்திட்டிருக்கு திருமேனி...."

"இங்கே அவளுக்குப் பேசவும், பழகவும் துணையில்லையே! ஒருபக்கம் அம்மா- மறுபக்கம் நான்! ரெண்டு பேருக்கும் அவளோட பேசறதுக்கு என்ன விஷயமிருக்கு? அதனாலே தான் கடவுள் பக்தி. ஏகாந்தமிருந்தா அங்கெல்லாம் ஈஸ்வரத் தியானமும் வந்து விடும்! கடு மையா உழைக்கிறவனுக்கு உழைப்புத்தான் கடவுள். அதுதான் உற்சாகம்."

"ஆமாம்...அக்கம் பக்கம் அவளோட பழகுறமாதிரி ஒருத்தியும் இல்லியே!"

"அப்ப கடவுளையே நினைக்கட்டும் விடும்மா..."

அவர் வெகு இலகுவாகச் சொல்லி விட்டு மறுபடியும் தோப்புக்குள் போய் விட்டார். திண்ணையில் அமர்ந்தபடி மகளின் வரவுக்காகவே காத்துக்கொண்டிருந்தவளுக்கு அடிக்கடி பார்வை சிவசங்கரனின் மீது லயித்துக் கொண்டிருந்தது!

நடக்கிற நடப்புகளாயின.

நங்கையைப் பலரும் வந்து மொய்க்க ஆரம்பித் தார்கள்.

அப்போதெல்லாம் அவர்களுக்கு என்ன பதில் லொல்வதென்று புரியாமல் தத்தளிக்க ஆரம்பிப்பாள் அவள்.

இதைப்பற்றி சிவசங்கரனிடம் ஒருநாள் முறையிட்டாள் நங்கை. அவர் வெகு அலட்சியமாகச் சொன்னார்:

"தாம்பத்தியம், வாழ்க்கை, சுகம், துக்கம் இதைப்பற்றி பத்ராவுக்கு ஒரு விஷயமும் தெரியாது! அதனாலே தான் பக்தியை மட்டுமே கடைப்பிடிக்கிறா! அதது ஞானம் வர்ரப்ப அவளுக்கும் புருஷஸ் பரிசம்....குடும்ப வாழ்க்கை.... தாய்மை.....பாச பந்தம் அவ் வளவும் தெரியத்தான் போகுது! அதுக்குள்ளே போய் அவளை ஏன் கட்டாயப் படுத்தணும்? இப்ப என்ன வயசு அவளுக்கு?"

"பதினாறு"

"அது ஒரு வயசில்லே! அதனாலே தான் மனசிலே பக்குவம் வரல்லே! இனியும் ரெண்டு மூணு வருஷம் போகட்டுமே!"

சிவசங்கரன் பொத்தாம் பொதுவில் சொல்லிவிட்டுப் போய்விட்டார். இதுவே நங்கை யைக் கவலையில் ஆழ்த்தியது. ஏனென்றால் அந்த இரண்டு வருச காலத்துக்குள்..

தான் கர்ப்பமடைய நேர்ந்து விடலாமோ என்கிற அச்சம்! இந்தக் கவலையில் தான் அந்த மாதத்தில் தள்ளிப் போன நாட்களுக்காக ஏதோ ஒரு கைமருந்தைக் கலந்து குடித் திருந்தாள் நங்கை! அதன் வீரியம் உடம்பை ஜுரத்துக்குள் கொண்டு போய்த் தள்ளிவிட்டது மறு நாள்! படுக்கையை விட்டு எழ முடியவில்லை!

பதறினாள் பத்ரா.

உடனே நீந்திப் போய் படிகளில் ஏறினாள். ஒதுக்கலாக வைக்கப்பட்டிருந்த உடுதுணிகளைக் குனிந்து எடுக்க அவள் முற்பட்ட நிமிடம்...

அவளை அப்படியே பின்னுக்கு இழுத்து இடுப்பை ஒருகையாலும், வாயை மற்றொரு கையாலும் அமுக்கியது ஓர் உருவம்! திமிறினாள் பத்ரா. முடியவில்லை. முரண்டினாள். மொத்த உருவையும் அப் போது முன்னுக்கு வளைத்து அணைத்துக் கொண்டது அந்த முரட்டுக்கைகள்!

அப்படியே அவளைப் படியில் ஒருச்சாய்த்த போது தான் சாயங்காலத்தின் மஞ்சள் ஒளிக் கீற்று தன்மீது பரவும் மனிதனை அடையாளம் காட்டியது!

சிவசங்கரன் நம்பூதிரி!

பத்ரா செயலிழந்தாள்! நிமிடங்களையும் மறந்தாள்.

பாரம் விலகியதுமே பதறி எழுந்தாள்.

"துரோகி! துரோகி! நீ என்னை அசுத்தப் படுத்திட்டியே துரோகி!" என்று கத்தினாள்.

சிவசங்கரன் தலையைக் குனிந்து கொண்டார்.


அந்த ஒரு கணத்தில் தான் நடந்தது அது! மூச்சை அடக்கிக்கொண்டு கண்ணிமைக்கும் பொழுதில் கைகளிரண்டையும் மார்பின் குறுக்கே இறுக்கிக் கொண்டு குளத்துக்குள் பாய்ந்தாள் பத்ரா.

அவள் விழுந்த இடத்தில் ஆயிரம் வளையங்கள் ஒன்றையொன்று துரத்தின பிறகு...?


மறுபடியும் குளம் நிச்சலனமாயிற்று!

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: ஆர். முத்துலிங்கம்
வயது: 18
முகவரி: கேக்குலிஸ் எஸ்டேட், உடப்புஸ்ஸலாவ போஸ்ட்
பொழுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.




பெயர்: எம். முஹம்மது நியாஸ்
வயது: 18
முகவரி: 636, புதிய சந்தை வீதி, ஏறாவூர்-03
பொழுதுபோக்கு: நாவல், ரீ.வீ., வானொலி.




பெயர்: எஸ். கவிதா
P.O. Box No. 42262 Code No. 706543 RAY K.C.C.C. KUWAIT
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, நாவல்கள் படித்தல்



பெயர்: கே. ரஞ்சன்
வயது: 23
முகவரி: F.A.A.C. Co.W.L.L. P.O. Box-25809 SAFAT No. 13119 KUWAIT
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, புத்தகம்



பெயர்: எஸ். பரினா
முகவரி: C/O, K..P.M. ALI P.O. Box. - 10330 JEDDAH - 21443 K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி



பெயர்: எம். நஃபீர்
வயது: 25
முகவரி: U.A.M. P.O.BOX-3308 DAMMAM-31471- K.S.A
பொழுதுபோக்கு: வழமையானவை

பெயர்: ரொபேர்ட் பெனடிக்ட்
வயது: 18
முகவரி: 68/39, வேலுவானா ரோட், தெமட்டகொட, கொழும்பு-9.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம், பேனா நட்பு

பெயர்: பி. உதயணன்
வயது: 23
முகவரி: கோவில் வீதி, கிரான்
பொ.போ: பத்திரிகை, வானொலி, பேனா நட்பு

பெயர்: ஜோதிராஜா
வயது: 25
முகவரி: 35, பிரதானவீதி, பண்டாரவளை
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரகை,

பெயர்: டி. நௌஸாத்
வயது: 21
முகவரி: 50/19, டவுன் வீதி, கொழும்பு-02
பொ.போ: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, நாவல்

பெயர்: எம். ரஸ்மி
வயது: 20
முகவரி: 116, நீர்கொழும்பு வீதி, கந்தானை
பொழுதுபோக்கு: வழமையானவை

பெயர்: எம். பாஸில்
வயது: 16
முகவரி: 121ஏ, நிக்கவெவ, ஹொரவப்பொத்தானை.
பொ.போ: கிரிக்கெட், வானொலி, பத்திரிக்கை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# 17

அவள் மாலையில் வெகு நேரங் கழித்துக் களைத்து ஓய்ந்து திரும்பிவந்து சேர்ந்தாள்; எனினும் அவள் உள்ளத்தில் களிப்பே நிறைந்திருந்தது.

"நான் சாஷாவைப் பார்த்தேன்" என்று தன் மகனைப் பார்த்துச் சொன்னாள். "அவள் உனக்குத் தன் வணக்கத்தைத் தெரிவிக்கச் சொன்னாள். அந்த இகோர் இவானவிச் படாடோபமே இல்லாத பேர்வழி; சிரிக்கச் சிரிக்க வேடிக்கையாகப் பேசுகிறான். அவன் பேசுவதே ஒரு விநோதமாயிருந்தது!"

"அவர்களை உனக்குப் பிடித்துப் போனது பற்றி எனக்கு மிகுந்த மகிழ்ச்சி" என்று மெதுவாகச் சொன்னான் பாவேல்.

"அவர்கள் எல்லோருமே ஆடம்பரம் இல்லாதவர்கள்தான், பாஷா. தடபுடல் இல்லாது பழகுவதுதான் நல்ல குணம் இல்லையா? உன்மீது அவர்களுக்கு ஒரே மதிப்பு."

திங்கட்கிழமையன்றும் பாவெலுக்கு உடல்நிலை சீராகவில்லை; எனவே அன்றும் அவன் வீட்டிலேயே தங்கி விட்டான். மத்தியானச் சாப்பாட்டு வேளையில் பியோதர் மாசின் குதூகலம் பொங்கும் உணர்ச்சியோடு மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க, ஓடோடியும் வந்து சேர்ந்தான்.

"புறப்படு! உடனே புறப்படு! தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று திரண்டு நிற்கிறார்கள். அவர்கள் உன்னை உடனே அழைத்து வரச்சொன்னார்கள். நீ வந்தால்தான் எல்லாவற்றையும் விவரமாக எடுத்துச் சொல்லுவாய் என்று சிஸோவும் மாகோதினும் கூறினார்கள். வந்து பார்!"

பாவெல் பதிலொன்றும் பேசாமல், உடைமாற்றிக்கொள்வதில் முனைந்தான்.

"பெண்களும் கூடக் கூடி விட்டார்கள்; அவர்கள் அனைவரும் ஒரே கூச்சல் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்."

"நானும் வருகிறேன்" என்றாள் தாய். "அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? இரு, நானும் வருகிறேன்."

"வா சீக்கிரம்!" என்றான் பாவெல்.

அவர்கள் மூவரும் தெருவழியே விரைவாகவும் மௌனமாகவும் நடந்தனர். தனக்கு ஏற்பட்ட உணர்ச்சிப் பரவசத்தினால், தாய்க்கு மூச்சுக்கூடத் திணறித் தவித்தது. ஏதோ ஒரு மகத்தான முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் நிகழப் போவதாக அவள் உணர்ந்தாள். தொழிற்சாலையின் வாசலில் பெண்களின் ஒரே கூட்டம்; அவர்கள் சண்டையிட்டுக் கொண்டும் சளசளத்துக் கொண்டும் இருந்தார்கள். தொழிற்சாலையின் முற்றத்துக்குள் அவர்கள் மூவரும் நுழைந்தவுடனேயே அவர்களைச் சுற்றிலும் உணர்ச்சிப் பரவசத்தோடு இரைந்து கொண்டிருக்கும் இருண்ட மாபெரும் ஜனக்கூட்டத்தைக் கண்டார்கள். தொழிற்சாலையின் உலைப் பட்டறைச் செங்கற் சுவருக்குப் பக்கத்தில் கிடந்த பழைய இரும்புச் சாமான்களின் குவியல் மீது சிஸோவ், மாகோதின், வியாலவ் முதலியவர்களும், செல்வாக்குள்ள ஐந்நூறு தொழிலாளிகளும் நின்று கொண்டிருந்தார்கள். தொழிலாளர்களின் கவனம் முழுவதும் அவர்கள் பக்கமே திரும்பியிருந்தது என்று தாய் கண்டாள்.

"இதோ பாவெல் விலாசவ் வந்து விட்டான்!" என்று யாரோ சத்தமிட்டார்கள்.

"விலாசாவா? அவனுக்கு வழி விடுங்கள்."

"சத்தம் போடாதீர்கள்!" என்ற குரல் பல திசைகளிலிருந்து ஒரே சமயத்தில் ஓங்கி ஒலித்தது.

எங்கோ பக்கத்திலிருந்து ரீபினின் நிதானமான குரல் கேட்டது: "நாம் வெறும் கோபெக்குக்காகப் போராடப் போவதில்லை; நியாயத்துக்காகவே போராட வேண்டும்! ஆமாம்! நாம் இந்தக் கோபெக் காசைப் பிரமாதப்படுத்தவில்லை. நமது கோபெக்கும் மற்ற காசுகளைப்போலவே வட்டக் காசுதான். ஆனால், மற்றவற்றைவிட இதன் கனம் அதிகம், அவ்வளவுதான். ஆனால், மனேஜரின் ரூபிளில் இருப்பதைவிட நமது கோபெக்கிலுள்ள மனித இரத்தம் அதிகம்! நாம் வெறும் காசை மதிக்கவில்லை; அந்தக் காசிலுள்ள இரத்தத்தை, நியாயத்தைத்தான் மதிக்கிறோம்! ஆமாம்!"

அவனது பேச்சுக் கூட்டத்தினிடையே பரவி ஒலித்தது. உடனே பல குரல்கள் எழும்பின.

"ரொம்ப சரி, ரீபின்!"

"நன்றாய்ச் சொன்னாய்!"

"பாவெல் இதோ வருகிறான்!"

தொழிற்சாலை யந்திரங்களின் கர்ஜனை, நீராவியின் இரைச்சல், யந்திரச் சக்கரங்களின் மீது ஓடும் நாடாக்களின் படபடப்பு முதலிய சகல ஓசைகளையும் அமுங்கடித்து, ஓங்காரமிடும் சுழற்காற்றாக ஒன்ற கலந்தது, அத்தொழிலாளர்களின் குரல்கள். எட்டுத் திசைகளிலிருந்தும் ஜனங்கள் தங்கள் கைகளை ஆட்டிக் கொண்டும், ஒருவருக்கொருவர் உணர்ச்சிமயமான கொதிப்படைந்த வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டும் திரண்டு ஓடி வந்தார்கள். ஓய்ந்து களைத்த அவர்களது உள்ளங்களில் பதுங்கிக்கிடந்த அதிருப்தி உணர்ச்சி உயிர் பெற்றெழுந்து, போக்கிடம் தேடி முட்டி மோத ஆரம்பித்தது. எனவே அந்த அதிருப்தி உணர்ச்சி தனது அகன்ற இறக்கைகளை வீசியடித்து மேலே பறந்தெழுந்தவாறு தன்னோடு அந்த மக்களையும் கட்டிப் பிணைத்து இழுத்தொடிக்கொண்டு, அவர்களை ஒருவருக்கொருவர் மோதிச் சாட விட்டுக்கொண்டு, வெற்றிகரமாக வெளிப்பட்டது. அந்த உணர்ச்சியினால், அவர்கள் மனத்தில் வஞ்சம் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் சுவாலை வீசிக் கனன்றது. ஜனசமுத்திரத்துக்கு மேலாக புகைக்கரியும் செந்தூளும் பறந்து கவிந்தன. அவர்களது உணர்ச்சி வசப்பட்ட முகங்களில் வியர்வை பூத்து மினுமினுத்தது; கன்னங்களில் கறுத்த வியர்வை நீர் வழிந்திறங்கியது; அவர்களது கரிய முகங்களில் கண்களும் பற்களும் மட்டும் பிரகாசமாகப் பளிச்சிட்டன.

சிஸோவும் மாகோதினும் நின்றிருந்த இரும்புக் குவியலின் மீது பாவெலும் ஏறி நின்றான்.

"தோழர்களே!" என்று அவன் கத்தினான்.

அவனது முகம் எவ்வளவு தூரம் வெளுத்துப் போய் விட்டது, உதடுகள் எப்படி நடுங்குகின்றன என்பதையெல்லாம் தாய் கவனித்துக் கொண்டிருந்தாள். தன்னையுமறியாமல், அவள் கூட்டத்தினரை இடித்துத் தள்ளிக்கொண்டு முன்னேறிச் சென்றாள்.

"யாரம்மா நீ? ஏன் இப்படி இடித்துக் கொண்டு போகிறாய்?" என்று அவளை நோக்கி எரிந்து விழுந்தார்கள் தொழிலாளர்கள்.

அவர்களும் அவளைப் பதிலுக்கு இடித்துத் தள்ளினார்கள். என்றாலும் அதனாலெல்லாம் அவள் பின் தங்கிவிடவில்லை. தோளாலும், கையாலும் இடித்து மோதிக் கூட்டத்தைப் பிளந்துகொண்டு அவள் முன்னேறினாள்; தன்னுடைய மகனுக்குப் பக்கத்தில் சென்று தானும் நிற்கவேண்டும் என்ற உணர்ச்சியே அவளை உந்திப் பிடித்துத் தள்ளிக்கொண்டு முன்னேறச் செய்தது.

'தோழர்களே' என்ற அந்த வார்த்தை அவனது நெஞ்சிலிருந்து வெடித்துப் பிறந்தபோது, அவனைப் பொறுத்தவரையில் பரிபூரண அர்த்த பாவம் கொண்டிருந்த அந்த வார்த்தையைச் சொன்னபோது அவனது தொண்டைக்குழி போராட்ட உணர்ச்சியின் ஆனந்த வெறியால் அடைபட்டுத் திணறுவது போலிருந்தது. உண்மையாலும், உண்மையைப் பற்றிய கனவுகளாலும் கனன்றெரிந்து கொண்டிருந்த தனது இதயத்தை, அந்த மக்களுக்குச் சமர்ப்பித்துவிட வேண்டும் என்ற ஆசை அவனைப் பிடித்து உலுப்பியது.

பெருங்களிப்புடனும் தெம்புடனும் அவன் மீண்டும் முழங்கினான்: "தோழர்களே! தேவாலயங்களையும் தொழிற்சாலைகளையும் கட்டி யெழுப்புவது நாம்; கைவிலங்குகளையும் காசுகளையும் உருவாக்குவதும் நாம்தான். தொட்டில் முதல் சுடுகாடு வரை ஒவ்வொருவரின் உணவுக்கும், களிப்பிற்கும் ஆதார சக்தியாய் திகழ்வது நாம்!"

"ஆமாம், ஆமாம்!" என்று கத்தினான் ரீபின்.

"எங்கு பார்த்தாலும் சரி, எப்போது பார்த்தாலும் சரி, நாம்தான் உழைப்பதில் முன்னணியில் நிற்கின்றோம்; வாழ்க்கையிலேயோ நாம்தான் பின்னணியில் நிற்கின்றோம். நம்மைப் பற்றி யார் கவலைப் படுகிறார்கள்? நமது நன்மைக்காக, யாராவது நம்மை மனிதப் பிறவிகள் என்றாவது சிறிதளவாவது உதவியிருக்கிறார்களா? யாராவது நம்மை மனிதப் பிறவிகள் என்றாவது மதிக்கிறார்களா? இல்லை, ஒருவருமே இல்லை!"

"ஒருவருமே இல்லை" என்று எங்கோ ஒரு குரல் எதிரொலித்தது.

பாவெல் மீண்டும் தன்னைச் சுதாரித்துக் கொண்டு அமைதியுடனும் எளிமையுடனும் பேசத் தொடங்கினான். மக்கள் அனைவரும் ஒரு ஆயிரந்தலை உடல்போல ஒன்று சேர்ந்து அவனை நோக்கி நகர்ந்தனர். அனைவரும் ஆர்வம் நிறைந்த கண்களோடு அவனது முகத்தையே பார்த்தார்கள்; அவன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் அள்ளிப் பருகினார்கள்.

"நமது உரிமைகளுக்காகப் போராடும் ஆசையால் ஒன்று திரண்டு ஒருவரோடு ஒருவர் பிணைந்து நின்று, நாமெல்லாம் நண்பர்கள் என்ற உண்மையை உணர்ந்தாலன்றி, நமது சுகவாழ்வை நாம் போராடிப் பெறமுடியாது!"

"விஷயத்துக்கு வா!" என்று தாய்க்குப் பக்கத்திலிருந்து ஒரு முரட்டுக்குரல் கத்தியது.

"குறுக்கிட்டுப் பேசாதே!" என்று வெவ்வேறு இடங்களிலிருந்து இரண்டு குரல்கள் ஒலித்தன.

தொழிலாளர்களது கறுத்த முகங்கள் நம்பிக்கையற்றுச் சுருங்கிச் சுழித்தன. எனினும் பல தொழிலாளர்கள் பாவெலின் முகத்தையே ஆழ்ந்து நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

"இவன், சோஷலிஸ்ட்! முட்டாள் அல்ல!" என்றது ஒரு குரல்.

"தைரியமாகப் பேசுகிறான், இல்லை?" என்று ஒரு நெட்டையான ஒற்றைக் கண்ணனான தொழிலாளி தாயை இடித்துக் கொண்டே சொன்னான்.

"தோழர்களே! நமக்கு உதவி செய்வதற்கு, நம்மைத் தவிர யாருமே கிடையாது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது. ஒவ்வொருவரின் நன்மைக்காக நாம் எல்லோரும் ஒன்று சேர வேண்டும். எல்லோருடைய நன்மைக்காகவும் ஒவ்வொருவரும் ஒன்றாக வேண்டும். நமது எதிரிகளை ஒழிப்பதற்கு இதுவே நமது தாரக மந்திரம்!"

"ஏ பையன்களா! இவன் உண்மையைத்தான் பேசுகிறான்!" என்று தன் முஷ்டியை மேலே உயர்த்திக் காட்டிக் கொண்டே பேசினான் மாகோதின்.

"மனேஜரைக் கூப்பிடுங்கள்!" என்று கத்தினான் பாவெல்.

கூட்டத்தினர் மத்தியில் திடீரென ஒரு சூறாவளிக் காற்று சுழித்து வீசிய மாதிரி தோன்றியது. அந்தக் கூட்டமே அசைந்து கொடுத்தது. ஒரே சமயத்தில் எண்ணற்ற குரல்கள் உரக்கக் கத்தின:

"மனேஜரைக் கூப்பிடு!"

"அவருக்கு ஆள் அனுப்புங்கள்!"

தாய் மேலும் முன்னேறி வந்தாள். பெருமிதமும் பெருமையும் பிரதிபலிக்கும் முகத்தோடு தன் மகனை ஏறிட்டுப் பார்த்தாள். பாவெல் அந்த மதிப்பும் வயதும் நிறைந்த தொழிலாளர்களுக்கு மத்தியில் நின்று கொண்டிருந்தான். அது மட்டுமா? ஒவ்வொருவரும் அவன் பேச்சைக் காது கொடுத்துக் கேட்டார்கள். அவன் சொன்னவை அனைத்தையும் ஒப்புக் கொண்டார்கள். அவன் கோபாவேசமடைந்து, மற்றவர்களைப்போல் வசைமாரி பொழியாதிருந்தது பற்றி அவளுக்குப் பிடித்தது.

தகரக் கொட்டகையிலே கல் மழை பொழிந்த மாதிரி கேள்விகளும் வசைமாரிகளும், குத்தலான வார்த்தைகளும் இரைந்து ஒலித்தன. பாவெல் ஜனக் கூட்டத்தைக் குனிந்து நோக்கினான். தனது அகன்று விரிந்த கண்களால் அந்தக் கூட்டத்திடையே எதையோ துழாவிக் காண்பது போலக் கூர்ந்து பார்த்தான்.

"தூது செல்வது யார்?"

"சிஸோவ்!"

"விலாசவ்!"

"ரீபின்தான் சரி! அவன் துடியாகப் பேசுவான்!"

திடீரென அமுங்கிப்போன குரல்கள் கூட்டத்தினிடையே கலகலத்தன.

"அவரே வந்து விட்டார்!"

"அதோ மனேஜர்!"

கூரிய தாடியும், நீண்ட முகமும் கொண்ட ஒரு நெட்டை மனிதன் வருவதற்கு வழிவிட்டு ஜனக்கூட்டம் இடம் கொடுத்து விலகியது.

"வழியை விடுங்கள்!" என்று சொல்லிக் கொண்டே, தொழிலாளர்களைத் தொட்டு விடாதபடி, மெதுவாக வழி விடும்படி கையாட்டிக் கொண்டே வந்தான் அவன். அவனது கண்கள் குறுகிச் சுழித்திருந்தன. மனிதர்களை அடக்கியாளும் அதிகாரியின் பழகிப் போன பார்வையோடு அவன் தொழிலாளர்களை முறைத்துப் பார்த்துக் கொண்டே முன்னேறினான். தொழிலாளர்கள் தங்கள் தொப்பிகளை எடுத்துவிட்டு, அவனுக்கு மரியாதையாக வணங்கினர். ஆனால் அவனோ தான் பெற்ற மரியாதைக்குப் பிரதி வணக்கமே செய்யாமல், முன்னே சென்றான்.

(தொடர்ந்து வரும்)

**என்றும் முதலிடம்**

உலகில் மிகச் சிறந்த நாவல் எது? ஒரே பதில்-

தாய்! தாய்!! தாய்!!!

உண்மைகள் எப்போதும் வசீகரமானவை-


அதுதான் 'தாய்' நாவல்

எப்போதும் முதலிடத்தில் இருக்கிறது!

தவறவிடாமல் தொடர்ந்து வாசியுங்கள்!

ரகுநாதனின் மொழி பெயர்ப்புநடை பிரமாதப்படுத்துகிறது.

-ஆ.ர.







## மக்சீம் கார்க்கி

---

# "இவளும் மனைவிதானே"



சிலாபம்-பொ.புஷ்பராஜு

கீதா திருமணம் முடித்து பத்தே நாள்தான் கழிந்திருந்தது. திருமணம் முடித்த கையோடு தனிக் குடித்தனமும் அமைத்துக் கொண்டாள். கீதா கெட்டிக்காரிதான். மாமியாரிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே தன் கணவனிடம் சொல்லி வீடு ஒன்றையும் வாடகைக்கு எடுத்துவிட்டாள். கீதாவின் இந்த தந்திரம் வேறு எந்தவொரு பெண்ணுக்கும் தெரியாது.

திருமணத்தின்பின் இன்றுதான் முதன் முதலாக ஆபிசுக்கு வேலைக்குப் போனாள். வேலை முடிந்ததும் வீட்டுக்கு வரும் வழியில் தன் கணவன் சந்திரனுக்கு ஒரு அப்பிள் பழத்தை வாங்கி தோளில் தொங்கிக்கொண்டிருந்த தோள் பேக்கில் போட்டுக்கொண்டாள்.

சிறிது தூவானம் வீசியது. குடையை விரித்து பிடித்துக்கொண்டாள். வேகமாக நடக்கத் தொடங்கினாள். வீதியில் கிடந்த தூசி சிறு துவானத்திற்கே ஒரு புதுவிதமான மணத்தை வெளியேற்றிக்கொண்டிருந்தது. அவளது வேக நடையுடன், மனதும் வேகமாக பேசத் துவங்கியது.

'அத்தான் என்ன செய்தாரோ தெரியவில்லை. பாவம். மணியும் மாலை 4.30 ஆகிவிட்டது. தேனீர் குடித்தாரோ தெரியவில்லை. பகலைக்கு எப்படித்தான் சாப்பிட்டாரோ தெரியவில்லை. காலை ஆறு மணிக்கு சமைத்து வைத்த சாப்பாடு. சூடும் ஆறிப்போயிருக்கும். இன்னும் பத்து நாள் முடிந்தால் அவரும் சவூதி போய்விடுவார். மீண்டும் நான் தனிமையில்,..கீதாவின் மனது இப்போது சோகமாகிவிட்டது.

கீதாவின் வேக நடையால் ஒரு பெரிய மழை பெய்யத் தொடங்கமுன் வீட்டுக்கு வந்துவிட்டாள். வீட்டுக்கு வந்தவளுக்கு வாசலில் கிடந்த செருப்பைக் கண்டதும் ஒரே அதிர்ச்சி. வீட்டினுள் யாரோ இனந் தெரியாத ஒரு பெண்ணின் குரல் ஒலி சத்தம்.

"மெதுவா...மெதுவா...ஆ... ஐயோ... வலிக்குது...லேசாக ...நரம்பு...ஆ அம்மாவே!"

இந்தக் குரலைக் கேட்டதும் கீதாவின் முகம் மெதுவாக சிவந்து வியர்த்துக்கொட்டியது. தன் கழுத்தை அலங்கரித்துக்கொண்டிருந்த தாலிக் கொடியை தடவிப் பார்த்தாள். தாலிக் கொடி இன்னும் கீதாவின் கழுத்திலேயே தொங்கிங்கொண்டிருந்தது.

சந்திரன் மீது பெரும் அன்பையும், மரியாதையையும் நெஞ்சுக்குள் புதைத்து வைத்திருந்த கீதாவின் எண்ணங்கள், கனவுகள் எல்லாம் ஒரு சில நிமிடங்களிலேயே பளிங்கு மாளிகையைப் போல உடைந்து கொட்டத் தொடங்கியது.

'பாழாய்ப் போன இவனுக்கு என்ன கொழுப்பு. இவனுக்குப் போய் நானும் அப்பிள் பழம் வாங்கி வந்தேனே? என்னை அடிக்கணும். தேய்ந்த செருப்பால. நேற்று இரவுவரை கண்ணே, மணியே, என் தங்கமே, இனி நீ இல்லாத உலகம் எனக்கும் உலகமா என வீர வசனம் பேசினானே இவன்தான் ஏக பத்தினி விரதனா? இவன் வேஷக்காரன். "கீதா தன் மனதிலே சந்திரனை திட்டிக் கொண்டே தோள் பேக்கில் கிடந்த அப்பிள் பழத்தை மிக ஆவேசமாக தூக்கி வீதிக்கு எறிந்தாள்.

வீதியிலே ஓடிக்கொண்டிருந்த லொறியின் சில்லுக்கு அகப்பட்டு அப்பிள் பழம் சக்கையாகி அடையாளமே தெரியாது கிடந்தது.

"அந்த பழத்தைப் போலத்தான் இன்று சந்திரனையும் உதைக்கவேண்டும். கஷ்டப்பட்டு சம்பாதித்த என் அப்பாவின் பணத்தை சீதனமாக பெற்றுக்கொண்டு, கல்யாணம் செய்த பத்தே நாளில் இவனுக்கு ஒரு வைப்பாட்டி. நாசம் அறுந்தவன். குறை மாதத்திலதான் இவனை என் அருமை மாமியார் பெத்திருப்பாளோ? திமிர் பிடித்தவன்." மீண்டும் மனதுக்குள் எரிமலையாக குமுறினாள் கீதா.

வீட்டின் உள்ளே "லேசா... மெதுவா.... வலிக்குது...சும்மா வளையல்....."

இந்த முனகல் சத்தத்தைக் கேட்ட கீதா சும்மாயிருப்பாளா? அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து நடந்த கல்யாணத்தின் நாயகிதானே கீதா. கீதாவுக்கு ஒரு மாதவி வர வழி வைப்பாளா?

கீதாவின் நுனி மூக்கு சிவந்து தக்காளிப் பழத்தைப்போல சிவந்திருந்தது. தோளில் தொங்கிக்கொண்டிருந்த பேக்கை கழற்றி வாசல் படியில் போட்டுவிட்டு, உடுத்தியிருந்த சேலையின் முந்தானையை இடுப்பில் செருகிக்கொண்டாள். தன் காலில் இருந்த செருப்புகளில் ஒன்றை கழற்றி கைக்கு எடுத்தாள்.

மதுரையை எரித்த கண்ணகியாக மாறுவோமா அல்லது இருவரையும் கட்டி வைத்து செருப்பால் அடிப்போமா? இல்லை; சந்திரனை மட்டும் விளாசி விடுவோமா? இந்த விடயத்தில் அவளால் ஒரு முடிவுக்கு வர மனம் இடம்தரவில்லை. சத்தம் போட்டு அக்கம் பக்கத்து வீட்டாரை கூப்பிட்டு கூச்சல் போடுவோமா?

"ச்சே...வேணாம். விடயம் மோசமாகி விடும்." மீண்டும் உள்ளே பெண்ணின் குரல் மெதுவாக கேட்டது. கீதா தன் நிலையை எண்ணி வருந்தினாள். என் வாழ்க்கையே வீணாகிவிட்டதே....

"மெதுவாக....கையை வி....டு... ஆ..... வலிக்குது.

"சும்மாயிருங்க. சத்தம் போட்டு ஊரையே வரவழைச்சுப்புடுவீங்கபோல அல்லவா தெரியுது" இது சந்திரனின் குரல்.

கீதா ஆத்திரம் மேலிட காளிதேவியாகி விட்டாள். "இனியும் பொறுத்துக்கொண்டிருந்தாள் என் நிலைமை; யோசித்துவிட்டு கையில் செருப்புடன் தனக்கு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு வீட்டினுள் நுழைந்தாள்.

கீதாவை பார்த்ததும் சந்திரன் "என்ன கீதா ஏதும் விபரீதம் ஆபிசில் நடந்துவிட்டதா? ஏன் இந்தக் கோலம்.

கீதா பதில் சொல்ல இயலாது தடுமாறினாள். தவறு அல்லவா செய்துவிட்டேன். இவர் ஒரு எலும்பு முறிவு வைத்தியர் என்பதை அவசர புத்தியில் மறந்துவிட்டேனே. அடப்பாவமே, கீதா மனதிற்குள் வருந்தினாள்.

அப்போது நாற்காலியில் உட்கார்ந்திருந்த எண்பது வயது கிழவியான செல்லாச்சிக்கு வலது கை முறிவுக்கு மருந்து எண்ணெய் பூசி சந்திரன் கட்டுகட்டிக்கொண்டிருந்தான்.

கீதாவின் கண்களிலிருந்து வடிந்து விழுந்த கண்ணீர் துளிகள் செல்லாச்சியின் சேலையை நனைத்தது. கீதாவும் ஒருத்தனுக்கு மனைவி தானே என்பதை மட்டும் அவள் மனம் மறக்கவோ, மறுக்கவோ இல்லை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை



# கம்பனித் தோட்டம்!

ஹப்புத்தளையூர்–எப். லெனாட்குமார்

அந்த தோட்டத்திலுள்ள அனேகமான வீடுகளில் அடுப்பு எரியவில்லை. சந்ததி சந்ததியாய் அடிமையாய் வாழும் இவர்களுக்கு வறுமை வாடிக்கையாகிப் போயிருந்தது. வானம் கூட ஓய்வதாயில்லை. எல்லாத்திசையிலும் கருமேகக் கூட்டங்கள் சூழ்ந்து, விடாமல் மழை பெய்துகொண்டிருந்தது.

மாரியாயிக்கு மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை. பசியோடு உறங்கிக் கொண்டிருந்த தனது ஐந்து வயது மகனை பரிவோடு பார்க்கிறாள். ஒட்டிப் போன வயிறும், பின்புறம் கிழிந்த காற்சட்டையுமாய் அவன் தரையில் உறங்கிக்கொண்டிருக்கிறான். முட்டிக்கொண்டு வந்த கண்ணீரை தன் இடக்கையால் துடைத்து விட்டபடி, மறுகையால் தனது ஆறுமாதக் கைக்குழந்தையை அணைத்து வைத்திருக்கிறாள்.

பக்கெட் பால்மா வாங்க வழியில்லாததால் தாய்ப்பால் மட்டுமே ஊட்டவேண்டிய நிர்ப்பந்தம். தாய் உண்டால் தானே பாலூறும்? பால் வற்றிப் போயிருந்தது. இரண்டு மூன்று தரம் பசியோடு முலைக் காம்புகளை இழுத்துப் பார்த்த பிஞ்சுக்குழந்தை பால் வராததால் பசிதாங்க முடியாமல் கதறி அழ ஆரம்பித்திருந்தது. லயக் கூரையினூடாக ஊற்றெடுக்க ஆரம்பித்திருந்த மழைத்துளிகள் அந்த வீட்டின் தரையில் தஞ்சந் தேடிக் கொண்டிருந்தன. தொடர்ந்து அழும் குழந்தையின் குரல் கேட்டு பட்டென விழித்து எழுந்துகொள்கிறான் மூத்த மகன் சந்தனம்.

"அ...ம்....மா எனக்கு பசிக்குதம்மா! ஏதாவது இருந்தாகொடு...!" கொட்டாவி விட்டபடி அவன் கூறி முடிக்க,

"கொஞ்சம்...பொறுத்துக்க மகன்! அப்பா இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துருவாரு! வந்தோன ரொட்டி சுட்டு தாரேன்! பசியா இருந்தா கொஞ்சம் பச்சத் தண்ணிய எடுத்துக்குடி!" கரகரத்த குரலில் கூறி முடிக்க, அவன் வேண்டா வெறுப்பாக எழுந்து தண்ணீர் குவளையொன்றை எடுத்துக் குடித்துவிட்டு மிண்டும் உறங்கப் போகிறான்.

ஒழுங்காக தோட்டங்களில் வேலை கொடுத்தாலே மூன்று வேளை சாப்பாட்டையாவது ஒழுங்காக சாப்பிடமுடியாத ஏழைத் தொழிலாளர்களுக்கு, தோட்டம் வேலை நிறுத்தத்தில் இருக்கும் போது எப்படி ஒரு வேளையாவது சாப்பிடமுடியும்?

ஆம்! இப்போது இந்த தோட்டம் வேலை நிறுத்தத்திலிருந்தது. இவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு கம்பனிக்காரர்கள் தலைசாய்க்கவில்லை. வாரம் ஐந்து நாட்கள் என வழங்கப்பட்ட வேலை, வாரம் இரண்டு நாள் அல்லது மூன்று நாளென வழங்கப் பட்டது இன்னொரு காரணம். குருதி தந்து, ஏன், உயிர்தந்து உழைக்கும் தொழிலாளிகளுக்கு மட்டும் கோபம் வராதா என்ன? வந்தது. இதன் மூலம் அடாவடித்தனம் காட்டும் கம்பனிக்காரர்களுக்கும் நட்டம் தானென்றாலும் அதிகமாய் பாதிக்கப்பட்டவர்கள் ஏழைத் தொழிலாளர்கள் என்றே கூற வேண்டும்.

மாரியாயின் கணவன் கந்தசாமி. தோட்டத்தலைவரும் கூட. இப்போது அவன் நாட்டுக்கு வயல் வெட்டப்போயிருந்தான். அவனுக்கு அதன் மூலம் கூலியாக கிடைக்கும் பலாய்க்காய்களும், கொஞ்சம் அரிசிமாவும் தான் அவர்களை இத்தனை நாளாவது சாகாமல் வாழவைத்திருந்தன. இன்றும் அவன் ஏதாவது கொண்டு வருவான் என்ற நம்பிக்கையில் தான் சற்றாவது அவள் மனம் சந்தோசமாயிருந்தது.

□□□

"இங்க....பாரு....கந்தசாமி! நீயெல்லாம் வேலைக்கு போகாம இருந்தா ஒனக்கெல்லாம் தான் நஸ்டம்! பேசாம இன்னிக்கு ஒவுட்டு ஆளுகள வேலைக்கு போக சொல்லு! கம்பனிக்காரங்க நீ நினைச்ச மாதிரி எல்லாத்துக்கும் தலையாட்ட மாட்டாங்க! புரியுதா?" அந்த தோட்டத்து துரை தான் பேசினார்.

"ஐயா... எங்க தோட்டத்துக்காரங்க படிக்காதவங்கதான் ஆனா முட்டாளுங்க இல்ல! கம்பனிக்காரங்க எங்க தோட்டத்தையே வீணாக்கிட்டாங்க! நாங்க கேட்கிறது நியாயமான கோரிக்கைகள் தாங்க" தோட்டத்து தலைவர் கந்தசாமி தான் பேசினான்.

"ஆமாங்க... நம்டி தலைவரய்யா சொல்லுறது தாங்க சரி!" கூடி நின்ற சனமே ஒற்றுமையாய் ஒரே குரலில் ஒலி எழுப்பின.

துரையின் கண்கள் சிவந்திருந்தன. அவருக்கும் அவர்களின் கோரிக்கைகள் நியாயமானது என்று தெரியும்? தோட்டத்தில் வேலை நடக்க வேண்டும். லாபத்தை மட்டும் கம்பனி சொந்தக்காரர்களிடம் காட்ட வேண்டும்! இவர்களின் நலனில் அவருக்கு அக்கறையில்லை. அவர் மனம் பெரியதோர் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தது.

□□□

"சாமி.... ஏவுட்டு புருசன் என்னங்க செஞ்சாரு? ஐயா அவர கொண்டு போகாதீங்கய்யா!" மாரியாயி பதறி அழுது கொண்டிருந்தாள்.

"இங்க பாரு பொம்பள! ஒவுட்டு புருசன் தேயிலய புடுங்கி தோட்டம் செய்ய பாத்திருக்கான்! கம்பனிக்கு எவ்வளவு நஸ்டம் தெரியுமா? அதுதான் இவன பொலிசுக்கு கொண்டு போறம்!" தோட்டத்துரை தனது அதிகாரத்தோடு கூறி முடிக்க....

"ஐயா இவரு தேயிலய உசிரா மதிக்கிறவருங்க! அப்படி செஞ்சிருக்க மாட்டாருங்க! அவர விட்டிடுங்கய்யா!" அவள் தொடர்ந்து அழுதுகொண்டிருந்தாள்.

"போ! போ! அங்கிட்டு!" கந்தசாமி கண்ணீர் வடிய பொலிஸ் வண்டியில் உட்கார்ந்திருந்தான். பின் வண்டி மெல்ல நகர ஆரம்பித்தது. மாரியாயி கதறி அழுதுகொண்டிருந்தாள்.

"இங்க பாரு நீயெல்லாம் வேலநிறுத்தத்த கைவிட்டுட்டு ஒழுங்கா வேலைக்கு போறது தான் நல்லம்!" அதிகாரத்தோடு கூறி விட்டு தனது பெஜிரோ வண்டியில் ஏறிக் கொள்கிறார் துரை. அதுவும் தன் திட்டத்தின் படி வேறு சிலரை வைத்து தேயிலை பிடுங்கி அதனை தலைவர் கந்தசாமி மேல் போட்டு அவனை பொலிஸில் அனுப்பி விட்ட திருப்தியுடன்.

தொழிலாளர் கூட்டம் மேலும் கூடியிருந்தது.

பெண்களின் முதுகில் கூடையும், ஆண்களின் கையில் சுரண்டியுமாக! எல்லோர் கண்களிலும் இயலாமையின் ஏக்கம்! வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. உதட்டில் புன்னகையொன்றை உதிர்த்தபடி தோட்டத்துரை தன் வாகனத்திற்கு உயிர் கொடுக்க ஆரம்பித்தார்.

# மௌனத் தீ........

எம்.சுரேஷ்



அந்த சிகப்பு நிற BMW ஆடம்பரக் கார் அமைதியாக நகரத்தை ஊடுருவிக் கொண்டிருந்தது. உள்ளே பின் ஆசனத்தில் முரளிகிருஷ்ணா சாய்ந்திருந்தார். அளவான உடல். உயரம். லேசாக வளர்ந்திருந்த தாடி மற்றும் அவர் அணிந்திருந்த விலை உயர்ந்த ஆடை.... எல்லாம் அவர் ஒரு அழகான, மதிப்பான மனிதர் என்பதை உறுதிப்படுத்தியது.

வாழ்க்கையில் கீழ் மட்டத்திலிருந்து தன் முயற்சியால் முன்னேறி, இன்று இலங்கையில் ஒரு மிகப்பெரிய தொழிலதிபராகத் திகழும் முரளிகிருஷ்ணா ஏற்கெனவே வாழ்க்கையில் சந்தித்திருந்த பலதரப்பட்ட அனுபவங்களால் நன்கு பக்குவப்பட்டிருந்தார்.

கார் கண்ணாடியூடாக வீதியை நோட்டமிட்டுக்கொண்டே, கடைசியாகச் செய்த வர்த்தக ஒப்பந்தம் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த அவர் அந்த பஸ்தரிப்பு நிலையத்தைப் பார்த்ததும் சற்று மனம் குழம்பிப் போனார். கார் நின்றது. முரளிகிருஷ்ணா இறங்கினார்.

பஸ் தரிப்பு நிலையத்தில் கூட்டம் அதிகம். அங்கே ஒரு ஓரமாக நின்றுகொண்டிருந்த நடுத்தர வயதுப் பெண்மீது முரளிகிருஷ்ணாவின் பார்வை பதிந்து நிலைத்தது. அவள் கையில் ஒரு பையோடும், குழந்தையோடும் நின்றுகொண்டிருந்தாள்.

அருகில் சென்ற முரளிகிருஷ்ணா,

"நீ...நீ....நல்லா இருக்கியா?"

கேட்டதும், அவர் முகத்தை ஊன்றிக் கவனித்த அப்பெண்ணின் முகத்தில் மிகப்பெரிய மாற்றங்கள். இருப்பினும் அவள் ஒன்றும் பேசவில்லை.

"ஏன் பேசமாட்டேங்கிற?"

இப்போது அவள் கண்கள் கலங்கின. முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டாள். கொஞ்ச நேரம் ஒன்றும் பேசாமல் மௌனமாய் நின்ற முரளிகிருஷ்ணா அமைதியான குரலில்,

"இது நீயாத்தேடிக்கிட்ட வாழ்க்கை தானே?"

அவள் இப்போதும் மௌனம் சாதித்தாள்.

"இது.... ஒன்னோட குழந்தையா?" கேட்டபடியே அவள் கையிலிருந்த குழந்தையை வாங்கி ஒரு முறை கொஞ்சியபின் மீண்டும் அவளிடம் அந்தக் குழந்தையைக் கொடுக்க முயன்றபோது அவர் கையில் இரண்டு கண்ணீர்த் துளிகள் விழுந்து நெருப்பாய்ச் சுட்டது.

அவள் முகத்தை ஒருமுறை மௌனமாய்ப் பார்த்த முரளிகிருஷ்ணா ஒன்றும் பேசாமலே திரும்பிச் சென்று காரில் அமர்ந்துகொண்டார். கார் மட்டும் புறப்பட்டது!!

# இத்தனை நாளாய் எங்கிருந்தாய்?

ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி

இதயம் துடிப்பதாய்த் தெரியவில்லை. சுவாசமும் உணரவில்லை. நடைப்பிணமாய் இருப்பதாய் உணர்ந்தான்.

அவளைக் காணாமல் இன்றோடு இரண்டு நாட்கள்- இரண்டு யுகங்களாய் உணர்ந்தான்.

பாடப் புத்தகத்தைப் பிரிக்கையில் வெற்றுத் தாள்களாய் தெரிந்தன. வானொலியின் பாடல்கள் நாராசமாய் ஒலித்தன. சல்மான் கானின் ஹிந்தி படமும் இரசிக்கவில்லை.

ரோஜாப் பட விளம்பரங்கள் மனசை அலைக்கழித்தன. "காதல் ரோஜாவே.... எங்கே நீயெங்கே...." என்ற எஸ்.பி.பியோடு அவனும் உருகினான்.

நாட்கள் நகர்ந்தன. காணவில்லை. நண்பனின் சைக்கிளை கடன் வாங்கி அவள் வாசல் வரை போனான். பெரிய பூட்டு தொங்கியது. மனக்கதவை யாரோ ஓங்கித் தட்டினார்கள். விழிக்கதவுக்குள் கண்ணீர் 'வருவேன்' என பயங்காட்டியது.

சைக்கிள் மிதித்த பாதங்களில் வலி- மனதிலும் தான். நண்பன் ஆறுதல் கூறினான். "வருவாள். எங்கேயாவது பயணம் போயிருக்கலாம்."

"என்கிட்ட சொல்லலியே. ஒரு கடிதம் போட்டிருக்கலாம். அது கூட இல்லியேடா." அவன் வார்த்தைகளில் கலக்கம் கலந்திருந்தது.

நண்பன் கூட யோசிக்கத் தொடங்கினான். அப்படி இப்படி என முழுசாய் இரண்டு வாரங்கள். அவளைக் காணவில்லை. கடிதமும் இல்லை. சினிமாக் காட்சியில் போல வேறெங்காவது உறவினர் வீட்டுக்கு கூட்டிச் சென்று கட்டாயக் கல்யாணம் பண்ணி வைத்து விட்டார்களோ?

கனவு கூட அப்படித்தான் வந்தது. கண்ணீரில் மிதந்த விழிகளுடன் 'முடியாது' என அவள் அழுது கதற, கோபத்தில் சிவந்த விழிகளுடன் அவள் அப்பா "காதலாம் காதல்! மண்ணாங்கட்டி. வெட்டிப் போட்டுடுவேன். பேசாம இரு. நான் சொல்ற பையனைத்தான் நீ கட்டிக்கணும். இல்ல...நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது..." பயங்கரமாய் உறுமினார்.

வியர்த்துப் போய் கண் விழித்து பரபரத்தான். தண்ணீர் குடித்து, ஜன்னலைத் திறந்து வெளியே பார்த்தான் இருட்டு ஒரே இருட்டு.

நிலவு கூட எங்கோ ஓடி ஒளிந்து விட்டது. மன வானில் இருட்டு. சோக இருள். காதல் நிலவைக் காணவில்லை.

இருதயம் கண்களிலே- இன்று
ஏறித் துடிக்குதடி
இருவிழி நீர் உதிர்க்கும்-அதற்கு
ரத்த அடர்த்தியடி.... எப்போதோ வாசித்த கவிதை வரிகளில் கரைந்தான். கனவில் அழுதுவிட்டான். அவஸ்தைதான்.

காலை 10 மணி. கவலையுடன் சாய்ந்திருந்தான். அம்மா வந்தாள். "இந்தா ரகு உனக்கு போன கிழமை வந்த கடிதம். எடுத்து வெச்சேன். உன்கிட்ட தர மறந்துட்டேனப்பா." அவளது கையெழுத்து! "உறவினர் வீட்டுத்திருமணம். ரொம்ப நாள் தங்கிவிட்டோம். இன்னும் ஒரு கிழமையில் வருவோம்.." வாசித்தவுடன்- புதிதாய்ப் பிறந்தான்!!



# கூத்தரித்த கூடி ஜோக்ஸ்

பெண்: யுவர் ஆனர்! எனக்கு விவாகரத்து வேண்டும். என் கணவர் என்னை ஏமாற்றிவிட்டார்.

நீதிபதி: நல்லது; உன் கணவர் உன்னை ஏமாற்றியதற்கான சாட்சியம் ஏதாவது உண்டா?

பெண்: நிச்சயமாக உண்டு. ஒரு நாள் இரவு ஒரு பெண்ணுடன் சேர்ந்து அவர் தியேட்டருக்கு படம் பார்க்கச் சென்றார்.






நீதிபதி: யார் அந்தப் பெண்?

பெண்: எனக்குத் தெரியாது. அவள் முகத்தை நான் பார்க்கவில்லை.

நீதிபதி: தியேட்டருக்குள் நுழைந்து நீ பார்த்திருக்கலாமே? ஏன் பார்க்கவில்லை?

பெண்: பார்த்திருக்கலாம்தான். ஆனால் அதே தியேட்டரில் அந்த படத்தை நான் ஏற்கனவே பார்த்துவிட்டேன்.

□□

டாக்டர்: பெண்கள் பின்னால் சுற்றுவதை நீ நிறுத்தாவிட்டால் இன்னும் ஒரு வாரத்தில் செத்துவிடுவாய்.

அவன்: ஏன் எனக்கென்ன திடகாத்திரத்துடன் நன்றாகத்தானே இருக்கிறேன்.

டாக்டர்: அதுவும் எனக்குத் தெரியும். ஆனால் நீ சுற்றும் பெண்களில் ஒருத்தி என் காதலி.

□□

பஸ் பிரயாணி: எந்த வண்டி முன்னாலே போகும்?

மற்றவர்: எல்லா வண்டியும் முன்னால தான் போகும். பின்னால போகாது.

□□

தமிழ் ஆசிரியர்: குரங்கு குளிரில் நடுங்கியது. இது என்ன காலம்? நிகழ்காலமா, இறந்த காலமா?

மாணவன்: குளிர்காலம் சேர்.

# விழிப் பறிக் கொள்ளை!



தருவது–
ரசிகன்

## இலக்கிய நயம்



நடு நிசி நேரம். யாத்திரிகர் விடுதியில் அனைவருமே நித்திரா தேவியின் அணைப்பில் கிடந்தனர்.

அவன் மட்டும் விழித்திருந்தான். இடைக்கிடையே பெருமூச்சு மட்டும் வெளிவந்து கொண்டிருந்தது.

தூக்கத்தில் புரண்ட அவன் நண்பன் தன் அருகே குத்துக் கல்லாக அமர்ந்து விழித்திருப்பதைக் கண்டான்.

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து, "என்னடா நீ இன்னுமுமா தூங்கவில்லை? விழிக்கும் இமைக்கும் இடையில் அப்படி என்னடா ஊடல்?"

என்றான் தூக்கக் கலக்கத்திலும் கேலியை தொலைத்துவிடாமல்.

அவன் தனது நண்பனை நோக்கி சிரித்தான்.

"ஒன்றுமில்லையடா, நீ தூங்கு!"

"பொய் சொல்லுகிறாய்! உதடு சொல்லும் கதை வேறு. உன் விழிகள் சொல்லும் கதை வேறு."

"ஆராய்ச்சியா?"

"அனுபவம்!"

"ஓ. ஹோ... சரி' காலையில் சொல்லுகிறேன் ஒரு கதை! இப்போது தூங்கடா!"

"அதுவரை பொறுமையில்லை மகனே; இப்போதே அவிழ்த்துவிடு! மனதுக்குள் மான் புகுந்துவிட்டதோ? யார் அந்த மான்?"

"யமகாதகா! உனக்கெப்படியடா தெரிந்தது?"

நண்பன் நகைத்தான்.

அருகில் இருந்த தூணில் முதுகை சாய்த்தபடி சொன்னான்;

"வயதுப்படி மகனே! உன்வயதுப்படி! வாலிபம்தேடுவது வசந்தம் தானே. அந்தவசந்தம் இருப்பதுஇனிய பெண்ணிடம்தானே."

ஆணுக்கும் வெட்கம் வரும். இப்போது அவனுக்கும் வந்தது.

"கவனம் நண்பா! நத்திவர்மன் ஆளும் நாடிது. வாலிப வேகத்தில் வரம்பு மீறினால் உடம்பில் உயிர் இருக்காது."

"இப்போது மட்டும் உயிர் இருக்கிற தாக்கும்."

"என்னடா இது புதுப் புதிர்"

"உள்ளங்கை அளவு விழிகளால் என் உயிரைக் கவந்து சென்று விட்டாளடா அவள்!"

நண்பன் அவனை ஆச்சரியமாய் நோக்கினான்.

"அடப்பாவி! என்னோடு தானே இருந்தாய். இடையில் எப்படியடா காதல் வலையிலே வீழ்ந்தாய்?"

அவன் தயக்கமாய் தொடங்கி, உற்சாகமாக விளக்கி இன்ப உச்சியிலே ஏறினான்.

□□

சல சலத்து ஓடும் அருவி. தாகம் தீர்க்கலாம் என்று போனவன் முன்பாக ஒரு மோக அருவியாய் அவள்!

இடையிலே ஒரு குடத்தோ' மண்ணில் நளினமான கால் தடத்தோடு, மடமானே என்று அழைக்கத் தகுதியான உடல் பொலிவோடு அவள் வந்தாள் அருவி நோக்கி!

கால் தடுக்கி குப்புற வீழ்ந்தால் முகம்தான் காயமாகும்.

அவனோ மனம் தடுக்கி அவள் கோல அழகில் வீழ்ந்தான். இதயம் மயாமானது.

எங்கே என் இதயம்? வழிப்பறியைத் தடுக்க விழிப்பாயிருந்தால் போதும்.

இந்த விழிப் பறிக்காரியிடம் விழித்துக் கொண்டிருக்கும்போதே பறிகொடுத்து விட்டேனே என் இதயத்தை!

திரட்சியான, நெருக்கமான இரு குடங்கள். அத்தோடு பொன்னால் செய்யப் பட்ட இன்னொரு குடம்.

முக்குடக்காரி இவள் என்னை திக்கு முக்காடச் செய்து விட்டாளே!

வியந்து, விழியசைக்க மறந்து அவன் நிற்க, அவள் போனாள் கடந்து.

சட்டென்று நடை நிறுத்தி, வட்ட நிலா வடிவில் இருந்த முகம் திருப்பி, கரும் நிறத்து விழிகள் அவனில் நிறுத்தி, சிவந்து மலர்ந்திருந்த இதழ்களால் கேட்டாள் ஒரு கேள்வி;

"ஊருக்குப் புதுசா?"

அவன் எதிர்பார்க்கவில்லை,

ஏந்திழையால் இதழ் திறப்பாள் என்று!

மாந்தளிரை வருடி விளையாடும் குயில் வந்து இவள் குரல் வளைக்குள் குடியிருக்கிறதோ?

செவிக்குள் அருவி! சிந்தையில் கேள்வி! என்றாலும் சமாளித்து;

"ஆம்!"

என்றான்.

"யாரைத் தேடுகிறீர்கள்?"

செவி வழியாக மறுபடி அருவி.

பதில் சொல்லத் தடுமாறும் அவனை விசித்திரமாய் அவள் பார்த்தாள்.

அது புரிந்து அசட்டுச் சிரிப்பொன்றை அவன் உதிர்த்தான்.

பதிலுக்க அவள் புன்னகைத்தாள். 'இதழ்களுக்குள் இத்தனை முல்லையரும்புகளா?' அவன் சிந்தனையில் ஆச்சரிய மின்னல்.

அவள் அருவி நோக்கி சென்றாள்; அவள் பின்னழகுகள் மட்டுமல்ல அவன் மனதும் ஆசைக் காற்றால் அசைக்கப்பட்டது. மூன்று குடங்கள் அல்ல. ஐந்து குடங்கள். அவன் குறித்துக் கொண்டான்.

தென்றல் பட்டு அவள் கூந்தல் அசைந்தது. கூந்தலில் உள்ள மலர்களில் தேன் அருந்த வரும் வண்டுகள் திகைத்துத்தான் போகும்.

நீல மலர்கள் போல் இருக்கும் விழிகளை தாம் தேடி வந்த மலர்கள் என்று வண்டுகள் நினைத்து ஏமாறும்.

அருவியில் குளித்து அவள் நீர் எடுத்தாள். பின்னழகுகள் அவன் உயிர் எடுத்தன.

அவள் குடம் இடையில் தாங்கி திரும்பினாள். தன்னையே வைத்த விழி வாங்காமல் நோக்கும் அவன் விழிகளை சந்தித்தாள்.

நெஞ்சுக்குள் விழுந்தது விதை. விதை விழ முன்னர் வெட்கமில்லை. இப்போது விதை விழுந்த பின்னர் வெட்கம் வந்து செய்தது தொல்லை!

அவன் கவலை கொண்டான்.

"இடையே பூங்கொடி! குடபாரங்கள் கொடுக்கும்மன்றோ நெருக்கடி!"

மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

அவள் வந்துவிட்டாள் அருகில். மனம் படபடத்தது.

ஏதாவது பேசிவிட வேண்டும். நா எழ மறுத்தது.

பேசு மனமே பேசு!

"தா... தாகம்.. தாகமாக இருக்கிறது...."

பேசியே விட்டான்.

குறிப்பறிந்து குடம் சரித்து அவன் தாகத்திற்கு அவள் நீர் கொடுத்தாள்.

இரு கரம் சேர்த்து உதட்டருகில் வைத்து குடத்தில் இருந்து கொட்டிய நீரை உள் வாங்கினான்–

"நன்றி!"

என்றான். இனிப் பேசலாம். ஆரம்பம் தான் பட படப்பு. ஆரம்பித்து விட்டால் சுறு சுறுப்புத்தானே. காதலிலும் அதனோடு கூடவே வரும் காமத்திலும் எதிலுமே அதுதானே விதி.

"ஊர் பிடித்திருக்கிறதா?"

அவள் கேட்டாள் வெட்கத்தை குரலில் சுமந்து கொண்டு!

அவன் பொடிவைத்துப் பதில் கொன்னான்.

"பிடித்திருக்கிறது, ஆனால் ஊரை மட்டுமல்ல."

"வேறு எதை?"

"எதையென்று கேட்கக் கூடாது. எவரையென்று கேட்கவேண்டும்."

அவளுக்கா புரியாது. புரிந்தது. புரியாதது போல் கேட்டால்தானே பேச்சை வளர்க்கலாம்.

"எவரை? எங்கள் மன்னன் நந்தி வர்மனையா?"

"மன்னன் மீதுள்ள பிடிப்பு மரியாதைக்குரியது. நான் சொல்லும் பிடிப்பு மணமாலைக்குரியது."

அவள் தலை குனிந்தாள்.

எதுவும் பேசாமல் குடம் ஏந்தி நடந்தாள்.

"நில்!"

நின்றாள்.

"உனக்குப் பிடிக்கவில்லையா?"

அவள் கழுத்தசைத்து அவனை திரும்பிப் பார்த்தாள்.

விழிகள் இரண்டும் அவன் விழிகளில் கலந்து மீண்டன.


பார்வையில் பதில் இருந்தது.

பதில் சொல்லி மீண்ட விழிகளில் அவனது உயிரும் பத்திரமாக காவிச் செல்லப்பட்டது.

இதனைத்தான் 'நந்திக் கலம்பகம்' என்னும் பழம்பெரும் தமிழ் இலக்கிய நூலில் வரும் பாடல் சொல்கிறது.

**"அளவு கண் டாற் குடங் கைத்துணை**
**போலும் அரசர் புகும்**
**வளவு கண் டான் நந்தி மானோ தயன்**
**வையம் தன்னின் மகிழ்**
**தளவு கண் டாலன்ன வெண்ணகையால்**
**தமியேன தூள்ளம்**
**களவு கண் டார்முகத் துக் கண்க ளாய**
**கயற் குலமே"**

## குறுக்கெழுத்துப் போட்டி இல–93



**இடமிருந்து வலம்**

01. நாவால் கொடுக்கப்படுவது.
03. இங்கு சுகமான தென்றலைச் சுவாசிக்கலாம்.
05. ஆடம்பரத்திற்கு இப்படியும் ஒரு பெயர்.
08. அடக்குமுறையால் மக்கள் அனுபவிப்பது.
10. மரியாதை கொடுக்கப்படவேண்டியவர்.
11. திருப்தியில் இதற்கு மவுசு.
12. போரிலே வகுக்கப்படுவது.

**மேலிருந்து கீழ்**

01. முதுமைக்கு முந்திய நிலையினர்.
02. வாத்திற்கு அறிகுறி.
03. இதுவும் சுற்றும்.
04. கடற்கரையில் சுலபமாக அழிந்துவிடும்.
06. சூரியத் தொழிலாளி ஓய்வுக்குப் போகும் நேரம்.
07. சுருக்கமாக வீடு.
08. குளிர்ச்சியானது.
09. ஆண்கள் சிலரும் இதனை வளர்ப்பதுண்டு.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 25.03.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-93**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

**சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-91ற்கான சரியான விடைகள்:**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஊ | ஞ் | 2 ச | ல் | ■ | 3 ஆ | 4 மை |
| ர் | ■ | ங் | ■ | 5 ப | டு | தா |
| 6 தி | 7 யா | கி | ■ | ரி | ■ | ன |
| ■ | த | லி | ■ | 8 கா | 9 க | ம் |
| 10 தா | வ | ■ | 11 வ | ரி | சை | ■ |
| 12 வ | ர் | 13 ம | ம் | ■ | ய | 14 வா |
| ணி | ■ | லை | ■ | 15 பி | டி | ல் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.90இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. ரவீந்திரராஜன், வெள்ளவத்தை.
2. எம். சரோஜினி, திருகோணமலை.
3. எம். அப்துல்லாஹ், மாவனல்லை.
4. செல்வி. ஏ. ஹஸ்மியா, ஹப்புத்தளை.
5. செல்வி. சி. சாரதாம்பாள், தலவாக்கலை.
6. செல்வி. த. கலைச்செல்வி, மண்டூர்.
7. எம். றுமைஸா, சம்மாந்துறை.
8. எம். அசார்தீன், வெல்லம்பிட்டிய.
9. பி. மதியழகன், வவுனியா.
10. திருமதி.ராணிசெல்வரத்தினம், கந்தானை

**இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.**

## ஸ்போர்ட்ஸ்

# அசத்தும் அசாருதீன்

## பரவிவரும் கிசு–கிசு



1984-85ல் இங்கிலாந்து கிரிகெட் அணி, இந்தியாவிற்குச் சுற்றுப் பயணம் செய்திருந்தது. இங்கிலாந்துக் கெதிராக முன்றாவது டெஸ்ட் பேட்டி கல்கத்தாவில் நடந்தது.

இந்தப் போட்டியில் தான் இந்திய அணியின் தற்போதைய கப்டன் முகமட் அசாருதின் அறிமுகமானார். ஏறக் குறைய 90.000 மக்கள் மத்தியில் மூன்றாவது ஆட்டக் காரராக நுழைந்து, முதல் டெஸ்ட் போட்டியிலே சதமடித்து சாதனை புரிந்தார்.

அது மட்டுமன்றி இங்கிலாந்திற்கெதிராக சென்னையில் நடைபெற்ற நானகாவது டெஸ்ட்டிலும், கான்பூரில் நடைபெற்ற ஐந்தாவது டெஸ்ட்டிலும் சதமடித்ததன் மூலம் அறிமுகமான தொடரிலேயே, தொடர்ச்சியான மூன்று சதங்களை அடித்து சாதனை படைத்து விட்டார்.

உலகம் முழுமைக்கும் இந்தச் செய்தி பரவி விட்டது. அசாருதீனுக்கு யார் யாரிடமிருந்தோ பாராட்டுக்கள் எல்லாம் வந்து குவிந்தன. பதவி ஏற்று மூன்று மாதங்களே ஆகியிருந்த அன்றைய இந்தியப் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தியிடமிருந்து தொலைபேசி மூலம் வாழ்த்துச் செய்தி வந்தது.

இவ்வாறு தனது கிரிகெட் வாழ்கையைச் சாதனையுடனேயே ஆரம்பித்த அசாருதீன், இந்திய கிரிகெட் கப்டன்களில் தனது அணியை (10) டெஸ்ட் வெற்றிகளுக்கும், அதிகமான ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கும் வழிநடாத்திச் சென்று சரித்திர நாயகனாகி விட்டார்.

ஒருநாள் கிரிகெட் போட்டிகளில் 5000 ஓட்டங்களை பெற்ற வீரர்கள் சிலரில் இவர் பெயரும் அடக்கம். அத்துடன் அசாருதீன் சிறந்த களத்தடுப்பு வீரராகவும், வெற்றிகரமான கப்டனாகவும் அசத்திக் கொண்டிருக்கிறார்.

சமீபத்தில் இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் செய்த இங்கிலாந்து, சிம்பாபே, இலங்கை,



மேற்கத்தியத்தீவுகள் அணிகளை அசாருதீன் தலைமை யிலான இந்திய அணி தொடர்ச்சியாக வெற்றி கண்டுள்ளது. மேலும் ஹீரோகோப்பை, சிங்கர் கோப்பை, வில்ஸ் கோப்பை ஆகியவற்றையும் இவரது தலமையில் தான் இந்திய அணி கைப்பற்றியது.

இது பற்றி அசாருதீன் கூறும் போது, "நான் தொடர்ந்து பெற்று வரும் வெற்றியின் உச்சகட்டமாக உலக கோப்பையை வென்று மகுடம் சூட்ட விரும்புகிறேன். இதுவே எனது முக்கிய இலட்சியமாகும்." என்கிறார்.

அசாருதீன் பற்றிய சுவாரசியமான சமீத்திய தகவல் ஒன்று;

இந்தி நடிகை சங்கீதா பிஜ்லனிக்கும் அசாருதீனுக்கும் இடையில் நெருக்கமாம்.

இதுதான் இந்திப் படவுலகிலும், இந்திய கிரிக்கெட் உலகிலும் கிசு-கிசுக்கப்படும் செய்தியாக இருக்கிறது.

இதுவரை அசாருதீனோ, சங்கீதாவோ அதனை மறுக்கவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய சமாச்சாரம்.

# மகாபாரதம்

அங்கம் 72

**இவ்வாரம் (19.02.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்:
மானிடராய்ப் பிறந்தவர்கள் மாண்புடனே வாழ்வதற்கு
வானுயர்ந்த வேதமதாம் வாய்த்த கீதை உபதேசம்
மாதவனாம் கண்ணனவன் ஒதுகின்ற போழ்து இது
ஏதுமெடுத்தியம்புதற்கு எவ்வாறும் முடிவதில்லை!
குருச்சேத்திரப் போர் முனையே கீதை பிறப்பதற்கு
அருஞ் சேத்ரமாம் அமைந்ததுவு மவனாணையானதுவே!
பாண்டவரும் கவுரவரும் படைகள் அணிவகுத்து
சீண்டி நிற்கும் போதினிலே உதிக்கிறது உபதேசம்!
வியாச முனிதானளித்த விநோத சக்தி மேலீட்டால்
தியாக நெறி தவறாத தேர்ப்பாகன் சஞ்சயனும்
போர்க்களத்தில் நடப்பவற்றை மனத்தளவிலே பார்த்து
பார்வையற்ற மன்னனுக்கு பகர்வதையே பார்க்கின்றோம்!

-காட்சி தொடக்கம்-

அஸ்தினாபுரி அரண்மனை- திருதராட்டிரரும் சஞ்சயனும்...

**திருத:** குருச்சேத்திரப் போர்முனையில் எனது புத்திர்களும் தம்பி பாண்டுவின் புதல்வர்களும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

**சஞ்ச:** இரு பகுதியினரின் படைத் தளபதிகளும் தத்தமக்குரிய வியூகங்களை அமைத்துவிட்டனர். இளவரசர் துரியோதனனுடைய இரதம் துரோணாச்சாரியாரின் இரதத்தினை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்- துரியோதனனின் இரதம் துரோணாச்சாரியாரின் இரதத்தினை அணுகுகிறது.

**துரி:** ஆச்சாரியார் அவர்களே! பாண்டவர்களுடைய படையினைப் பார்த்தீர்களா? தங்கள் நண்பர் துருபத மன்னர் மகன் திஷ்டத்துய்மன், அவர்களுடைய சேனைத் தளபதியாகவிருந்து வியூகத்தினை அமைத்திருக்கிறான். இந்த மாபெரும் சேனையில் மாபெரும் வில் வீரர்களும் சூராதி சூரர்களும் உள்ளனர். சத்தியகி, விராடர், துருபதர், காசி மன்னர், குந்திபோஜர் ஆகியோருடன் சுபத்திரையின் மைந்தன் அபிமன்யுவும் திரௌபதியின் ஐந்து புதல்வர்களும் உள்ளனர்!

துரோணாச்சாரியார் சினமடைந்தாலும் பொறுமையுடன் காணப்படுகிறார். துரியோதனன் தொடர்கிறான்.

**துரி:** அந்தப் பாண்டவர்களின் அணியிலுள்ள வீரர்களை, எத்தகைய வீரர்களைக் கொண்டு நீங்கள் தாக்கி வெற்றியடையப் போகிறீர்கள்? தாங்கள், பிதாமகர், குல குரு கிருபாச்சாரியார், கர்ணன் ஆகியோருடன் இன்னும் சில வீரர்களே உள்ளனர்! இவர்கள் பெரும் பராக்கிரமசாலிகள் என்று கருதப்படுகிறார்கள்!

தனது பேச்சின் தொனியை மாற்றியவனாய் துரியோதனன் தொடர்கிறான்...

**துரி:** எவ்வாறாயினும்... எமது படையின் முன்னே பாண்டவரின் படை பலமற்ற பூஜ்யமே! நாம் வெற்றி பெறுவதற்கு பிதாமகர் பீஷ்மரே போதும். ஆகவே அவருடைய பாதுகாப்பில் தாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதனை நான் ஏன் கூறுகிறேன் என்றால் அவர் குந்தியின் புதல்வர்களைக் கொல்லப்போவதேயில்லை அல்லவா?

துரியோதனனின் இவ்வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த பிதாமகர் வேதனையடைகிறார். தனது சங்கினை எடுத்து ஊதி ஒலி எழுப்புகிறார். இவ்வோசை கேட்ட ஏனைய வீரர்களும் தங்கள் சங்குகளை எடுத்து ஒலிக்கச் செய்கின்றனர். குதிரைகளும் யானைகளும் மிரளுகின்றன. கிருஷ்ணரும் அர்ச்சுனனும் தங்கள் தங்கள் சங்குகளை எடுத்து ஊதுகின்றனர்.

-காட்சி மாற்றம்-

கர்ணனுடைய பாசறை- சங்கொலி கர்ணனின் காதுகளுக்கும் கேட்கிறது.

**கர்ண:** (தனக்குள்ளாகவே) கங்காபுத்திரர் பீஷ்மர் அவர்களே! நீங்கள் எனக்கு அநீதி இழைத்துவிட்டீர்கள்! பரவாயில்லை! எவ்வாறாயினும் எனது கணைகளிலிருந்து அர்ச்சுனனை உங்களால் காப்பாற்றவே முடியாது!

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்-இரு தரப்பு படைகளையும் அர்ச்சுனன் கண்ணோட்டமிடுகிறான்!

**கிருஷ்:** பார்த்தா! என்ன பார்க்கிறாய்?

**அர்ச்:** என் தந்தைக்கு நிகரானோரையும் தாத்தாக்களுக்கு நிகரானோரையும், குருமார், சகோதரர்கள், நண்பர்கள் பிள்ளைகள் ஆகியோரையுமே எதிரணியில் பார்க்கிறேன் கண்ணா!

**கிருஷ்:** அவர்களை முதன் முதலாக இப்போதுதான் பார்க்கின்றாயா?

**அர்ச்:** இல்லை! அவர்களை இப்போதுதான் முதன் முதலில் பார்ப்பதாகக் கூறவில்லை!

**கிருஷ்:** இந்தப் போர்க்களத்தில் ஏதாவதொரு மூலையில் அவர்களை நீ சந்திக்க வேண்டியிருக்கும் என்பதனையும் நீ தெரிந்து வைத்துள்ளாய் அல்லவா?

**அர்ச்:** தெரிந்திருத்தலுக்கும் பார்ப்பதற்குமிடையில் மாபெரும் வித்தியாசம் இருக்கிறதே அச்சுதா! இரு படைகளின் அணி வகுப்புகளுக்கு இடைப்பட்ட நடுப்பகுதிக்கு இந்த இரதத்தினைச் செலுத்துங்கள் கேசவா! ஒரே அளவு தூரத்திலிருந்தவாறே இரு படைகளையும் பார்க்கவேண்டும்!

**கிருஷ்:** குந்தி மைந்தனே! அவ்வாறே கொண்டு செல்கிறேன்! இருப்பினும் சங்கொலி எழுப்புதற்கு முன்னரே ஏன் நீ இதனைச் செய்யச் சொல்லவில்லை?

**அர்ச்:** சங்கொலி எழுந்த பின்னர் போர் நடைபெறப் போவது சந்தேகத்துக்கிடமின்றி உறுதியாகிவிட்டதல்லவா?

கிருஷ்ணன் புன்னகைத்த வண்ணம் இரதத்தினை போர்க்களத்தின் மத்திக்குக் கொண்டு செல்கிறார். இரு பகுதி அணியினரும் திகைக்கின்றனர். பீமன் யுதிஷ்டிரரைப் பார்க்கிறான்.

**யுதிஷ்:** கவலையைத்தவிர் தம்பி! பார்த்தனுக்குச் சாரதியாக கிருஷ்ணன் இருக்கையில் இரதம் தவறான பாதைக்குச் செல்லுமா?

அர்ச்சுனனின் இரதம் முன்னேறி வந்து நிற்பதைக் கண்ணுற்ற துரியோதனன் துச்சாதனனிடம்...!

**துரி:** பிதாமகர், பாண்டவர்களைக் கொல்லப் போவதில்லை என்ற தைரியத்தில் அர்ச்சுனன் தனியாகவே எம்மை எதிர்த்துப் போரிடத் துணிந்துவிட்டானா? எமது அணியில் வேறு வீரர்களே இல்லை என்று இவன் கருதிவிட்டானா?

□□□

**பீஷ்ம:** அர்ச்சுனன் எங்கே செல்கிறான்?

**துரோ:** அவன் ஏதோ சஞ்சலப்படுவதுபோல் தோன்றுகிறது. கிருஷ்ணனே சாரதியாக அமர்ந்திருக்கும்போது அர்ச்சுனனுக்கு ஏன் சஞ்சலம் ஏற்படப் போகிறது?

**பீஷ்ம:** எனக்கும் சங்கடமாகத்தானுள்ளது. விராட நாட்டுப் போரில் எம்மைக் கதிகலங்க அடித்த அர்ச்சுனன், துரதிஷ்டவசமாக நான் தலைமை வகித்து படை நடத்தும் போரில் எம்மைத் தாக்க தனியன்ாகவே வருகிறானா? போர் இன்னும் தொடங்கவில்லை என்பதை அர்ச்சுனன் அறியமாட்டானா?

**துரோ:** கிருஷ்ணர் இரதத்தை நிறுத்திவிட்டார். ஒன்றுமே புரியாத புதிராகவன்றோ இருக்கிறது!

□□□

**கிருஷ்:** போர்க்களத்தில் இரு படைகளின் மத்தியில் வந்துவிட்டோம் அர்ச்சுனா!

**அர்ச்:** கண்ணா! இவை போர் வீரரின் அணி வகுப்பாகத் தோன்றவில்லையே! பெரும் சமுத்திரங்களாகவன்றோ தென்படுகின்றன.

அர்ச்சுனனின் இளமைக்கால நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றன.

-காட்சி பின்னோக்கு-

**அர்ச்:** (சிறுவன்) பெரியப்பா...! என்னைக் காப்பாற்றுங்கள்?

**பீஷ்ம:** (சிறுவனான-பீமனிடம்) என்ன பீமா...?

**பீமன்:** என்னுடைய பாயாசம் முழுவதையும் இவன் குடித்துவிட்டான்..!

**பீஷ்ம:** நாளை உனக்காக ஏராளமான பாயாசம் தயாரித்து தரச் சொல்கிறேன்.

**அர்ச்:** நான் இங்கேயே படுக்கிறேனே பெரியப்பா!

**பீஷ்ம:** அர்ச்சுனா! எத்தனை தடவை உன்னிடம் சொல்லியிருக்கிறேன்-நான் உனக்கு பெரியப்பா அல்ல...உன் அப்பாவுக்குத்தான் நான் பெரியப்பா!

□□□

**பீஷ்ம:** அர்ச்சுனா..! என்னை அணைத்துக் கொள்ளடா...!

**அர்ச்:** பயணத்தில் என் உடைகள் அழுக்கேறிவிட்டன. தங்கள் ஆடைகள் அழுக்கடைந்துவிடலாமல்லவா...?

**பீஷ்ம:** உனது அழுக்குகளை என் உடைகள் ஏற்க ஏங்குகின்றன அர்ச்சுனா...!

□□□

அர்ச்சுனன் சிறுவனாக இருக்கும்போது துரோணருடன் பழகிய காலங்களை நினைக்கிறான்.

**துரோ:** நீ விளையாட விரும்பவில்லையா?

**அர்ச்:** குரு பாடம் சொல்லித் தரும் வேளையில் விளையாடுவதில் பொழுதைக் கழிக்கலாமா?

**துரோ:** நான் உனக்குப் புகட்டாதவற்றையும் என்னிடமிருந்து, கற்றுக்கொண்டு விடுவாய் போல் தெரிகிறதே!

**அர்ச்:** தாங்கள்தானே அதனையும் கற்றுத் தந்தீர்கள்?

□□□

**கிருஷ்:** இன்னும் எவ்வளவு நேரம் அவர்களைப் பார்த்துக்கொண்டிருக்கப் போகிறாய் அர்ச்சுனா?

**அர்ச்:** யுத்தத்தின் பின் யார் இருப்பார், யார் மறைந்திருப்பர் என்பது தெரியாது. ஆகவே அவர்களை மீண்டும் ஒருமுறை பார்க்கிறேன் கிருஷ்ணா! யாருடன் போரிட வந்துள்ளேன் கண்ணா! அவர்களும் நாங்களும் ஒரே குலமல்லவா? அதோ! வெண்ணுடை தரித்து வெள்ளை இரதத்தில் வீற்றிருப்பவர் அன்பினால் எனைச் சீராட்டி வளர்த்தவர். எனது அப்பாவின் தாத்தா! போர்க்கலையில் தன் மகனுக்கே கற்றுக்கொடுக்காத அரிய தந்திரங்களை மனமுவந்து எனக்குச் சொல்லித் தந்த குருதேவர் அதோ நிற்கிறார்! இவர்களுக்கு எதிராக என்னால் வில் ஏந்த முடியுமா? என், கைகள் செயலிழக்கின்றன; காண்டீபம் நழுவுகிறதே! குருச்சேத்திரத்தை எனது உறவினர்களின் மயானமாக ஆக்க என்னால் முடியாது வாசுதேவா! ....ஏதாவது கூறு கண்ணா...!

**கிருஷ்:** நீ சொல்வதை முற்று முழுதாகச் சொல்லி முடித்த பின் நான் கூறுகிறேன்!

**அர்ச்:** எம்மினத்தவர்களின் சடலங்கள் மீது மாளிகை அமைக்க என்னால் முடியாது. அவர்களின் குருதியில் மகிழ்ச்சியாக நீச்சலடிக்க என்னால் முடியாது. எனது ஆசிரியர்களையும் எனது மதிப்புக்குரியவர்களையும் கொன்று குவிக்க என்னால் முடியாது. இத்தகைய கொடுமையை வெறும் நிலத்துக்காக மட்டுமல்ல, சொர்க்கமே கிடைப்பதானாலும் எனக்கு வேண்டாம். துரியோதனன் ஏமாற்றியிருக்கலாம். கொடுமை பல புரிந்திருக்கலாம்; திரௌபதியை மானபங்கப்படுத்தியிருக்கலாம்; ஆனால் அவன் எங்கள் பெரியப்பாவின் மகன். அவனைக் கொன்றுவிட்டு நாங்கள் நிம்மதியாக வாழத்தான் முடியுமா?

**கிருஷ்:** பார்த்தா! மிக முக்கியமான கால கட்டத்தில் ஏனிந்தச் சோர்வு? இத்தகைய நம்பிக்கையற்ற நிலை உனக்கு மகிழ்ச்சியையோ புகழ்ச்சியையோ தரப்போவதில்லை!

கிருஷ்ணர் ஒரு சுலோகத்தைச் சொல்கிறார்.

**அர்ச்:** கேசவா!

**கிருஷ்:** என் பெயர் சொல்லி அழைப்பதற்கு முன், பார்த்தா! முதலில் என்னிடம் ஒன்றைக் கூறு! நாலா புறங்களிலும் அழிவின் மேகங்கள் சூழ்ந்துள்ள இக்காலகட்டத்தில் தர்மம் தன்னைப் பாதுகாக்கவும் தர்மத்துக்கு வெற்றியீட்டித்தரவும் உன்னை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வேளையில், தகாத கோழைத்தனமான எண்ணங்களுக்கு உன் இதயத்தில் எப்படி இடம் கொடுத்தாய்? இலட்சிய வாதி என்றுமே சோகத்தில் மூழ்க மாட்டான்! தர்மத்துக்கும் அதர்மத்துக்குமிடையில் நடைபெறும் போராட்டத்தின்போது செயலிழந்துவிடாதே! உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்தால் உன் உன்னத நிலையினை இழந்து உன்னையே நீ வெறுக்க வேண்டியவனாவாய்! இதயத்தை சோர்வடையச்செய்யும் எண்ணங்களை விரட்டிவிட்டு போருக்கு ஆயத்தமாகு!

**அர்ச்:** (தலை குனிந்த வண்ணம்) பிதாமகரைக் கொல்ல எவ்வாறு நான் துணிவேன்? எனது இலட்சிய குருவுக்கு எதிராக என்னால் கணை தொடுக்க முடியுமா? வணக்கத்துக்கும் பெரு மதிப்புக்குமுரிய இவர்களை என்னால் கொல்ல முடியுமா கேசவா? போர்க்கலையின் சூட்சுமங்களைப் போதித்த என் குருமாரை வீழ்த்த எனக்குத் துணிவு வருமா? இவர்களை என் கைகளால் கொல்லுவதென்பது பெரும் தவறாகுமே! இவர்களைக் கொல்ல நீட்டும் என் கைகளால் இரந்து உண்ணத் துணிவேனே தவிர இப்பெரியார்களின் இரத்தம் சிந்த இக்கரங்களைப் பயன்படுத்தமாட்டேன் கேசவா!

இப்பொழுது தலை நிமிர்ந்து கிருஷ்ணனைப் பார்த்துத் தொடர்கிறான்...

**அர்ச்:** இந்தப் போரில் வெற்றி முக்கியமானதா தோல்வி பிரதானமானதா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை! என் பெரியப்பாவின் பிள்ளைகள் எதிரே எதிரிகளாக நிற்கிறார்கள். இவர்களைக் கொல்லாமல் எங்களுக்கு வாழ்வேயில்லை என்பதனையும் அறிவேன்! அவர்களைக் கொன்றபின் எங்களுக்கு நிம்மதிதான் எப்படிக் கிடைக்கப் போகிறது? அவர்கள் எங்கள் சகோதரர்கள் அல்லவா?

**கிருஷ்:** ஆமாம்-நிச்சயமாக சகோதரர்கள்தான்!

**அர்ச்:** அதனைமட்டும்தான் தாங்கள் கூற முடியுமா?

**கிருஷ்:** உன் வினாவுக்கே விடை அளித்தேன்! ஆனால் இந்த யுத்தம் உறவு முறைகளை உணர்வதற்கோ உறுதிப்படுத்துவதற்கோ உரியதல்லவே! பார்த்தா! உனது கடமைகளை உணர்ந்து தீர்மானத்துக்கு வரவேண்டியவன் நீயேதான். நீ எடுக்கவேண்டிய தீர்மானத்தை நானே எடுக்கலாம்! அவ்வாறானால் போரின் பொறுப்புகளிலிருந்து நீ பாதுகாக்கப் படலாம் என்று எண்ணிவிடாதே! இது உனது யுத்தம். இதன் விளைவுகளும் உன்னைச் சார்ந்தவையே!

**அர்ச்:** கேசவா! கடமையின் பாதை எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை. தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இடை நடுவில் நான் நிற்பதை உணர்கிறேன். தர்மமும் அதர்மமும் எந்தெந்தப் பக்கம் உள்ளன என்பதனை நான் அறியமாட்டேன். என் தேரினைச் செலுத்துவதுபோல, எனக்குரிய ஆத்மாவின் பாதையையும் எனக்கு நீயேதான் காட்டி அருள வேண்டும்! என் உணர்வின் ஊற்றுக் கண்களையே வற்ற வைக்கும் இந்தத் துயரக் கடலிலிருந்து கை தூக்கி விடவேண்டியவன் நீயே கேசவா! கோவிந்தா! இத்தகைய மனோ நிலையில் நான் போரிடமாட்டேன்!

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை- மன்னனுடன் சஞ்சயன்.

**சஞ்ச:** "நான் போரிட மாட்டேன்" என்று கூறிய அர்ச்சுனன் அமைதியாக நிற்கிறான் மன்னவா!

**திருத:** சஞ்சயா! உண்மையில் அர்ச்சுனன் அடிப்படைக் கேள்வியினையே எழுப்பியுள்ளான். பிதாமகருடனும் ஆச்சாரியார்மாருடனும் அவனால் எப்படிப் போர் பொருத முடியும்? வீரர்களின் பண்பிலும் சில விசேஷ அம்சங்கள் இருக்கின்றனவே!

**சஞ்ச:** நான் வீரனல்லவே...! என்னால் என்ன கூற முடியும்?

**திருத:** வீரனாக இல்லாவிட்டாலும் பொதுவாக எண்ணிப் பார்! அர்ச்சுனன் கூறுவதிலிருந்து, அவர்கள் இந்திரப்பிரஸ்தத்தைத் தருமாறு கோர மாட்டார்கள் என்றே தெரிகிறது. துரியோதனனின் பிடிவாதமும் தளரலாம். பாண்டவர்களுக்கு ஐந்து கிராமங்களை அளிக்க அவனும் முன்வரலாம். சஞ்சயா! நீயே பார்! யுத்தமே நடைபெறாது! அர்ச்சுனன் ஆயுதம் ஏந்தாவிட்டால் வேறு யார்தான் போரிடப் போகிறார்கள்? அவன் எழுப்புகின்ற வினாக்களுக்கு ஏற்ற விடையளிக்க அந்த நந்த கோபனாலேயே முடியாதே! அந்த வாசுதேவன் என்ன சொல்கிறான் என்று பார்த்துக்கூறு...!

**சஞ்ச:** கிருஷ்ணன் அர்ச்சுனனைப் பார்த்து சிரிக்கிறார்...!

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்-

**கிருஷ்:** அர்ச்சுனா! நீ அறிவாளி! அறிவாளிகள் கடந்த காலத்தைப் பற்றியோ மாண்டு மடிந்தவர்கள் பற்றியோ அல்லது வாழ்ந்து கொண்டிருப்பவர்களைப் பற்றியோ கவலையில் ஆழ்ந்துவிட மாட்டார்கள். இறந்த காலத்தைப் பற்றியோ இனிமேல் நடைபெறப்போகும் சம்பவங்களை நினைந்தோ அவர்கள் துயரடைவதில்லை. நீயோ இன்று ஒரு மூடனைப்போல் பேசுகிறாய்! நீ யாருக்காகக் கவலைப்படுகிறாயோ அவர்கள் அவ்வாறு கவலைப்படுவதற்கு ஏற்றவர்கள்தானா என்பதை எண்ணிப்பார்!

**அர்ச்:** பிதாமகரோ குருதேவர்களோ மாண்டு போக நேர்ந்தால் அவர்களைப் பற்றிக் கவலைப்படுவதற்கு அவர்கள் லாயக்கற்றவர்களா கேசவா?

**கிருஷ்:** தற்காலிகமான உடல் அழிவதற்கு கவலைப்படலாமா? சாசுவதமற்ற இந்த உடலுக்காக வருந்துவதாகாது. ஆனால் ஆத்மாவின் பயணம் தொடரவேண்டியது. இறப்பானது உடலுக்கே அன்றி ஆத்மாவுக்கானதல்ல என்பதை உணர்ந்துகொள் அர்ச்சுனா! குழந்தை பிறக்கிறது; இளமைப் பருவமடைகிறது; பிறகு மூப்படைகிறது; இறக்கிறது. இது உடலுக்குரிய பயணமே தவிர உயிருக்குரியதல்ல.

ஆத்மா தன் நீண்ட பயணத்தில் அவ்வப்போது வெவ்வேறு உடல்களில் புகுந்து விடுகிறது. பழைய சட்டையை கழற்றி வீசிவிட்டு புதிய சட்டையைப் போடுவது போல, உயிர் காலத்துக்குக் காலம் சடலங்களை எடுக்கிறது. அழிவு ஆத்மாவைத் தீண்ட முடியாதிருக்கும்போது எதற்காக நிரந்தரமற்ற உடலின் அழிவுக்காக வருந்துகிறாய்?

**அர்ச்:** அதோ! எம் முன் பிரத்தியட்சமாகத் தோன்றுபவரெல்லாம் யார்? யுத்தம் முடிந்த பின்னரும் அவர்கள் உயிருடன்தான் இருப்பார்களா கேசவா?

**கிருஷ்:** பார்த்தா! நீயோ, இங்குள்ள ஏனையோரோ அல்லது நானோ என்றுமே இல்லாமலிருந்ததில்லை; இனிமேலும் இல்லாதொழிந்து போகப் போவதுமில்லை. அவ்வாறிருக்கும்போது இப்போதுள்ளதே நிலையானது என்ற மாயத் தோற்றம் உனக்கேன் தோன்ற வேண்டும்? நாம் இருந்தோம்! இருக்கின்றோம்! இனிமேலும் இருக்கத்தான் போகின்றோம்! வாழ்க்கையில் மகிழ்ச்சியும் துக்கமும் பருவ காலங்கள்போல் வரும் -போகும்! அநித்யமான எதனையும் நித்தியமானவை என்று கருதிக் கவலை கொள்ளலாகாது.

பிறப்பவர்கள் எவரும் இறந்துதானாக வேண்டும்! ஆகவே, கொலை செய்தல், கொல்லப்படுதல் பற்றியெல்லாம் மனத்தை அலையவிடக் கூடாது. ஆன்மா என்றும் சீவிக்கிறது. உடல் அழிந்தாலும் உயிர் அழிவதில்லை; அதனை எந்த ஆயுதத்தாலும் அழிக்க முடியாது; தீயால் சுட்டெரிக்க முடியாது; நீரால் ஆன்மாவை அமிழ்த்தி ஒழித்துக்கட்ட முடியாது; காற்றும் அதனைக் கவர முடியாது.

அர்ச்சுனன் இத்தனையையும் கேட்டும் திருப்திப்படவில்லை!

**கிருஷ்:** பார்த்தா! இன்னும் என்ன கவலை உனக்கு...?

**அர்ச்:** அதோ வெண்ணுடையில் நிற்கும் அந்த வயோதிபர், அழுக்கேறிய என் உடைகளையும் பொருட்படுத்தாமல் என்னை எடுத்து அணைத்தாரே! தன் கையை என் தலைமேல் வைத்து ஆசீர்வதித்தாரே! அவர் ஓர் ஆன்மாவின் வெறும் ஆடைதானா? எனக்கு அரிய வித்தைகளைப் புகட்டினாரே அந்த குருநாதரும் அவரில் புகுந்துள்ள ஆத்மாவின் வெறும் கூடுதானா? ஆன்மா சாஸ்வதமானது என்பதை அறிகிறேன். அதற்கு அழிவில்லை என்பதனையும் அறிகிறேன். ஆனால் அந்த உடல்கள் எனக்கு உறவில்லையா? அவற்றுடன் எனக்கு உரிமை எதுவுமே இல்லையா ஜனார்த்தனா?

**கிருஷ்:** தொடர்பு இருக்கலாம்! உறவும் இருக்கலாம். பிறக்கும் அன்றே இறப்பும் நிச்சயமானபின் அந்த அழியும் ஒன்றுக்காக வருந்துவதில் என்ன பயன்? நீயோ நானோ, தான் நினைத்த போதில் தன் சாவினை அணைக்கும் வரம் பெற்ற பீஷ்மரோ இப்பூமியில் பிறந்தமையினால் என்றோ ஒருநாள் இறக்க வேண்டியவர்களே! உன் எதிரே நிற்பவர்கள் இதற்கு முன்னேயும் பிறந்தவர்கள்; மீண்டும் பிறக்கப்போகிறவர்கள். ஆனால் யார் யார் எவரெவராக முன்பு பிறந்து வாழ்ந்தனர்- வாழப்போகின்றனர் என்பது எவருக்குமே தெரியாது. ஆகவே தற்காலிகமான ஒன்று அழிவதற்காக ஏன் வருந்தவேண்டும்?

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை.

**திருத:** சஞ்சயா! தேவகி நந்தன் என் மகன் அர்ச்சுனனுக்கு எதையாவது புரிய வைக்கிறானா அல்லது அவனைப் பயமுறுத்துகிறானா? அர்ச்சுனன் கிருஷ்ணனுடைய தூண்டுதலினால், அவனிடமுள்ள தெய்வீக அஸ்திரங்களைக்கொண்டு என் புத்திரர்களைத் தாக்க முற்படுவானா?

**சஞ்ச:** இக் கேள்விக்கு பதிலளிக்க என்னால் முடியாதே! அந்த தேவகி மைந்தன் அல்லது குந்தி மைந்தனால்தான் முடியும்!

**திருத:** அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று கவனமாகக் கேட்டுச் சொல் சஞ்சயா...!

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்.

**கிருஷ்:** இதில் வியப்படைவதற்கு எதுவுமேயில்லை பார்த்தா! கிழிந்துபோன ஆடை போன்றதே அழியப் போகும் இந்த உடல். இதுதான் உண்மை. இதற்காக வருந்தலாமா? மனித உடலும் உயிரும் நிலையற்றும் நிலையானதுமான ஒன்றின் கலவையல்ல. ஆன்மாவின் தற்காலிக உறைவிடமே இந்த உடல். வருந்துவதை விடுத்து சத்திரிய வீரனான நீ உன் கடமையைச் செய்! இதோ தர்மத்துக்கு எதிராக அதர்மம் ஆயுத பாணியாக ஆர்ப்பரித்தெழுந்து நிற்கிறது. தர்மத்தை காத்து நிலை நிறுத்த வேண்டியதே சத்திரியனின் கடமை!

**அர்ச்:** கேசவா! என்னுடைய கடமைதான் என்ன என்பதை உன்னிடம் அறியவே இங்கு தங்களை அழைத்துவந்தேன்!

**கிருஷ்:** பார்த்தா! நீ யார்?

**அர்ச்:** அர்ச்சுனன்-துரோணாச்சாரியாரின் சீடன்!

**கிருஷ்:** அதைவிட வேறு அடையாளங்கள்...?

**அர்ச்:** நான் குந்தி மகாராணியின் மைந்தன்!

**கிருஷ்:** அவ்வளவுதானா?

**அர்ச்:** நான் ஒரு சத்திரிய வீரன்!

**கிருஷ்:** நீ ஒரு சத்திரியனாக இல்லாவிட்டால் நீ துரோணரின் சீடனாகவோ, குந்தியின் மைந்தனாகவோ இருக்கும் யோக்கியதாம்சங்களை இழந்திருப்பாய்! ஆகவே சத்திரியனாகிய நீ சத்திரிய தர்மத்தைப் பேண வேண்டியவன்! அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதும், அநீதியை ஒழித்து நீதியை நிலைபெறச் செய்வதும் சத்திரியனாகிய உனது கடமை! ஆகவே, பொய்மைக்கு எதிராகப் போர் புரிந்து உண்மையை நிலை நிறுத்த வேண்டிய இக்கால கட்டத்தில் உன் கடமையிலிருந்து நீ தவறுவாயானால் உன் பெருமையையும் புகழையும் சீரழித்துவிடுவாய்! உன்னுடைய எதிரிகள் மட்டுமல்ல, உனது பரம்பரை முழுவதுமே உன்னைக் கேவலப்படுத்தும். வருங்கால சமுதாயம் உன்னைக் கோழை என்றும் பாவவாளி என்றும் தூற்றும். ஆகவே பார்த்தனே! வெற்றி தோல்வி பற்றியோ, இன்ப துன்பம் பற்றியோ, வாழ்வு- சாவு பற்றியோ உன் சிந்தையைப் போட்டு சிதறடிக்காமல் உன் கடமையாகிய யுத்தத்தைத் தொடங்கு! இக்கடமையில் நீ வெற்றி பெற்றால் இந்த வையகத்தையே நீ ஆட்சி புரிவாய்-சொர்க்க வாசல் உனக்காகத் திறந்திருக்கும்! இன்பம்-துன்பம், வெற்றி- தோல்வி, லாபம்- நட்டம் ஆகிய எதனையும் பொருட்படுத்தாமல் பார்த்தனே எழு! உன் கடமை-மனுக்குல தர்மம் உன்னை அழைக்கிறது-புறப்படு போரிட...!

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


அருள் ஜுவலர்ஸ்
436331
வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

படத்தில் இருப்பவர் பெயர் ஹோகன். மல்யுத்தத்தில் அன்னார் ஒரு சூரர். உலகெங்கும் ஏராளம் இரசிகர்கள். அதில் பாதிக்குமேல் இரசிகைகள்.

ஹோகனது பிரபலத்தைப் பார்த்துவிட்டு படங்களில் நடிக்க வைத்துவிட்டார்கள். 'தண்டர் இன் பரடைஸ்' என்னும் படம் ரி.என்.எல். தொலைக்காட்சியில் காண்பிக்கப் படுகிறது. அதில் இந்த ஹோகனைக் காணலாம்.

# வா-மோதலாம்!




Kala
JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
433686
61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11

பல வண்டிகள் சக வாகனங்களைக் கொண்டுவரும், பயிர் உயிர்களுக்கு மரண ஆபத்தாக மாறுவதும் அதிகரித்து வருகிறது. மாளிகைவேசெயில் இருந்து மட்டக்களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த பஸ் வண்டி ஒன்றுக்கு டிரக்டரைக் கண்டவுடன் காதல் வந்துவிட்டது. அதன் விளைவுதான் படத்தில் இருக்கும் காட்சி. டிரக்டர் சாரதி சின்ன தலை நேரம் சிறு காயங்களோடு தப்பிவிட்டார். பஸ் வண்டிக்கும் ஏழு பேருக்கு காயம்.

# தாவினால் தாங்குமோ?



பவுலா நியூபி ஃபிரஸ்ரெர். தங்கப் பதக்கங்களை தாங்கு தடலை வாரி எடுத்துக்கொண்டவர்.
1991ம் ஆண்டில் 'இரும்புப் பெண்' என்ற பட்டத்தை வென்றார்.
பவுலா சிம்பாபேயைச் சேர்ந்தவர். நீச்சல், சைக்கிள் ஓடுதல், ஓட்டம் என்று பல துறைகளில் தேர்ச்சி பெற்ற பெண்.
இரும்புப் பெண் பட்டம் பெறுவது சாதாரண காரியமல்ல. ஒரே நாளில் 3.8 கிலோ மீற்றர் நீச்சல்,
அடுத்து 180 கிலோ மீற்றர்
சைக்கிள் ஓட்டம்

வெளிநாடுகளில் குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள் மாதிரியே பாவனை உபகரணங்களும் வந்து விட்டன. படத்தில் இருக்கும் சிறு பிரகாசம் குழந்தை நம்மூர்க்காரர்களான சிறிகாந்த் விரச் ராசா (உலக சாதனை வீரர்) தம்பதிகளுக்கு பிறந்த பிரான்சில் பிறந்தவர். அருகில் சிவப்பாக இருப்பது விளையாட்டுச் சைக்கிள் அல்ல. உண்மையான தொலைபேசி. விரைவில் தம் நாட்டுக்கும் வரும்.




# -தருவது- வியோ டெ

# நில்லாதே ஓடு!



அப்படியே தொடர்ந்து 42.195 கிலோ மீற்றர் தூரம் மரதன் ஓட்டம்.
ஓய்வே இல்லாமல் மூன்று போட்டிகளையும் 9 மணி நேரமும் 56 செக்கனிலும் கடந்து வந்து சாதனை படைத்தார் பவுலா.
ஆண்களில் இரும்பு ஆண் பட்டத்தைப் பெற்றவர் மூன்று போட்டிகளிலும் கடந்த நேரம்
8 மணி நிமிடமும் 33 செக்கன்.

# உச்சகட்ட ஆட்டம் எப்போது?




இந்திய கிரிக்கெட் வீரர்களில் இரசிகர்களையும் இரசிகைகளையும் கவர்ந்திழுக்கும் வீரர்களில் ஒருவர் மனோஜ் பிரபாகர்.
சென்ற ஆண்டு பிரபாகருக்கு கெட்ட காலம் சரியாக ஆடவில்லை என்று இரசிகர்கள் குறை கூறினார்கள். கிரிக்கெட் சபையின் தண்டனை வேறு அவரை சங்கடப்படுத்தியது.
பந்துவீச்சு, துடுப்பாட்டம், பந்து தடுப்பு என்று சகல துறைகளிலும் பிரகாசிக்கும் பிரபாகருக்கு என்ன நடந்துவிட்டது? இரசிகர்களின் கேள்வி இது.
"இந்த ஆண்டு பெயர் சொல்லும்படி மீண்டும் பிரகாசிப்பேன்" என்கிறார் பிரபாகர்.
மேற்கிந்திய தீவு வீரர் பிரைன் லாரா மனோஜ் பிரபாகரை புகழ்ந்துள்ளார்.
"நீங்கள் மிகவும் தைரியசாலி. நீங்கள் விளையாடிய இன்னிங்ஸையெல்லாம் நாங்கள் என்றும் நினைவில் வைத்திருப்போம்." என்று கூறியுள்ளார் பிரைன் லாரா.
விரைவில் தனது மூக்குக்கு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்யப்போகிறார் மனோஜ் பிரபாகர்.
மீண்டும் பிரபாகரின் உச்சகட்ட ஆட்டத்தைக் கண்டு மெய் மறக்க காத்திருக்கிறார்கள் அவரது இரசிக இரசிகைகள்.